

பசும்பொன் மாவட்டத்தில் கல்கி—I
கல்கி
KALKI
23.8.87
ரூ. 1.50
கனிமத் தொழிற்சாலைக்குப்
போராடும் கிராமங்கள்!
இந்தப்
பெண்ணின்
சோகக் கதை...

இரண்டு காப்பி-
சிக்கரி கலவைகள்





ஒரு சாதாரண
இன்ஸ்டன்ட் கலவை
கலவை: 70% காப்பி 30% சிக்கரி

Nestlé
ஸன்ரைஸ்
கலவை: 80% காப்பி 20% சிக்கரி

ஒன்றில் அதிக காப்பி

காப்பியும் சிக்கரியும் சரியான விகிதத்தில் கலப்பதைப் பொறுத்தே நல்ல இன்ஸ்டன்ட் காப்பி சிக்கரி அமைகிறது. சிக்கரி அதிகமானால் கசப்பாக இருக்கும். அதனால்தான் ஸன்ரைஸ் தரும் கூடுதல் காப்பி சுவையும் ஸ்ட்ராங்கும் உங்களுக்கு சிறப்பாகத் தெரிகிறது. ஏனெனில், ஸன்ரைஸில் காப்பியும் சிக்கரியும் 80:20 என்ற விகிதத்தில் கலந்திருக்கிறது. சாதாரண இன்ஸ்டன்ட் கலவைகளிலோ 70:30 என்ற விகிதம். அப்படியானால், ஒவ்வொரு கிராம் ஸன்ரைஸிலும் 14% கூடுதல் காப்பி, எனவே குறைந்த கசப்பு.

நாங்கள் சொல்வதை நம்புவதைவிட நீங்களே சுவைத்துப் பாருங்கள்.



Nestlé
ஸன்ரைஸ்
இன்ஸ்டன்ட் காப்பி-சிக்கரி கலவை

கூடுதலான காப்பி கலவை

HTA-5118C TAM

தாலாட்டிலும் விழிப்புணர்ச்சி!



தாலாட்டுப் பாடுகிறேன் என்று ஆரம்பித்துக் குருவாயூரப்பனைத் தொட்டிலி விட்டு ஆட்டத் தொடங்கிவிட்டார் சந்தானம்! நமக்கோ ஒரே கவலை. பக்கத்தில் பத்மநாபசுவாமி வேறு சயனித்திருக்கிறார். இவரும் தூங்க ஆரம்பித்து விட்டால்? அதிலும் பிரதமருக்காக விசேஷப் பிரார்த்தனைகள் வேறு குருவாயூரப்பனுக்குக் கியூ வரிசையை உடைத்துக் கொண்டு நடைபெறும் போது, பகவான் உறங்கினால் நாட்டின் கதி என்ன ஆவது? இந்தக் கவலையுடன் கூடவே ஒரு நிம்மதி! அந்தப் பாடலின் நயத்திலும் சந்தானத்தின் இசை ஆற்றலிலும் கவரப்பட்ட நாம், ஒரு சின்ன சங்கதியைக் கூட விட்டுவிட மனமில்லாமல் உன்னிப்பாகக் கவனிப்பது போல்தானே குருவாயூரப்பனும் கவனிப்பான்! அதனால் தூங்க மாட்டான் என்ற நம்பிக்கை! இவ்வாறு நீலாம்பரி பாடியே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகிறவர் சந்தானம்!

அன்று கச்சேரியின் போது என் அருகில் அமர்ந்திருந்த நண்பர், பாதிக் கச்சேரி முடிந்ததும் ''அவசர ஜோலி இருக்கிறது'' என்று புறப்பட்டார். அதற்குள் சந்தானம் அடுத்த பாடலை ஆரம்பிக்கவும் ''இதைக் கேட்காமல் எப்படிப் போவது?'' என்று அமர்ந்து விட்டார்! மறுபடி கிளம்பியவர், காம்போதி ராக ஆலாபனை ஆரம்பமாகவும் மீண்டும் அமர்ந்து கொண்டார்! இப்படியே செய்து, கடைசி வரை இருந்துவிட்டுத்தான் போனார். அவருடைய அவசர ஜோலி என்ன ஆயிற்றோ, பாவம்! சந்தானமே பொறுப்பு!

எப்பேற்பட்ட அவசரக் காரியமானாலும், ஞாயிற்றுக்கிழமை டி. வி. யில் நல்ல சினிமாவே காட்டினாலும், அதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ரசிகர்கள் வர, கிருஷ்ணகான சபை நிறைந்து வழிகிறது என்றால் அதற்குச் சந்தானத்தின் கலை ஆற்றல் ஒரு காரணம்; மற்றொரு காரணம், அவர் எதிர்பாராத ஆச்சரியங்களை வழங்குவதுதான்! ஆகஸ்டு 9 ஆம் தேதி கச்சேரியில் இதுவரை நாம் கேட்டறியாத மூன்று நான்கு அற்புதமான பாடல்களைப் பாடி, நம் மனம் கவர்ந்தார். தமிழ், தெலுங்கு மட்டுமின்றி மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், ஹிந்தி என்று பல மொழிகளில் பாடி ஒரு தேசிய ஒருமைப்பாடு நிகழ்ச்சியே நடத்திவிட்டார்! பாதிக்கு மேல் தமிழ் என்பது கூடுதல் கவர்ச்சி. தோடி, கல்யாணி, கரகரப்பிரியா, காம்போதி, ஷண்முகப்ரியா போன்ற கன ராகங்கள் மட்டுமின்றி, அவரிடம் எதிர்பார்க்கப்படுகின்ற ரேவதி, சாரங்கா, ஸாமந்தி, ஜனஸம்மோதினி, யமன் கல்யாண், பூப்போன்ற ராகங்களிலும் பாடல்களை வழங்கினார்..


எல்லாமாகச் சேர்ந்து கச்சேரி ஒரே கலகலப்பாகி, மனம் கிளுகிளுப்பாகி, ''முடிக்கலாமா?'' என்று சந்தானம் கேட்டபோதுதான் மணி ஒன்பதாகி விட்டது புரிந்தது. ஆனபோதிலும் காரியதரிசி யக்ஞராமன் மனமின்றித்தான் தலையாட்டி அனுமதி அளித்தார். அப்போது பார்த்து, ''சுட்டும் விழி'' என்று ஒரு ரசிகர் பலவீனமான குரல் (நேரமாகி விட்டதால்) எழுப்ப, அதையும் பாடினார் சந்தானம். அதைக் கேட்டபோது, 'சந்தானம் ஜீவ களையுடன் பாடி உயிரூட்டுவதற்காகவே பாரதி இந்த அழகிய சொற்சித்திரத்தைப் படைத்தானோ?' என்றுதான் நினைக்கத் தோன்றியது!

— குட்டி கிருஷ்ணன்

கனிமத் தொழிற்சாலைக்குப் போராடும் கிராமங்கள்...



• சிவகங்கை அருகில் உள்ள கிராபைட் சுரங்கம்



• கிராபைட் கனிமம்



• கிராபைட் சுரங்கத்திற்குச் செல்லும் நுழைவாயில்

"எங்களுக்குப் பயமா இருக்குங்க..." என்றார் நம்மைச் சந்தித்த பசும்பொன் மாவட்ட கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் துணைச் செயலாளர் அய்யாதுரை.

"எதற்காகப் பயப்பட வேண்டும்?" — நாம் ஆச்சரியத்தோடு அவரைக் கேட்டோம்.

"பின்னே என்னங்க? அதோ இதோங்களுங்க... ஒண்ணுமே நடக்கலீங்களே.... எப்படீங்க பயப்படாம இருக்க முடியும்?"

"தயவு பண்ணி புரியும்படியாச் சொல்லுங்க..."

"தொழிற்சாலைங்க. கிராபைட் தொழிற்சாலை. அதுதான் வராமலே போயிடுமோன்னு பயமா இருக்கு. நான் ஆரம்பத்திலேர்ந்தே சொல்றேன். அப்பத்தான் புரியும். கடந்த 60 வது வருஷத்தில, சிவகங்கையிலேர்ந்து மேலூர் போற ரோட்ல இருக்கிற கோமாளிப்பட்டி, குமாரப்பட்டி, உடையநாதபுரம், புதுப்பட்டி, மீனாட்சிபுரம், காராம்பு ஓடை.... இப்படிப் பல கிராமங்கள்லேயும் ஒரு புதுமாதிரியான கல்லு இருக்கிறதைப் பார்த்தோம். கையில எடுத்துத் தேய்ச்சுப் பார்த்தப்போ கையெல்லாம் மின்ன ஆரம்பிச்சுது! அதிசயமா இருக்கேன்னு சேம்பிள் கல் எடுத்துக்கிட்டுப் போயி அரசாங்கத்துல காண்பிச்சோம். 80 வரைக்கும் ஆராய்ச்சி



● அய்யாதுரை

பண்ணிணுங்க.

"'கடைசில அது உலகத்திலேயே சிறந்த — அபூர்வமான கிராபைட் கல்லுன்னும் அது இந்தப் பகுதியில ஏராளமாக் கிடைக்குதுன்னும் கண்டுபிடிச்சாங்க. 84 வாக்கில தமிழ்நாடு கனிம நிறுவனம் அந்தப் பகுதில சுமார் ஆயிரம் ஏக்கரானவை ஆர்ஜிதம் பண்ணித் தோண்ட ஆரம்பிச்சாங்க. எப்படியும் தொழிற்சாலை வந்திடும். அதுல நமக்கெல்லாம் வேலை கிடைக்கும்கிற நம்பிக்கைல, நாங்களும் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய்ன்னு கொடுத்த நஷ்ட ஈட்டுத் தொகையை வாங்கிக்கிட்டோம். ஆனா இன்னைக்கு வரைக்கும் தொழிற்சாலை வரும்கிற நம்பிக்கையே இல்லீங்க.

"அதனாலதான், நஷ்ட ஈட்டுத் தொகையாவது அதிகமாக் கிடைக்கட்டுமேன்னு சிலர் கோர்ட்டுக்குப் போனாங்க. கோர்ட்டுல ஏக்கருக்கு மேலும் ஐம்பது ரூபாய் குடுக்கணும்னு தீர்ப்பாயிடுச்சு. அப்படியும் கனிம நிறுவனம் கொடுக்கலே. அதுக்கும் ஸ்டே ஆர்டர் வாங்கிடுச்சு. சரி, இதெல்லாம் கிடக்கட்டும், எப்படியாவது தொழிற்சாலை வந்திடுச்சின்னாப் போதும்ங்க. ஆனா அரசாங்கம் பண்ற டிலேவைப் பார்த்தா, காரைக்குடிக்குப் பக்கத்திலிருக்கிற 'தமிழ்நாடு கெமிகல்ஸ்'ங்கிற லாபம் தர்ற தொழிற்சாலையைத் தனியாருக்கு வித்திட்ட மாதிரி, இதையும் ஏதாவது பண்ணிடுவாங்களோன்னு பயமா இருக்குங்க..."

— இப்படி அய்யாதுரை மட்டும் சொல்லவில்லை. கிராபைட் சுரங்கத்திற்காக நிலங்களைக் கொடுத்த கிராமங்களில் ஒன்றான கோமாளிப்பட்டிக்குச் சென்ற போது, அந்த மக்களும் இதையேதான் சொன்னார்கள். ஏராளமான முறை அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லியும் பயனில்லை என்றார்கள்.

உண்மையில், சிவகங்கைக்கு அருகில் கிடைக்கும் கிராபைட் உலகிலேயே சிறந்ததுதான். அகில உலகிலேயே தரமான கிராபைட் கிடைக்கும் இடங்கள் மடகாஸ்கர், இலங்கை, சிவகங்கை ஆகிய மூன்றே இடங்கள்தான். இப்போது மடகாஸ்கரில் கிராபைட்டின் அளவு குறைந்துபோய் விட்டதாலும், இலங்கையிலிருந்து இப்போது அவ்வளவாக கிராபைட் ஏற்றுமதி இல்லை என்பதாலும் இன்றைக்கு உலகச் சந்தையில் கிராபைட்டுக்கு ஏகக் கிராக்கி.

இத்தனை கிராக்கிக்கும் காரணம், கிராபைட் அதாவது கார்பன் என்பது வெறும் பென்சில், பெயிண்ட், பேட்டரி செல்கள் போன்றவற்றை மட்டும் தயாரிக்க உதவவில்லை. கிராபைட் என்ற இந்தக் கனிமப் பொருள் மூவாயிரம் டிகிரி சென்டிகிரேட் வெப்ப நிலையையும் தாங்கும் என்பதால் சாதாரண விமானங்களிலிருந்து, உயர்ரகப் போர் விமானங்கள் தயாரிக்கும் தொழில் வரை அத்தியாவசியமானதொரு பொருளாக இருக்கிறது. கிடைப்பதும் அரிது என்பதால் கிராக்கிக்குச் சொல்லவே தேவையில்லை.

அதனால்தான், தமிழ்நாட்டில் கிராபைட் தொழிற்சாலை ஆரம்பித்தால், கிடைக்கும் கிராபைட் படிமங்களிலிருந்து தொண்ணூற்றியெட்டு சதவிகிதம் வரை சுத்திகரிக்கும் தொழில் நுட்பங்களைத் தருவதற்கும், விமானங்களின் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் நிறுவுவதற்கும் மேற்கு ஜெர்மனியும், உலகப் புகழ் பெற்ற போர் விமானங்களைத் தயாரிக்கும் மெக் டொனால்டு டக்லஸ் நிறுவனம் மற்றும் சாதாரணப் பயணிகள் விமானங்களைத் தயாரிக்கும் எம். பி. பி. நிறுவனங்களும் தயாராய் இருக்கின்றன. இதனால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். இப்படிப்பட்டதோர் சூழ்நிலையில் கிராபைட் தொழிற்சாலை அமைப்பதில் அரசாங்கம் மெத்தனமாக இருப்பதேன்? தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சேர்மனும், மானேஜிங் டைரக்டருமான டாக்டர் சரவணனைச் சந்தித்துக் கேட்டோம்:

"தமிழக அரசைப் பொறுத்த வரை தாமதமே இல்லை. மத்திய அரசில்தான் தாமதம். அதுவும் இப்போது விரைவாக இயங்கிக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் மத்திய அரசிடமிருந்தும் அனுமதி கிடைத்துவிடும். கிடைத்தவுடன் உடனடியாகச் சுமார் நாற்பது கோடி ரூபாய் செலவில் கிராபைட் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுக் குறைந்தபட்சம் ஆயிரத்தைந்நூறு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். யாரும் தொழிற்சாலை அமையாமல் போய்விடுமோ என்று பயப்பட வேண்டிய அவசியமே இல்லை!" என்றார் டாக்டர் சரவணன்.

சிவகங்கைப் பகுதியில், சுமார் ஒன்றரைக் கோடி டன் எடையுள்ள கிராபைட் புதைந்து கிடக்கிறது என்பது தமிழகத்திற்கு இயற்கை அன்னை அளித்திருக்கும் அமுத சுரபி என்பதில் சந்தேகமே இல்லை. அதுவும் சுமார் மூன்றடி தோண்டினாலே கிராபைட் படிமங்கள் கிடைப்பது பேரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்நிலையில் கிராபைட் சுத்திகரிப்புத் தொழிற்சாலையும் அதன் உபயோகத்தில் இயங்கும் மற்ற தொழிற்சாலைகளும் அமையாவிட்டால் நாம் நமது அரசாங்கத்தை ஒரு போதும் மன்னிக்கவே முடியாது.

— பிரின்ஸ்

அன்பு காட்டும் போலீஸ்; திருந்தி வாழும் மக்கள்!

முந்தைய நாள் இரவில் கடலில் மீன் பிடித்து வந்த களைப்புடன் உறங்கிக் கொண்டிருந்தனர் ஆண்கள். அதிகாலை நெருங்கிக் கொண்டிருந்தும் விழிக்காத பெண்கள். ஆக, அந்தக் கடற்கரையோரக் கிராமமான ரெட்டிக்குப்பம் உறங்கிக் கொண்டிருந்தது. அலைகளின் தாலாட்டு சங்கீதமாக ஒலிக்க, பறவைகளின் குரல்கள் மட்டும் ஓங்கியிருந்த அந்த அதிகாலை நேரத்தில், 'சர், சர்'ரென்று வந்து நின்றன போலீஸ் ஜீப்கள்; வேன்கள். விழிப்புத் தட்டிய பெண்கள் போலீஸைப் பார்த்து மிரண்டு போய்க் குடிசைக்குள் பதுங்கி ஆண்களை எழுப்பினர்.

இதற்குள் போலீஸ் வீடு, வீடாகப் புகுந்து, பானைகளில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கள்ளச் சாராய ஊறலை எடுத்து வெளியே கொட்டிவிட்டு, ஆட்களையும் கைது செய்தனர். இரண்டு மணி நேரத்தில் கிராமத்தையே சோதனை செய்து ஆண்களும் பெண்களுமாய் ஐம்பத்திரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

இது நடந்தது 11.4.87 அன்று.

மறுநாள் காலை மதுவிலக்கு அமல் பிரிவின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலெக்ஸாண்டர் அலுவலகத்தில் அமர்ந்திருக்கிறார்.

முதல் நாள் 'ரெய்டு'க்குப் போயிருந்த ரெட்டிக்குப்பம் கிராமத்திலிருந்து சில இளைஞர்கள் வந்திருப்பதாகத் தெரிவிக்கிறார் உதவியாளர். அவர்களை உடனே வரச் சொல்கிறார்.

உள்ளே நுழைந்த இளைஞர்கள் அலெக்ஸாண்டரைப் பார்த்துக் கையெடுத்துக் கூப்பிக்கொண்டு, ''ஸார்! இனிமேல் எங்கள் கிராமத்தில் எந்த நபரையும் கள்ளச் சாராயம் காய்ச்சவோ விற்கவோ விட மாட்டோம்! இது உறுதி!'' என்று சொல்கிறார்கள். ஒரு நிமிஷம் நம்ப முடியாமல் யோசிக்கிறார் டி. ஐ. ஜி.

''நிச்சயமாகவா?'' என்று மறுபடி, மறுபடி கேட்கிறார்.


''ஸார்... நீங்கள் வேண்டுமானால் தொடர்ந்து வந்து பாருங்கள்.''

அலெக்ஸாண்டருக்குக் கொஞ்சம் நம்பிக்கை பிறக்கிறது.

''சரி போயிட்டு வாங்க... பார்க்கலாம்.''

இரண்டு நாட்கள் கழித்து விஸிட் செய்கிறார் அந்தக் கிராமத்துக்கு. கிராமத்துப் பெரியவர்கள் அவரை அலட்சியக் கண்ணோடு பார்க்கிறார்கள். ஒன்றிரண்டு இளைஞர்கள் நெருங்கி வந்து பேசுகிறார்கள்.

அந்தக் கிராமத்திற்குத் தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் செல்லத் துவங்குகிறார். நான்காவது விஸிட்டில் கிராமமே அவர் வசமாகிப் போலீஸும் அக்கிராமத்தின் நண்பனாகிவிடுகிறது. சாராயத்தின் நெடி கிராமத்தைவிட்டு மறைகிறது. பொழுது போக்கக் கால்பந்து கேட்கிறார்கள் இளைஞர்கள்; வாங்கித் தருகிறார் அலெக்ஸாண்டர். இன்னொரு விஸிட்டில் டாக்டர்களைக் கூட்டிக் கொண்டு போய் மக்களுக்கு மெடிகல் செக் — அப் செய்கிறார். மற்றொரு விஸிட்டில் குழந்தைகளுக்கு பன், பிஸ்கட்...!



* லட்சுமி



* சின்ன மதுரை

— இப்படியாகத் தொடரும் அலெக்ஸாண்டரது, பதினெட்டாவது விஸிட்டில் நாமும் கலந்து கொள்கிறோம்.

சென்னை — மகாபலிபுரம் சாலையில், ஈஞ்சம்பாக்கத்தை அடுத்துக் கானத்தூர் என்ற ஊர். அந்த ஊரிலிருந்து இடது பக்கமாகச் செல்கிறது ரோடு. ரோட்டின் கடைசியில், கடற்கரையோரத்தில்

இரண்டாயிரம் மக்கள் வாழும் ரெட்டிக் குப்பம் கிராமம். குழந்தைகள் வரிசையாக அமர்ந்திருக்கக் கிராமத்து மக்கள் அலெக்ஸாண்டரை ஆர்வத்தோடு வரவேற்கின்றனர். ஏற்கெனவே வந்திருந்த டாக்டர்கள் செக் — அப்பிற்குத் தயாராக இருந்தனர். கிராமத்தை ஒரு சுற்றுச் சுற்றக் கிளம்பினோம்.

''கடலில் வெயிலில் உப்புக் காற்றுப் பட்டுப் பல மணி நேரம் இருப்பதால் மிகுந்த களைப்பு ஏற்படுகிறது. அதனால்தான் சாராயத்தை நாடுகிறோம். ஆனா, 'ஐயா' இங்கே வந்துட்டு எங்களுக்குப் பல அறிவுரைகள் கூறிட்டதனாலே இனிமேல் குடிக்க மாட்டோம்'' என்றார் வலை பின்னிக் கொண்டிருந்த சின்ன மதுரை.






* குழந்தைகளுக்கு பன், பிஸ்கட் வழங்குகிறார்கள்...

* ராமச்சந்திரன்



* கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் பணியில் போலீஸாருடன் ஒத்துழைக்கும் இளைஞர்கள்...



* டி.ஐ.ஜி. அலெக்ஸாண்டர்

இளைஞர் மனோகரனைச் சந்தித்த போது, ''எங்க இளைஞர் மன்றத்தில் 78 பேர் இருக்கிறோம். நாங்க யாருமே குடிக்கிறதில்லே. ரொம்ப நாளா நாங்களும்.எங்கள் மக்கள் கிட்டே சொல்லிக்கிட்டேயிருந்தோம். பல தடவை போலீஸ் அவர்களைப் பிடித்தும், சாராயம் காய்ச்சுவதையும் விற்பதையும் அவர்கள் விடுவதாகத் தெரியவில்லை. கடைசியில் 'ஐயா' வந்தப்புறம்தான் ஒரு மாறுதல் ஏற்பட்டது'' என்றார்.

முன்பு சாராயம் காய்ச்சி விற்றுக் கொண்டிருந்த லட்சுமி, ''எனக்கு ரெண்டு குழந்தைங்க. கடலில் மீன் பிடிக்கிற பொழைப்பில் குடும்பம் நடத்த முடியலே. ரொம்பக் கஷ்டத்துல இருந்ததினாலதாங்க சாராயத் தொழில் நடத்தினேன். ஆனா இப்போ திருந்திட்டேங்க. கஷ்டத்தைப் போக்க, கவர்ன்மெண்ட் ஏதாவது செய்தால் நல்லாயிருக்கும்'' என்ற லட்சுமிக்கு ஒரு வருத்தம் — கணவர் ஆறுமுகம் பக்கத்துக்



உமாபதி



ஆறுமுகம்

கிராமங்களான முட்டுக்காடு, கோவளம் ஆகிய இடங்களுக்குப் போய்க் குடித்து விட்டு வருவதுதான். ஆனாலும், "என்னாங்க செய்யறது...? கடல்ல கஷ்டப்படறாங்க. சாப்டாத்தான் களைப்புப் போவுதுங்கறாங்க! நாங்க எப்புடிங்க தடுக்க முடியும்?" என்று ஆற்றாமைப்பட்டார் அவர்.

"நான் தொடர்ந்து குடிச்சவன். திடீர்னு ஒருநாள் கையும் காலும் செயல்படாமப் பூடுச்சு. அப்பத்தான் நிறுத்தினேன். இப்போ 'ஐயா' அலெக்ஸாண்டரால ஊரிலே யாரும் குடிக்கிறதில்லைங்க," — நெகிழ்ச்சியோடு சொன்னார் ராமச்சந்திரன்.

"ஏப்ரல் மாதத்தில் போலீஸ் எங்களைப் பிடிச்சப்போ, குற்றம் செய்யாத சில நல்லவங்களும் மாட்டிக்கிட்டாங்க. அதுதாங்க எங்களுக்குக் கோபம். நாங்க ஏற்கெனவே எச்சரிக்கை பண்ணியும் கேட்காம இருந்தாங்க. நல்லவங்களும் அப்போது மாட்டிக்கிட்டதால் 'இனிமே ஊரில் யாரும் சாராயம் காய்ச்சி விற்கக் கூடாது'ன்னு ஒரு முடிவு எடுத்தோங்க. அதுக்கு போலீஸ் ரொம்ப ஒத்துழைச்சதுங்க" என்றார் உமாபதி என்பவர்.

அலெக்ஸாண்டரிடம் நம் பாராட்டுதல்களைத் தெரிவித்து, அடுத்து அவர் செயல்படுத்தப் போகும் திட்டங்கள் என்ன என்று கேட்டோம்.

"சமூக நல வாரியம் மூலமாகப் பெண்களுக்குத் தையல் மெஷின் கொடுத்துத் தையலும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப் போகிறேன். ரொம்ப வருடங்களாகப் பட்டா கொடுக்காமல் இருக்காங்க. அதுக்கான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறேன். இன்னும் சில பெரியவர்கள் வெளி கிராமங்களுக்குச் சென்று குடிக்கிறார்கள். அவர்களையும் திருத்த வேண்டும். என்னுடைய சர்வீஸில் நான் ஏதாவது பெருமையாகச் சொல்லிக்கணும்னு நினைச்சா இந்த ரெட்டிக்குப்பத்தைத்தாங்க சொல்லணும். என்னுடன் இணைந்து பணியாற்றும் இதர அதிகாரிகளும் ஊழியர்களும் எனக்குக் கொடுத்து வரும் ஒத்துழைப்பால்தான் என்னால் பல நல்ல காரியங்கள் செய்ய முடிகின்றது...!" என்கிறார் அலெக்ஸாண்டர். நாம் நெகிழ்ந்து போகிறோம்!

— ப்ரியன்

படங்கள்: கே.வி. ஆனந்த்

சென்னைக்குத் திரும்பி வரும்போது


"இந்நாளைய ஹோட்டல்கள் எப்படி இருக்கின்றன, தெரியுமா?"

"நேற்றைய 'மெனு'வோடும் நாளைய 'விலை'யோடும் இருக்கின்றன!"

— தோபங்க

நன்றி: பிசினெஸ் இந்தியா






"சார் அர்ஜெண்டா ஒரு அம்பது ரூபா கடன் வேணும்."

"அப்படி என்ன அவசரம்?"

"அதான் எனக்கும் தெரியலே. மூணு வருஷம் முன்பு வாங்கிய பணத்துக்கு அந்த பாலு அவ்வளவு அவசரப்படுத்தறான்!"

— இழை அ. கதிர்வேல்




சுவைத்து மகிழ்ந்து வளர்ச்சி அடைந்திடும் வழி–ஃபாரெக்ஸ்®

குழந்தையின் உயரம் மறறும்* எடையை சோதித்திடுங்கள்	ஆண் குழந்தை எடை (கிலோ)	ஆண் குழந்தை உயரம் (செ.மீ.)	பெண் குழந்தை எடை (கிலோ)	பெண் குழந்தை உயரம் (செ.மீ.)
3 மாதம்	5.2	59.1	4.9	58.4
6 மாதம்	6.7	64.7	6.1	63.7
9 மாதம்	7.3	68.2	6.9	67.0
12 மாதம்	8.4	73.9	7.8	72.5

* இது இந்தியக் குழந்தை மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் வழங்கப்பட்டது.
இது இந்தியக் குழந்தைகளுக்கு மட்டுமே சராசரியாகும். குழந்தையின் வளர்ச்சி உங்கள் டாக்டரின் திருப்திக்கேற்ற வகையில் இருந்தால் போதும்.

வண்ணமய பாப்பா—
பராமரிப்பு வழிகாட்டி
இலவசமாய் பெற்றிட இதை
அனுப்புங்கள் இங்கே:
க்ளிண்டியா லிமிடெட்
(FPD/51) டாக்டர் அன்னி
பெஸண்ட் ரோட், ஒர்லி,
பம்பாய்-400 025..



உங்கள் குழந்தை பரிபூரண அபிவிருத்தியும் வளர்ச்சியும் அடைந்திட போஷாக்கு நிறைந்த ஃபாரெக்ஸ் அளியுங்கள்.

ஃபாரெக்ஸ்®

சுவைத்து மகிழ்ந்து வளர்ச்சி அடைந்திடும் வழி

26/203



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் **85** மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80 G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.





நினைவே ஒரு சங்கீதம்

காணவில்லை: நாயகியைக் கைப்பிடித்தே தீருவேன் என்று ஸ்க்ரீன் முழுக்க ஆரம்பத்தில் சவால் விடும் ராதாரவி, கதையின் பிற்பகுதியில் எங்கே போனார் என்று தெரியவில்லை. கண்டுபிடிப்போர் டைரக்டரிடம் ஒப்படைக்கவும்.

தேவை: திரைக்கதைக்கு நிறைய ஊட்டச்சத்து! பணக்கார ரவிச்சந்திரனின் வளர்ப்பு மகள் ரேகா, போயும் போயும் கிராமத்திற்கு ஹெல்த் இன்ஸ்பெக்டராக வருவது, ஸ்ரீவித்யாவின் பாத்திரம் இந்திய ரயில் போல அடிக்கடி தடம் புரள்வது, க்ளைமாக்ஸுக்காக ராதாவின் மூளை வியாதியை வளர விடுவது போன்ற இன்னபிற குழப்பங்களில் வீக்காகிவிட்ட திரைக்கதைக்குத் தேவை நிறைய ஊட்டச்சத்து.

வாடகைக்கு: தயாராய் இருக்கிறது விஜய்காந்தின் இதயம். ரேகாவிற்காக ரெடி செய்த இடத்தை ராதாவிற்குக் குத்தகைக்குக் கொடுத்துவிட்டு, ரேகாவிற்கு வெறும் திண்ணைதான். ராதா இல்லாமல் போனால் இடம் பூட்டியிருக்குமே தவிர வேறு யாருக்கும் வாடகைக்குக் கிடையாது.

ஏலம்: என்ன தகிடு தத்தம் செய்தாலும் கொஞ்சம் கூட நமக்குச் சிரிப்பை உண்டாக்காத செந்தில்—சரளா ஜோடி மலிவான விலைக்கு ஏலம்.

வாழ்த்துகிறோம்: ஓட்டைக் கூட வீட்டிற்குச் சிறப்பான இசை ஜன்னல்கள் அமைத்த இளையராஜாவையும், காரை உதிர்ந்த சுவர்களுக்கு வண்ணப் பெயிண்ட் அடித்த காமிரா மேன் தினேஷ் பாபுவையும், பாத்திர மறிந்து (?) பிரகாசித்திருக்கும் விஜய்காந்த்—ராதாவையும் வாழ்த்துகிறோம்.

அறிவிப்பு: சூது, பெண் சுகம் என்று அலையும் கவுண்டமணி போன்ற போக்கிரிக் கணவன்மார்களே, நீங்கள் உயிரோடு இருக்கும் போதே விதவைக் கோலம் பூண்டு உங்களைத் திருத்தி விடுவோம், ஜாக்கிரதை! — இப்படிக்கு ஸ்ரீவித்யா போன்ற தைரிய மனைவிகள்.

விடைகொடுக்கிறோம்: ஒவ்வொரு டூரிங் கொட்டகையாக ஆள் தேடி அலையப் போகும் நினைவே ஒரு சங்கீதம் திரைப்படத்திற்குச் சந்தோஷமாய் விடை கொடுக்கிறோம்.

—ஜெயமன்மதன்



கல்கி

1987 ஆகஸ்டு 23
மலர் 46 இதழ் 4
பிரபவ ஆவணி 7



"நான் குற்றமற்றவன்!"

"நமது ஜனநாயகத்தின் மிக உன்னத அமைப்பாகிய இந்த நாடாளுமன்றத்தில் அழுத்தம் திருத்தமாக நான் அறிவிக்கிறேன்: நானோ அல்லது என் குடும்ப அங்கத்தினர்களோ இந்தப் பேரங்களில் பணம் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை!" — பீரங்கிகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்கியது தொடர்பாகக் கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் முகமாகப் பிரதமர் இப்படி மனம் திறந்த பாங்கில் பேசியிருப்பது பலரது நெஞ்சங்களை நெகிழச் செய்திருக்கும். ஏராள மக்களின் அனுதாபங்களை அவர் பெற்றிருப்பார். நாமும் வருத்தப்படுகிறோம். நமது நாட்டின் பிரதமர் இப்படிப் பேச நேர்ந்ததே என்பதற்காகவும், இப்படி அவர் பேச நேர்ந்ததால் நமது தேசத்தின் கௌரவம் பிற நாடுகளின் பார்வையில் எவ்வளவு தாழ்ந்து போயிருக்கும் என்பதை உணர்ந்திருப்பதாலும் மிகவும் விசனிக்கிறோம்.

ஆனால் இந்த வருத்தத்துக்கு அப்பால் நம் ஒவ்வொருவருக்கும் ஜனநாயகக் கடமையும் உண்டு. அந்தக் கடமை உணர்வுதான் பல கேள்விகளை எழுப்புகிறது. ராஜீவ் காந்தி கூறுவது முற்றிலும் உண்மை என்று கொள்வோமானால், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும் தண்டிப்பதிலும் மற்ற எல்லோரையும் விட காங்கிரஸ் கட்சிக்கும் ஆட்சிக்கும் அக்கறை அதிகம் என்று பிரதமர் கூறுவதை ஏற்போமானால், பின்வரும் கேள்விகள் எழுகின்றன:

அந்நியச் செலாவணி குற்றங்களைப் புரிந்த பணமுதலைகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதில் தீவிரமாக இருந்த நிதி அமைச்சர் வி. பி. சிங் ஏன் பாதுகாப்பு அமைச்சராக மாற்றப்பட்டார்? அங்கே நீர்மூழ்கிக் கப்பல் பேரத்தில் ஊழல் நடந்திருப்பதை அறிந்து, அதை விசாரிக்கத் துணிந்த குற்றத்துக்காக ஏன் அவர் பதவி பறிக்கப்பட்டது? பதவி போன பிறகும் ஒரு விசுவாசக் காங்கிரஸ்காரர் என்ற முறையிலும் தேச பக்தர் என்ற அளவிலும் பேசி வந்த அவர், ஏன் காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்டார்? 'அயல் நாட்டு வங்கிகளில் பணம் குவிப்பவர்கள் தேசத்துரோகிகள்' என்றும், 'தேர்தல் சீர்திருத்தங்களைச் செய்து நாட்டின் அரசியலில் லஞ்ச ஊழல் தாண்டவமாடாமல் தூய்மைப்படுத்த வேண்டும்' என்றும் அவர் கூறிவந்தது குற்றமா?

போஃபார்ஸ் பீரங்கிகள் குறைபாடு உள்ளவை என்று ராணுவப் பரிசோதனை





களில் தெரிய வந்த பிறகும் அந்த நிறுவனத்துக்கு ஏன் ஆர்டர் தரப்பட்டது? இந்தப் பேரத்தில் கமிஷன் வழங்கப்பட்டதாக ஸ்வீடிஷ் ரேடியோ சொன்னதை, "முற்றிலும் பொய்" என்று மறுத்து, உண்மையை மூடி மறைக்க இந்திய அரசு முயன்றது ஏன்? ஒப்பந்தத்துக்கு விரோதமாகக் கமிஷன் தரப்பட்டிருப்பதை இனி மூடி மறைக்க முடியாது என்ற நிலை தோன்றிய பிறகும் கூட, இந்திய அரசு, ஏன் போஃபார்ஸ் பீரங்கி ஆர்டரை ரத்து செய்ய மறுக்கிறது?

ஸ்வீடிஷ் ஆடிட் அறிக்கையில் உள்ள கமிஷன் பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல், ஸ்வீடிஷ் அரசால் சென்ஸார் செய்யப்பட்டுள்ளது. ஸ்விஸ் வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாய் இந்தியர்களின் பணம் போடப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இவை தொடர்பாக ஸ்வீடிஷ் அரசும் ஸ்விஸ் அரசும், "எங்களை இந்திய அரசு வற்புறுத்திக் கேட்டால், நாங்கள் கேட்கப்படும் விவரங்களைத் தந்தே ஆக வேண்டும்" என்று கூறியுள்ள போதிலும் ஏன் இந்திய அரசு வற்புறுத்திக் கேட்க மறுக்கிறது?

நாடாளுமன்ற விசாரணைக் குழுவின் அமைப்பு, அதிகாரங்கள் குறித்து, எதிர்க் கட்சிகளுடன் காங்கிரஸ் ஆட்சி ஒத்துழைக்காமல் முட்டுக்கட்டைகளையே போட்டு வருவது ஏன்? இந்த விசாரணையில் நீர்மூழ்கிக் கப்பல் பேரத்தையும் சேர்த்துக் கொள்ள அரசு மறுப்பது ஏன்?

போஃபார்ஸ் ஏஜெண்டாக இந்தியாவில் இயங்கிய வின் சட்டா இந்நாட்டிலிருந்து தப்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டது ஏன்? அவருக்கு அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரகம் உதவியது எதனால்?

அருண்சிங் ராஜினாமாவுக்குக் காரணம் என்ன? போஃபார்ஸ் தூதுக்குழு இந்தியா வர அவசியமில்லை என்று பிரதமர் தடுத்து விட்டது ஏன்?

தமது குடும்ப நண்பர்களான அமிதாப்பும் அஜிதாப்பும் பெரிய பொருளாதாரக் குற்றங்களைப் புரிந்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்த பிறகும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பிரதமர் எதற்காகத் தயங்க வேண்டும்?

இதற்கெல்லாம் விடை கிடைக்காத வரை, வி. பி. சிங் கூறுவது போல, ராஜீவ் காந்தியின் "நான் குற்றமற்றவன்" அறிக்கையானது ஒரு காவல்காரன் "நான் திருடவேயில்லை" என்று கூறுவதற்கு ஒப்பானதுதான். நாட்டின் எல்லைப் புறங்களைப் பாதுகாப்பது மட்டும் பிரதமரின் கடமை அல்ல; பொருளாதாரத் திருடர்கள் இந்நாட்டின் செல்வத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு போகாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் பிரதமருக்கு உண்டு.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

அவசரம்

"ஏன் பானு! அவுங்கள்ளாம் பொண்ணுப் பார்க்க வர்ற நேரமாயிடிச்சே! நீ இன்னும் என்ன பண்ணிக்கிட்டு இருக்கே? கொஞ்சம் சட்டுப்புட்டுன்னு லதாவுக்கு ட்ரஸ் பண்ணி, ஆக வேண்டியதைப் பார்க்கக் கூடாதா?''

சௌந்தர்ராஜன் வீதிக்கும் வாசலுக்குமாய்ப் பரபரத்துக் கொண்டிருந்தார்.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம்!

மாப்பிள்ளை வீட்டார்!

அவிழ்த்துக் கொட்டிய நெல்லிக் காய்களாய் அனைவரும் காருக்குள்ளிருந்து பட்டும் பகட்டுமாய்ச் சிதறி, வீட்டிற்குள்



நுழைய, வாயெல்லாம் பற்களாய் அவர்களை எதிர் கொண்டார் சௌந்தர்ராஜன்.

''வாங்க! வாங்க! எல்லாரும் வாங்க! பிரயாணமெல்லாம் சௌகர்யமா இருந்திச்சா?''

மாப்பிள்ளை தன் வாயில் எதையோ வைத்திருக்க வேண்டும்.

வீட்டிற்குள் நுழைந்து கொண்டே மாப்பிள்ளையின் தந்தைதான் வாயைத் திறந்தார்.

''பிரயாணமெல்லாம் ரொம்பச் சௌகர்யமாத்தான் இருந்திச்சி! சரி! சரி! பொண்ணை வரச் சொல்லுங்க! சட்டுப்புட்டுன்னு பார்த்திட்டு நாங்க உடனே கிளம்பியாகணும். நேரம் இல்லே!''

மாப்பிள்ளை வீட்டாரின் அவசரத்திற்கு ஏற்ப, லதா சில நொடிகளில் காப்பியோடு பனிச்சிட்டாள்.

''என்னப்பா சொல்றே?''

மாப்பிள்ளையின் தந்தை மகனைப் பார்க்க, ஒரு வழியாய் மாப்பிள்ளை தம் வாயைத் திறந்தார்.

'பரவாயில்லப்பா! அறுபது மார்க் குடுக்கலாம்! லிஸ்ட்ல சேர்த்துக்கங்க! அப்புறம்...?'

''கிளம்ப வேண்டியதுதான்...!''

''ம்! ம்! சீக்கிரம்ப்பா! அடுத்தது வண்ணாரப்பேட்டை!''

மாப்பிள்ளையின் வார்த்தைகளைக் கேட்ட சௌந்தர்ராஜனுக்குச் சொரேலென்றது!

உணர்ச்சிகளைப் பக்குவமாய் மறைத்து மௌனமாய்ப் புருவங்களை உயர்த்தினார்.

''என்னங்க சொன்னீங்க? வண்ணாரப் பேட்டையா?''

மாப்பிள்ளையின் தந்தை அதற்குள் எழுந்து நின்று, துண்டைச் சரி செய்து கொண்டே சௌந்தரராஜனைத் துரும்பாய் ஏறிட்டார்.

''ஆமாம் சார்! பையனுக்கு இன்னிக்கு ஒருநாள்தான் லீவு! அதனால் பேசி வச்சிருக்கிற எல்லா இடத்தையும் இன்னைக்கிப் போய்ப்பார்த்திட்டா அப்புறம்வீட்லபோய்ச் சாவகாசமா முடிவு பண்ணிக்கலாமில்லே! உங்க பொண்ணோட சேர்த்து இதுவரைக்கும் அஞ்சு ஆச்சு! இன்னும் லிஸ்ட்ல ஏழு

பொண்ணுங்க இருக்கு!''

மாப்பிள்ளையின் தந்தை ஏக கர்வமாய் ஒரு குட்டிப் பிரசங்கம் அடித்து ஓய்வதற்குள்... ஓங்கி அவர் மனத்தில் ஒரு குத்து விட்டார் சௌந்தரராஜன்!

அவருக்கு வந்த வேகம் கொஞ்ச நஞ்சமல்ல!

''சரி, சரி! பொண்ணுப் பார்த்திட்டீங்கல்லே! சீக்கிரம் இடத்தைக் காலி பண்ணுங்க! எங்களுக்கும் நேரமாகுது! நீங்க இருக்கும் போதே அடுத்த மாப்பிள்ளையும் உள்ளே நுழைஞ்சிடப் போருரு!''

''என்னது...!''

சட்டென்று வியர்த்துப் போனுர் மாப்பிள்ளை.

சௌந்தரராஜன் விடவில்லை.,

''ஆமாம் சார்! நீங்க எப்படி வீடு வீடாப் போய்ப் பொண்ணைப் பார்க்கலாம்னு முடிவு பண்ணியிருக்கீங்களோ, அதே மாதிரிதான் நாங்களும் இன்னைக்கி ஏழு மாப்பிள்ளைகளுக்குக் கால்ஷீட் கொடுத்திருக்கோம். வர்ற மாப்பிள்ளைகளில் எந்த மாப்பிள்ளைக்கு என் பொண்ணு அதிக மார்க் கொடுக்குதோ, அந்த மாப்பிள்ளையைத்தான் எங்க வீட்டுக்கு மாப்பிள்ளையா ஏத்துக்கிறதாப்ளான்! அப்ப நீங்க இடத்தைக் காலி பண்றீங்களா?''

''என்ன சார் இது! திமர்னு மரியாதையெல்லாம் குறையுது!''

''மார்க் குறைஞ்சு போச்சே!''

''மார்க்கா...?''

''ம்! நீங்க என் பொண்ணுக்குப் போட்ட மார்க் அறுபது! ஆனு என் பொண்ணு உங்களுக்குப் போட்ட மார்க் இருபது தானே! அப்புறம் இன்னுமா இங்க நிக்கணும்னு ஆசைப்படுறீங்க?''

சௌந்தர்ராஜன் வார்த்தைகளில் ஏகமாய் அடிபட்டுச் சிவந்து போன மாப்பிள்ளையின் கும்பல், சட்டென்று எழுந்து; முணுமுணுத்து, ஒருவரையொருவர் போட்டி விட்டுக் கொண்டு வெளியேற, விழிகளில் நீர்கோக்க வந்து நின்ருள் லதா.

சௌந்தரராஜனுக்கு அவர் மகளை ஏறிடவே அவருக்கு மனத்தைப் பிசைந்தது.

''என்னம்மா இப்படிப் பார்க்கறே? இவுங்களுக்குத்தான் கிராக்கி பண்ணத் தெரியுமா? எனக்குத் தெரியாதா? மார்க் போடுருங்களாம்! மார்க்! பொண்ணுப் பார்க்க வர்ற இடத்தை என்னவோ கசாப்புக் கடைன்னு நினைச்சுக்கிட்டாங்க போலிருக்கு! அறிவு கெட்ட ஜென்மங்க! நீ ஒண்ணும் கவலைப் படாதேம்மா! எவன்கிட்டயாவது தள்ளி விட்டாப் போதும்னு அவசரப்பட்டு உன் அப்பா, எந்தப் பாழும் கிணத்திலயும் உன்னைத் தள்ளிட மாட்டார்மா! நல்ல பையனைப் பார்த்து, சீக்கிரமே உன் கல்யாணத்தை நடத்தி வைக்கறேன். கவலைப் படாதே...

விழிகளில் நீர் குலுங்க நின்று கொண்டிருந்த லதாவின் இதயத்தில் அவள் தந்தை இமயமாய் வியாபிக்கத் துவங்கினுர்



சுவரொட்டிச் செய்திகள்

● இ. காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் தங்கபாலு, முன்பெல்லாம் 'புலவர் தங்கபாலு' என்றுதான் சுவரொட்டிகளில் இருப்பார். பின் 'தலைவர் தங்கபாலு' ஆக வந்தார். இப்போது 'தளபதி தங்கபாலு' ஆகிவிட்டார். படுமுன்னேற்றம்!



● நாவலர் நெடுஞ்செழியனின் பிறந்தநாள் வாழ்த்துச் சுவரொட்டிகளில் எப்படி எப்படியெல்லாமோ அவர் வர்ணிக்கப்பட்டார். 'தமிழ் அவர்களிடம் இருக்கிறது. விளையாடட்டும்' என்று எல்லோரும் ரசித்தார்கள். ஆனுல் ஒரு வாசகம் மட்டும் எல்லோரையும் கிண்டலாகச் சிரிக்க வைத்தது. அதில் நாவலர், இதயக்கனியின் வாரிசாக வர்ணிக்கப்பட்டிருந்தார். நாவலரின் (அல்லது அவரைச் சுற்றி விரும்பவர்களின்) ஆசையைப் பாருங்களேன்!



● அமைச்சர் வி. வி. சுவாமிநாதன் தி. நகரில் ஆவின் தானியங்கிப் பாலகம் ஒன்றைத் திறக்க வந்திருந்தார். இதற்கு, 'தி. நகர் வருகை தரும் அமைச்சர் அவர்களே! வருக! வருக!!' என்று ஏகப்பட்ட சுவரொட்டி வரவேற்பு. ஆர். எம். வி. சைதாப்பேட்டைக்கு வந்தார். இதற்கும், 'சைதை வரும் ஆர். எம். வி. அவர்களே! வருக! வருக!!' என்று சைதைச் சுவர்களிலெல்லாம் வண்ண வண்ணச் சுவரொட்டித் துள்ளல்கள். ஏதோ வெளிநாட்டிலிருந்து வந்து இறங்குவது போல் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு எல்லாம் (இவர்கள் மட்டுமில்லை) எல்லோருமே இப்படிச் சுவரொட்டி அடித்துத் தள்ளுகிருர்கள். இனி இவர்கள் வீட்டுக்குள்ளேயே அறை விட்டு அறை தாண்டிச் செல்வதற்குச் சுவரொட்டி அடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!



● குமரி அனந்தன் இ. காங்கிரஸில் சேர்ந்த புதிதில் மூப்பனுர் பேசும் கூட்டங்களில் இவர் பெயரும் மூப்பனுருக்கு அடுத்தபடியாகப் பெரிதாகப் போடப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது. இப்போது பெருந்தலைவர் காமராஜரின் எண்பத்தைந்தாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டபோது, இ. காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் கூட்டச் சுவரொட்டிகளில் குமரி அனந்தன் இல்லை. விசாரித்ததில்... குமரி அனந்தனைப் போட்டால் அவர் கூட்டத்திற்கு வந்ததும், நான்கு பேர் 'குமரி அனந்தன் வாழ்க!' என்று கோஷம் போடுகிருர்களாம். மேடைக்குச் சிலர் வந்து, அனந்தனுக்கு மட்டும் மாலை போட்டுவிட்டுப் போகிருர்களாம். பழைய கா. தா. தே. கா. ஆட்களை வைத்து இப்படிச் ஜெமிஷம் செய்கிருராம். இதனுல் தான் அனந்தனைச் சுருக்கி வருகிருர்களாம். குட்டி காமராஜரின் கதை இப்படிப் போய்க் கொண்டிருக்கிறது!

— விவேகானந்தன்



* வடாற்காட்டில் விஷம் பரவுகிறது



* என்.வி.எஸ். மணியன்

விஷம் பரவும் விமோசனம்

"என்ன ஸார், வடாற்காடு மாவட்டச் சிறப்பிதழ் பிரசுரிக்கிறேன் என்று கூறிக் கொண்டு எங்களையெல்லாம் வாங்கு வாங்கு என்று வாங்கி விட்டீர்களே!" என்றார் என். வி. எஸ். மணியன்.

"ஆமாம், அதிலென்ன தவறு? தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரால் சுற்றுப்புறச் சூழல் பாழாகிறது; நிலத்தடி நீர் நஞ்சாகிறது; பயிர்கள் துவண்டு போகின்றன — இதைத்தானே சுட்டிக் காட்டியிருக்கிறோம்?"

"நீங்கள் எழுதியதில் தவறில்லை. ஆனால் பரிகாரம் என்ன? அதைச் சொல்ல வேண்டாமா?"

"நாங்கள் தோல் ஆராய்ச்சி நிறுவனமான ஸி. எல். ஆர். ஐ. யில் கேட்டோம்; மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் விசாரித்தோம்; அவர்கள் ஒத்துழைக்கவில்லை."

"எப்படி ஒத்துழைப்பார்கள்? உங்கள் நிருபர் குடைந்து குடைந்து கேள்வி கேட்டால் அவர்களால் சரியான பதில் கூற முடியாதே! ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கிற யாருமே சுற்றுப்புறச் சூழலைக் குட்டிச் சுவராக்க வேண்டும் என்ற கருத்தில் செயல்பட மாட்டார்கள். அதைத் தவிர்க்க முடியுமானால் தவிர்க்கவே விரும்புவார்கள்" என்ற மணியன், தொடர்ந்து சில சுவாரஸ்யமான உண்மைகளைப் பிட்டுப் பிட்டு வைத்தார்:

* "தோல் பதனிடும் தொழிலகங்களிலிருந்து வெளிவரும் கழிவு நீரைத் தூய்மைப்படுத்த அமைப்புக்களை நிறுவுவதென்றால் ஏகப்பட்ட செலவாகிறது. ஒரு தோல் தொழிலகத்தை நிறுவ என்ன செலவாகுமோ அதே அளவுக்கு இதற்குச் செலவாகும். எனவே பல தொழிலகங்கள் இதைச் செய்வதில்லை.

* "தூய்மைப்படுத்தும் அமைப்புக்களை நிறுவுமாறு அரசு தொழிலகங்களை நிர்ப்பந்திக்கிறது. தொழிலகங்கள், இதற்கு ஏராளமாகச் செலவாவதைச் சுட்டிக்காட்டி, 'அரசு பகுதி அளவுக்கேனும் உதவ வேண்டும்' என்று கோருகின்றன. அரசு இதை ஏற்கவில்லை. ஆனால், தோல் ஏற்றுமதியில் சுண்டுவிரலைக் கூட அசைக்காமல் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் என்ற அரசு நிறு

வனம் கமிஷன் அடிக்கிறது. 'அந்தக் கமிஷனில் ஒரு பகுதியை இந்தத் தூய்மைப் படுத்தும் அமைப்புக்களை உருவாக்கக் கொடுக்கக்கூடாதா?' என்பது தோல் தொழிலகங்களின் கேள்வி.

* ''அரசு உதவியுடனே அல்லது உதவியில்லாமலோ தூய்மைப்படுத்தும் அமைப்புக்களை நிறுவுவதாக வைத்துக் கொண்டாலும் அவை வெறும் கண் துடைப்புத்தானே தவிர, உண்மையில் கழிவுநீர் தூய்மை அடையவில்லை! மாசுக் கட்டுப்பாடு வாரியம், 'இந்த அளவுக்குக் கழிவுநீரைத் தூய்மைப்படுத்தி வெளியேற்ற வேண்டும்' என்று தரம் நிர்ணயிக்கிறது. இதற்கு COD என்றும் BOD என்றும் பெயரிடுகிறது. ஆனால் இந்த ஸி. ஓ. டி. பி. ஓ. டி யை அடைவதற்கான வழி என்ன என்பதை வாரியம் சொல்வதில்லை!''

''ஸி. ஓ. டி., பி. ஓ. டி என்றால் என்ன?'' என்று கேட்டேன்.

''தோல் தொழிலகக் கழிவு நீரில் ரசாயனப் பொருட்களும் உள்ளன. உயிரியல் பொருட்களும் உள்ளன. இவற்றை ஆபத்தில்லாதவையாக்கத் தேவைப்படும் பிராண வாயுவின் அளவுகள் தாம் ஸி. ஓ. டி., பி. ஓ. டி. என்பன. (Chemical Oxygen demand: Biological Oxygen demand) இப்படித் தர நிர்ணயம் செய்கிற அரசு, அத்தரத்தை அடையும் வழியை எங்களுக்குக் கற்றுத் தர முடியவில்லையே!''

''அப்படியானால் இதற்குப் பரிகாரமே இல்லையா?''

''எனக்குத்தெரிந்துஒரே வழிதான் உண்டு. அது, கடற்கரையோரமாகப் பல நூறு ஏக்கர் நிலத்தை அரசு ஆர்ஜிதம் செய்ய வேண்டும். இன்றுள்ள எல்லாத் தோல் தொழிலகங்களுக்கும் அங்கு இடம் ஒதுக்க வேண்டும். தொழிலகங்களை இடம் மாற்றிக் கொண்டு போய் நிறுவக் காலக் கெடு வைக்க வேண்டும். எல்லாக் கழிவுநீரையும் சேகரித்து, இயன்ற அளவுக்குத் தூய்மைப்படுத்திய பிறகு, கடற்கரையிலிருந்துவெகுதூரத்துக்குப் பெரிய குழாய் மூலம் கொண்டு சென்று, சில மைல்களுக்கு அப்பால் கடல் அடிவாரத்தில் கடலுடன் கலக்கச் செய்ய வேண்டும்.''

''நடக்கிற காரியமா?''

''சுற்றுச் சூழல் நச்சுமயமாகக் கூடாது என்றால் இதைச் செய்துதான் ஆக வேண்டும். மனமிருந்தால் சாதிக்கலாம். தோல் பதனிட குரோமியம் என்ற ரசாயனப் பொருளை அதிகமாக உபயோகிக்கிறோம். இதற்குப் பதில் அலுமினியம் பயன்படுத்த முடியுமா என்று ஆராய்ச்சி நடக்கிறது. அதில் வெற்றி பெற்றால் கழிவுப் பொருளின் நச்சுத்தன்மை குறையலாம். ஆனால் வேறு புதிய பிரச்னைகள் தோன்றாது என்பதும் நிச்சயமில்லை.''

''மற்ற நாடுகளிலிருந்து நாம் படிப்பினை பெற முடியாதா? அவை என்ன செய்கின்றன?''

''அதை ஏன் கேட்கிறீர்கள்! இத்தாலியில், ஸான்தாகுரூஸ் என்றொரு ஊர் இருக்கிறது. அந்த வட்டாரத்தில் தோல் பதனிடும் தொழிலகங்கள் அதிகம். கழிவு நீரெல்லாம் அங்கு ஓடும் ஓர் ஆற்றைப் பாழாக்கி விடுகிறது. அரசு, மாசுக் கட்டுப்பாடு என்று கூறி இதற்குத் தடைவிதிக்கும். கூடவே தொழிலாளர்கள் தங்கள் பிழைப்புக் கெட்டுப் போனதாகக் கிளர்ச்சி செய்வார்கள். உடனே அரசு இதற்குப் பணிந்து தடையை நீக்கும். இது ஆண்டுதோறும் அங்கு நடக்கும் ஒரு நாடகம்!

''பொருளாதார முன்னேற்றம் அடைந்த பல நாடுகள் தோல் பதனிடும் தொழிலையே விட்டு விட்டன. ஏற்கெனவே பதனிடப்பட்ட தோலை (finished leather) மட்டுமே இறக்குமதி செய்து கொள்கின்றன. இந்தியா இப்படிச் செய்தால் ஏற்படக் கூடிய அந்நியச் செலாவணி நஷ்டத்தைச் சமாளிக்க முடியுமா?''

வடாற்காடுக்கு உண்டா?

நண்பர் மணியன், கடன் வாங்கிய நூறு ரூபாய் நோட்டுடன் தோல் வியாபாரத்தில் இறங்கியவர். அரும்பாடுபட்டு முன்னேறி, இன்று கால்நடைப் பண்ணை முதல் தோல் தொழில் தொடர்பான இயந்திரங்கள் இறக்குமதி, விநியோகம் வரை தோல் துறையின் பல்வேறு பிரிவுகளிலும் ஈடுபட்டு வெற்றி கண்டு வருகிறவர். ஈட்டிய செல்வத்தை ஈகைக் குணத்தோடு பல நற்பணிகளுக்குப் பயன்படுத்தி வருகிறவர். இலக்கிய ஆர்வம் மிக்க இவர், டி. கே. சி. யின் வட்டத்தொட்டிக்கு இன்றைய போஷகர்.

''இயற்கை அன்னை தந்த இந்தப் பூமி இந்தத் தலைமுறைக்கு மட்டும் உரியதல்ல; வருங்காலத்தில் இன்னும் எத்தனையோ தலைமுறைகளுக்குச் சொந்தமானது. எனவே இந்தப் பூமியை அதன் தூய்மை கெடாமல் அடுத்த தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்ல வேண்டியது நமது கடமை. இதில் நாம் தவறினால் நமக்கு மன்னிப்பே கிடையாது'' என்று உறுதியாக நம்புகிறார் என்.வி.எஸ். மணியன்.

—வி. ராஜேந்திரன்

ஆறுதல் அடைவது விவேகம்!

• 'வெற்றி பெறுமா ஒப்பந்தம்?' தலையங்கம் கண்டேன். இலங்கைத் தமிழர் பிரச்னைக்குச் சுமுகமாகத் தீர்வு காணும் பொருட்டு, நல்லெண்ணத்துடன் ராஜீவ் செய்து கொண்டுள்ள சமாதான ஒப்பந்தம் வெற்றி அடையுமா? என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளீர்கள். அப்படியென்றால் இப்பிரச்னைக்கு வேறு எதுதான் தீர்வு? எப்போதோ கிடைக்கப் போகிற தனித் தமிழ் ஈழத்தைக் கனவு கண்டு கொண்டு, அப்பாவித் தமிழர்கள் அனுதினமும் இலங்கையில் படுகொலை செய்யப்படுவதை இனியும் அனுமதிக்கலாமா? அனைத்துப் போராளிகள் குழுவினரும், இந்த ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டு விட்ட பின்பு, இவ்விஷயத்தைச் சர்ச்சைக்குள்ளாக்குவது நியாயம்தானா? இத்தனை காலமாக முரண்டுபிடித்துக் கொண்டிருந்த ஜெயவர்த்தன இப்போது இத்தனை படிகள் இறங்கி வந்திருக்கிறாரே என ஆறுதல் பட்டுக் கொள்வதே விவேகமானது. என்பது எனது தாழ்மையான கருத்து!

சென்னை — 15, சைதை வி. முரளி.

• 'இந்தியா—இலங்கை ஒப்பந்தம் வெற்றிபெறும் வாய்ப்பு அறவே கிடையாது என்பதே பொதுவான கருத்து. நானும் அந்தக் கருத்தோடு இணைகிறேன். தங்களின் தலையங்கத்தை ஏற்கிறேன்; பாராட்டுகிறேன்!

பெங்களூர் — 21 ப. மூர்த்தி

• 'ஏமாற்றமளிக்கும் எதிர்க்கட்சிகள்' என்ற தலைப்பில் தங்கள் தலையங்கம் கண்டேன். உண்மையான இந்தியக் குடிமகனாக இருக்கும் ஒவ்வொருவரும் சிந்தித்துக் கவனிக்க வேண்டியவை. தற்போதிருக்கும் அரசியல் குளறுபடிகளை நாட்டுக்குத் தெளிவுப்படுத்த வேண்டிய எதிர்க் கட்சிகள் சரியான வகையில் அதைச் செய்யாமல் 'அவை' நடவடிக்கைகளை ஒத்திப் போடும் வகையில் நடந்து கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம். இதை ஏன் இந்த எதிர்கட்சிகள் சிந்தித்துப் பார்க்க மறுக்கின்றன; இனிமேலாவது சிந்தித்துச் செயல்பட உங்கள் தலையங்கம் திருப்பு முனையாவதில் மகிழ்ச்சி!

மேல்பட்டி, எல். மாறன்.

• வேலைக்குப் போகும் பெண்கள்: நாட்டை உயர்த்தும் கரங்கள். கட்டுரையைப் படித்த பிறகாவது பெண்களை அடிமைகளாய்ப் பார்க்கும் குறுகிய சிந்தையுள்ள ஆண்களின் மனோபாவம் மாறுமா? மேலும் பெண்கள் வேலைக்குப் போகாவிட்டால் நாடே ஸ்தம்பித்துப் போய்விடும் அபாயமிருக்கிறது. என்ற உண்மையை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

திருத்துறைப்பூண்டி. டி. ஜெ. பிரிட்டோ.

வட்ட மேஜை

• பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது என்ற விஷயத்தில், தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் தான் என்று வாதம் செய்பவர்களுக்கு 'வேலைக்கு போகும் பெண்கள், நாட்டை உயர்த்தும் கரங்கள்! என்ற தங்களின் 'கவர் ஸ்டோரி' ஒரு சாட்டையடி!

திருச்சி — 20, ஆர். அப்துல் சலாம்.

• இவ்வாரக் கவர் ஸ்டோரியும் பெண்களைப் பற்றியது; போதாக் குறைக்கு மாஸ்கோ மாதர் மாநாட்டுச் செய்திகளைச் சிவசங்கரி தொகுத்தளித்திருந்தது — இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, இவ்வார "கல்கியை"ப் பெண்கள் ஸ்பெஷல் என்றே கருதத் தோன்றுகிறது.

தோட்டக்குறிச்சி, இரா. வள்ளியாபதி.

• முன்னேறுகிற பாரதத்திற்கு ஆதாரங்களாய் இருக்க வேண்டிய இளைஞர்கள், முட்டுக்கட்டைகளாக மாறுவதை வலிமையாகச் சித்திரிக்கிறது இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை. தேர்வு செய்த 'கல்கி'யும் எழுதிய கதாசிரியரும் 'சபாஷ்' பெறுகிறார்கள்!

ஸ்ரீரங்கம், ஆர். ஸ்ரீநிவாசன்.

• குறுக்கு வழியையே குறிக்கோளாகக் கொண்ட பெரும்பான்மையான இளைஞர்களின் இன்றைய இயல்பை எடுத்துக் காட்டியது, இரண்டாம் பரிசு பெற்ற தமிழினியனின் சிறுகதை. கதை நிகழ்கால நிஜத்தைப் பிரதிபலித்தது!

திருச்சி — 2. பாலா அசோக்.

• 'மிஸ்டர் இந்தியா' படத்தின் விமர்சனத்தில் — கடைசியில் — 'குழந்தைகள், பெரியவர்கள், பார்க்க வேண்டிய படம்' என்று எழுதியுள்ளீரே! குழந்தைகளோடு பார்க்கக் கூடிய படமா, அது? ஆனாலும் சும்மா சொல்லக் கூடாது! 'பேர் சொல்லும் பிள்ளை'யைப் பகல் பன்னிரண்டு மணிக்கு, மெரீனா கடற்கரையில் போட்டுச் 'சடச் சட' சவுக்கடி எடுப்பது போலப் புரட்டி எடுத்து விட்டீர்கள்!

கொரட்டூர், கே. என். 'ஸ்ரீ' மருடப்பிரியன்.

• அரசியலைப் போலத் திரைப்படத் துறையிலும் கறுப்புப் பணம் நிறைய விளையாடுகிறது என்று சாருஹாசன் கூறுவதை முழுக்க ஒப்புக் கொள்வோம்! ஆனால் இது சில பெரிய தயாரிப்பாளர்களிடம் மட்டும் தான் என்று கூறியதைத்தான் நம்ப முடியவில்லை. நடிகர்களிடமும், நடிகைகளிடமும் கறுப்புப் பணம் கிடையவே கிடையாதா? சிரிப்புத்தான் வருகிறது!

சிவகங்கை, ஆர். ஜெ. பாலன்.

• ஆதவன் பற்றிய அசோகமித்திரனின் படப்பிடிப்பு, அடிமனத்தின் ஆழத்தில் சோகச் சுழல்களை ஏற்படுத்தி விட்டது. மறைந்து விட்டாலும் மங்காத சூரியனாகத் தம் எழுத்துக்களால் ஒளிவீசிக் கொண்டிருப்பார் ஆதவன் என்பது உறுதி.

திருக்குவளை, வெற்றிப் பேரொளி.

• மணிவிழாக் காணும் வானதி திருநாவுக்கரசு தம்பதியர்க்கு கல்கி வாசகர்கள் சார்பில் எனது நல் வாழ்த்துக்கள்.


திருச்சி — 5, எம். காமராஜ்.



• சகாயமேரி



• ஆரோக்கியம்



• சவரிமுத்து

இந்தப் பெண்ணின் சோகக் கதை!

“என்ன நடந்ததுன்னு பயப்படாம சொல்லுங்க சகாயமேரி...

'' ...... ''

''சொல்லும்மா... அவுங்கள்லாம் உன்னோட அண்ணன்மார்கள் மாதிரி. பயப்படாம சொல்லு. உனக்கு மட்டுமில்லே, உன் வயித்தில் இருக்கிற சிசுவுக்கும் ஒரு விடிவு காலம் பொறக்க வேண்டாமா?'' — பக்கத்திலிருந்தவர்கள் நம்பிக்கையூட்டினார்கள்.

''என் கூடப் பொறந்தவங்க மொத்தம் ஆறு பேரு. அண்ணனுங்க நாலு பேரு. அக்காளுங்க இரண்டு பேரு. நான்தான் கடைசி. ரொம்பவும் ஏழைக் குடும்பம். பேருக்குக் கொஞ்சம் நெலம் இருந்தாலும் அதனால் பிரயோசனமில்லே. கூலி வேலை செஞ்சுதான் பொழைக்கிறோம். பக்கத்துத் தெருவிலிருக்கிற அன்னமுத்து வீட்டுக்குத்தான் நான் அதிகமா வேலைக்குப் போவேன். ஆடு, மாடு மேய்க்கிற வேலை.

''அப்பத்தான் அன்னமுத்து என்கிட்ட அதிகமாப் பழகுனாரு. 'கல்யாணம் பண்ணிக்கலாம்'னாரு. 'ஐயய்யோ, நாம பங்காளி முறையாச்சே... எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்'னு சொன்னேன். 'சுத்தி வளைச்சுப் பார்த்தாத்தானே பங்காளி முறை ஆவுது. இந்தக் காலத்துல அதையெல்லாம் யாரு பார்க்கறாங்க? நாம கண்டிப்பாக் கல்யாணம் பண்ணிக்கலாம்'னு திரும்பத் திரும்பச் சொன்னாரு...

''அத்தனை ஆசையாச் சொல்றவர்கிட்டே எத்தனை தடவைதான் வேண்டாம்னு சொல்றது! நானும் சரின்னுட்டேன். அப்புறம் ரொம்பவும் நெருக்கமாப் பழகினாரு. அதெல்லாம் தப்பாயிடும்னு சொன்னப்போ, நாமதான் கல்யாணம் செஞ்சுக்கப் போறோமேன்னு சமாதானப்படுத்தினாரு. வேறு என்ன செய்ய? தப்பு நடந்து போச்சு. ரண்டு மாசம் முழுகாம ஆயிட்டேன். அவருகிட்டச் சொன்னப்போ, 'இதை யாருகிட்டயும் சொல்லாதே. நான் மெட்றாஸ் போயிட்டு வந்ததும் கல்யாணம் பண்ணிக்கறேன்'னு உறுதியாச் சொன்னாரு. நானும் அதை நம்பிப் பேசாமல் இருந்திட்டேன். ஆனா இப்போ...''

— சகாயமேரியால் இதற்குமேல் பேச முடியவில்லை. நீர் கோத்த கண்களோடு கதற ஆரம்பித்து விட்டார்.

''அப்புறம் நடந்ததை நான் சொல்றேங்க...'' — என்று முன்வந்தார் சகாயமேரியின் தந்தை சவரிமுத்து.

''இவ்வளவு தூரம் நடந்திருக்கு... இது எப்படி ஆரம்பத்திலேயே உங்களுக்குத் தெரியாமல் போச்சு?'' — இது நாங்கள்.

''சேசு சத்தியமாத் தெரியாதுங்களே... வயித்தில நாலஞ்சு மாசச் சிசு வளர்ந்தப்பத்தாங்க தெரிஞ்சது. தலைக்கு மேல் வெள்ளம் போயிடுச்சு. என்ன பண்றது? விசாரிச்சோம். அன்னமுத்துதான்னு உறுதியாச் சொல்லுச்சு பொண்ணு. அவனோ மெட்றாஸ்ல இருக்கான். என்ன செய்யறது? அங்க இங்கன்னு ஒரு இருநூறு ரூவா கடனை வாங்கி அந்தோணியையும் மாணிக்கத்தையும் மெட்றாஸுக்கு அனுப்பி, அன்னமுத்துவை விசாரிச்சு, உண்மையா இருந்தாக் கையோட கூட்டிக்கிட்டு வாங்கன்னு அனுப்பி வெச்சேன்... இதோ அந்தோணியே வந்திட்டாரு... அவரையே கேளுங்க...'' என்றார் சவரிமுத்து.

''சொல்லுங்க அந்தோணி. நீங்கதான்

• ரகுநாதன்



• அந்தோணி



மெட்ரூஸ் போய்ட்டு வந்தீங்களா?''

''ஆமாங்க, நானும் மாணிக்கமும் போனோம். மூலக்கடையிலிருக்கிற ஒரு ஓட்டல்ல அன்னமுத்து வேலை பார்க்கறதாச் சொன்னாங்க. அவனை விசாரிச்சோம். அவனும் ஒத்துக்கிட்டான். அப்போ உடனே புறப்படுன்னோம். ஓட்டல் முதலாளி கிட்டே லீவு சொல்லிட்டு அவனும் புறப்பட்டு வந்தான்.

''நாங்க வந்தது சிவகங்கை பஸ். அது மதகுப்பட்டி வழியாத்தான் வரும். மதகுப்பட்டில எறங்கினா எங்க ஊரு காடனேரி பக்கம்தானே! நடந்தே வந்திடலாமே! அதனால் மதகுப்பட்டில எறங்கிட்டோம். கடைல டீ குடிச்சோம். அப்போ அன்னமுத்தோட அண்ணன் ஆரோக்கியம் அங்கே இருந்தாரு. தம்பியைப் பார்த்ததும் எதுவும் பேசலை. சைக்கிள்ல கொஞ்ச தூரம் போனாரு. பிறகு திரும்பவும் வந்து, தம்பியைச் சைக்கிள்ல உட்கார வெச்சுக் - கூட்டிக்கிட்டுக் காடனேரிக்கு வந்தாரு. நாங்களும் பின்னாடியே நடந்து வந்தோம். வந்து விவரங்களைச் சவரிமுத்துவிடம் சொன்னோம். அப்புறம் என்ன நடந்ததுங்கிறதைச் சவரிமுத்துவே சொல்லட்டுங்க. அப்பத்தான் உங்களுக்குக் குழப்பமில்லாம புரியும்...''

''அந்தோணியும் மாணிக்கமும் வந்து வெவரம் சொன்னதும் நான் உடனே அன்னமுத்து வீட்டுக்குப் போய், கல்யாணத்தை எப்ப வெச்சுக்கலாம்னு அவனோட அண்ணன் ஆரோக்கியத்துக்கிட்ட கேட்டேன். உடனே அவரு, 'உங்க பொண்ணுக்கும் தனக்கும் தொடர்பே இல்லேன்னு தம்பி சொல்றான்'னு சொன்னாரு. அப்பமன்னு

• அருளாயி



அன்னமுத்துவையே கூப்புடுங்க, நேரில் கேட்போம்னு சொன்னேன். 'அவன் ஊரில் இல்லை'ன்னு சொல்லிட்டாரு அவரு. எங்கே போய்ட்டான்னு கேட்டதுக்குத் தெரியாதுன்னு சொல்லிட்டாரு.

''எங்க சர்ச் பங்குச் சாமியார் மூலமாவும் விசாரிக்கப் பார்த்தோம். அவருகிட்டேயும் இல்லேன்னே சாதிச்சாங்க. கடைசியாத்தான் என்ன பண்றதுன்னே தெரியாம எங்க ஊரு விவசாயச் சங்கச் செயலாளர் (சி. பி. ஐ. எம்.) ரகுநாதன்கிட்டே கலந்து பேசிப் போலீஸில் புகார் செஞ்சோம். அங்கேயும் இல்லேன்னே சாதிக்கிறாங்க. என்ன பண்றதுன்னே தெரியலை...'' என்று கடைசியில் சவரிமுத்துவும் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டார்.

பிறகு ரகுநாதன்தான் பேசினார். ''மெட்ராஸ்ல தான்தான்னு ஒத்துக்கிட்டவன், இங்கே வந்ததும் இல்லேன்னு சொல்றதுக்குக் காரணம், அவனோட அண்ணன் தாங்க. அவங்கதான் சொல்லிக் குடுத்திருக்காங்க அப்படி. முதல்ல் தம்பி எங்கே போனான்னே தெரியாதுன்னு, சாதிச்ச அண்ணன், போலீஸில் நாங்க புகார் கொடுத்ததும் எப்படிங்க உடனே தம்பியைக் கொண்டு வந்து போலீஸில் ஒப்படைச்சார்? அப்போ அவருதானே அத்தனை நாளாத் தம்பியை ஒளிச்சு வெச்சிருந்திருக்கணும்? எப்படியோ, அந்தப் பொண்ணுக்கு நியாயம் கிடைக்கணும். அதுக்குப் பத்திரிகைக்காரங்களும் உதவணும்...'' என்றார் ரகுநாதன்.

சரி, சகாயமேரியின் தாயார் அருளாயி என்ன சொல்கிறார் என்று அவரைப் பார்த்தோம். அவரால் பேசக் கூட முடியவில்லை. பெண்ணைப் பார்த்தார். பின் எங்களைப் பார்த்தார். கையெடுத்துக் கும்பிட்டார். அந்த நிகழ்ச்சி, அங்கிருந்த அத்தனை பேரையும் கண் கலங்கச் செய்து விட்டது!

கடைசியில், அன்னமுத்து தரப்பில் என்ன சொல்லப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்காக அன்னமுத்துவின் வீட்டிற்குச் சென்றோம். வீட்டில் யாரும் இல்லை. அதனால், நாங்கள் அன்று செல்ல

வேண்டிய மற்ற ஊர்களுக்கெல்லாம் சென்று முடித்த பிறகு மறுபடியும் மாலையில் அன்னமுத்து வீட்டிற்குச் சென்றோம்.

அப்போதும் அன்னமுத்து இல்லை. அண்ணன் ஆரோக்கியமும் அவர் மனைவியும்தான் இருந்தார்கள். எங்களைக் கண்டதும் அப்போது பெய்து கொண்டிருந்த மழையின் சில்லிப்பிலும் ஆரோக்கியத்திற்கு வியர்த்துக் கொட்டியது.

''சென்னையில் தான்தான் என்பதை ஒப்புக் கொண்ட உங்கள் தம்பி அன்னமுத்து, இங்கே வந்த பிறகு இல்லை என்று மறுப்பதற்கு என்ன காரணம்?'' — ஆரோக்கியத்தைக் கேட்டோம்.

''மெட்ராஸிலும் அவன் அப்படிச் சொல்லலீங்க. இவுங்க சொல்ற பொய் அது!''

''பிறகு, எதற்காக அன்னமுத்து மெட்ராஸிலிருந்து இங்கே வரணும்?''

''அம்மாவுக்கு ஒடம்பு முடியலேன்னு சொல்லித்தான் கூட்டிக்கிட்டு வந்திருக்காங்களே தவிர, 'சகாயமேரி விஷயமா எதுவும்மே அவுங்க பேசலீங்க...''

''சரி, அப்படியே வைத்துக் கொள்வோம். அவர்கள் மதகுப்பட்டியில் பஸ்ஸை விட்டு இறங்கியபோது, நீங்கள்தானே அன்னமுத்துவைச் சைக்கிளில் வைத்துக் கூட்டி வந்தீர்கள்?''

''ஆமாம்.''

''அப்போது உங்களைக் கண்டதும் உங்கள் தம்பி அம்மாவின் உடல்நிலை பற்றித்தானே முதலில் விசாரித்திருப்பார்?''

''ஆமாம்.''

''நீங்கள் என்ன சொன்னீர்கள்?''

''அம்மா நன்றாகத்தான் இருக்கிறது என்று சொன்னேன்.''

''அப்போதுதான் அந்தோணியும் மாணிக்கமும் உங்கள் தம்பியைப் பொய் சொல்லி அழைத்து வந்திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்ததா?''

''ஆமாம்.''

''தெரிந்ததும் என்ன செய்தீர்கள்? அந்தோணியிடமும் மாணிக்கத்திடமும் எதற்காக இப்படி என் தம்பியைப் பொய் சொல்லி அழைத்து வந்தீர்கள் என்று நீங்கள் கேட்டீர்களா?''

''இல்லை.''

''ஏன் கேட்கவில்லை?''

''அவர்களோடு எனக்குப் பேச்சு வார்த்தை ஏதும் இல்லை. மனஸ்தாபம்.''

''ஓகோ! அண்ணனோடு பேச்சு வார்த்தை இல்லாத இருவர், தம்பியிடம் வந்து தமது தாயாருக்கு உடம்பு சுகமில்லை, அதனால் உடனே புறப்பட வேண்டும் என்று சொன்னதை நம்பி, உங்கள் தம்பி எப்படிப் புறப்பட்டு வந்தார்?'தமது தாயின் உடல்நிலை சரியில்லை' என்பதைத் தமக்கு வேண்டாத இருவரிடம் 'சொல்லியா அண்ணன் அழைத்து வரச் சொல்லியிருப்பார் என்று உங்கள் தம்பி சந்தேகப்பட்டிருக்க வேண்டாமா?''

''......''



''இப்பத்தானே 'விளம்பரம்' ஆரம்பிச்சிருக்கு? அடுத்த பாட்டு போடறதுக்குள்ளே போய், பாமா ஆயில் வாங்கிக்கிட்டு வந்துடுங்க...''

— ஆர். வசந்தகுமார்

''நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் என்று சொல்லலாமா?''

''இல்லை. நான் உண்மைதான் சொல்லுகிறேன்......''

''உண்மைகள் முரண்பட வேண்டிய அவசியமில்லை. சரி, இப்போது உங்கள் தம்பி அன்னமுத்து எங்கே?''

''போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் போயிருக்கிறான்.''

''எப்போது?''

''காலையிலேயே புறப்பட்டுப் போய்விட்டான்.''

''இதுவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவில்லை. நாங்கள் அங்கிருந்துதான் வருகிறோம்...''

''......''

அன்னமுத்துவின் அண்ணன் ஆரோக்கியத்தின் பேச்சில் ஏராளமான முரண்பாடுகள். அதற்கு மேலும் விசாரிப்பதில் அர்த்தமில்லை என்பதால் இறுதியாக மதகுப்பட்டி போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று விசாரித்தோம்.

''நாங்களும் புகார் வந்தவுடன் அன்னமுத்துவை விசாரித்தோம். 'இல்லை' என்கிற பதில்தான் திரும்பத் திரும்பக் கிடைக்கிறது. இந்நிலையில் கிரிமினல் வழக்குத் தொடருவதா அல்லது அப்பெண்ணையே சிவில் வழக்குத் தொடரச் சொல்வதா என்பதில் எங்களுக்கே குழப்பம். அதனால் அரசாங்க வக்கீலிடம் ஆலோசனை கேட்டிருக்கிறோம். அவர் ஆலோசனைப்படி செயல்பட நாங்கள் தயாராய் இருக்கிறோம். பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைத்தால்தான் எங்களுக்கும் ஒரு நிம்மதி கிடைக்கும்...'', என்றார்கள் போலீஸார்.

அவர்களுக்கு மட்டுமல்ல; சகாயமேரிக்கும் அவரது வயிற்றில், வெளியுலகப் புரட்டுகளெல்லாம் தெரியாமல் நிம்மதியாய் வளர்ந்து கொண்டிருக்கும் சிசுவுக்கும் நீதி கிடைத்தால்தான் நம் அனைவருக்குமே நிம்மதி. அதோடு, இளைஞர்களின் காதல் நாடகத்தில் கிறங்கிக் கிடக்கும் எத்தனையோ இளம் பெண்களுக்கு இது ஓர் எச்சரிக்கைக் கோடு என்பதிலும் சந்தேகமே இல்லை.

— இளங்கோவன்

அட்டை வண்ணப்படங்களும், பசும்பொன் மாவட்டச் செய்திகள் தொடர்பான மற்ற படங்களும்: **கே. வி. ஆனந்த்**

பாலகுமாரன்

புரிந்து கொள்வது என்பது அனுபவத்தின் அடிப் படை. அனுபவம் என்பது காலமும் அறிவும் சேர்ந்தது. ஒரு செய்தி சொல்லப்பட்ட மூன்று நிமிடங்களில் முற்றிலும் புரிந்து கொள்ளக் கூர்மையான அறிவும் சொல்லப்பட்டது பற்றி ஆழ்ந்த அனுபவமும் தேவையாய் இருக்கிறது. இவ்வளவுதானே, புரிந்து விட்டது என்று தலையாட்டி, இடம் விட்டு நகர்ந்து, மறுநாள் தூங்கி எழுந்த பிறகு யோசித்தால், புரிந்து கொண்டது பற்றிக் கேள்வி வரு கிறது. கேள்வியைப் பின்தொடர எதுவுமே புரியவில் லையோ என்கிற பிரமிப்பு வந்து விடுகிறது.

''புரிகிறது லலிதா'' என்று முரளி சொன்னதும் லலிதா புடைவையைத் தோளிலிருந்து பிரித்துப் போட்டு, அருகே நெருங்கி, அவன் முகம் நிமிர்த்திப் பலமுறை ஆழ முத்தமிட்டாள். முத்தமிட முத்தமிட முரளியின் யோசனைச் சக்தி அலைந்து போயிற்று. செவேல் என்கிற உடம்பும் சின்னத் தொப்புள் வட்டமும், திமிருகின்ற மார் பகங்களும், தாலிவடமும், முத்துச் சிரிப்பும், மையிட்ட கண் களும் காற்றில் அசையும் கூந்தலுமாய், மனைவி கட்டி லில் முழங்காலிட்டு நின்று தோளில் கைவைத்துப் பார்க் கையில், 'நான் ஆண் அவள் பெண்' என்கிற நினைவுதான் வருகிறதேயொழிய, உலக ஜீவராசியில் உயிரோடு இருப்பது இந்த இரண்டு பேர்தான் என்கிற நினைப்பு ஓடு கிறதே தவிர, பிரபஞ்ச நடனம் போல் காமம் ஆடப் பெறுகையில் பூமி கூழாங்கல்லாய் மாறுகிறதே தவிர, புரிகிறது என்பதற்கு அர்த்தமில்லாமல் போய் விட்டது.

ஓடுகிற ஆற்றில் மு க் கு ளி த் து மூச்சடக்கி நீருக்குள் கண் திறந்து கனவு மாதிரி ஒரு வெளிச்சத்தில் மீன்களையும் நண்டுகளையும் நீரடி மணலையும் நெற்றிக்கு முன் மிதக்கும் தனது கால் கட்டை விரலையும் அதிசயமாய்ப் பார்க்கத் தோன்றுமேயன்றி, கரையில் உள்ள தென்னை மரமும் மரத்தடியில் வைத்த சோப்பு, டவலும் நினைவுக்கு வருமோ...? இனிமேல் மூச்சடக்க வரவில்லை என்று தெரிந்து சுவாசப்பை பிராண வாயுவுக்கு ஏங்கி 'ப்ளக்' என்று நீர் மட்டம் தொட்டுத் தலைசிலுப்பி, நீர் வழிந்து கண் மறைக்க அதை வழித்துத் துடைத்து நீண்டதாய் ஒரு சுவாசம் முடித்துக் கால் உந்திக் கரைக்குக் கைவீசி நீச்சல டிக்கிற போது, டவல் இருக்கிறதா என்று தலை எட்டிப் பார்க்கும்.

மனையாள் சுகம் நீங்கிக் கரையில் டவல் இருக் கிறதா என்பது போல் அம்மாவைப் பார்க்க, முரளிக்கு மூன்று வருடம் பிடித்தது.

ஆசை அறுபது, மோகம் முப்பது; மொத்தம் தொண்ணூறு என்பது போகிக்குத்தான். தாசியோடு குடித்தனம் போடுபவனுக்குத்தான். மனைவி தாசி யல்ல. வெறும் படுக்கை சுகம் மட்டுமல்ல.

இங்கே மோகம் அறுபதோ முப்பதோ இல்லை. வ ரு ட க் க ண க் கி ல் வளரும் விஷயம். இது வெறும் மோகம் ம ட் டு மி ல் லை. குடித்தனம். குடும்ப இலக் கணம். நான் இ ல் லை யெ னி ல் நீ இல்லை. நீயில்லை யெனிலும் நான் இல்லை என்கிற பாடம். உன் சுகம் என்



சுகம் என்று பரஸ்பரம் அனுசரிக்கும் வேதம். வேதம் சொல்லி வளர்க்கிற யாகம். இந்த யாகத்தின் ஆகுதி உடல் சுகம். அவிப் பொருள் குழந்தை.

வலமாய்ச் சுழன்ற அக்னியிலிருந்து ஒரு தேவன் வெளிப்பட்டு, ஆசி வழங்கியது போலப் பிள்ளை பிறந்ததும் பெரிய சந்தோஷம் வருகிறது. தேவனோடு யாக குண்டத்தையும் வலம் வரத் தோன்றுகிறது.

இரண்டு வருடம் கழித்து முரளிக்குப் பிள்ளை பிறந்தான். லலிதாவையும், குழந்தையையும் பக்தியோடு வலம் வந்தான்.

பிள்ளைக்கு ஆயுஷ் ஹோமம் என்கிற போது அம்மா முக்கியமானாள். "நான் எதுக்கு அங்கே வரணும்?" என்று சீறினாள்.

'ப்ளக்' என்று முரளி நீராடிவிட்டு மேலே வந்தது அன்றுதான்.

"ஏம்மா... அவன் உன் பேரன் இல்லையா?"

"நான் பத்தியச் சாதம் கொடுத்தேனா... மூக்கு உறிஞ்சிப் போட்டேனா, நெத்திக்கிட்டு திருஷ்டி கழிச்சேனா... அவ குழந்தை, அவ கொண்டாட்டம். நான் எதுக்கு அங்கே? பத்து ரூபா தர்றேன். சபைல ஓதியிட்டுடு. இல்லையா, அ வ ம ா ன ம ா இருந்தா, அதையும் செய்யாதே. ரகசியமாக் கணக்கு வச்சுடு."

"நான் என்ன குறை வச்சேன்... இப்படி கரிச்சுக் கொட்டறே?"

அம்மா சிரித்தாள்.

"கலர் டீ.வி., மிக்ஸி, இரும்பு அலமாரி, வெட் கிரைண்டர், புடவை துணிமணி ஏதாவது மாசாமாசம் அனுப்பறேன். கொண்டு வந்து கொடுக்கறேன். இந்தத் துணிமணி, இத்தனை சாமான் இங்க யார் கிட்ட இருக்கு? இங்க யார் வீட்ல கலர் டீ. வி. இருக்கு? சொல்லு."

அம்மா மறுபடி சிரித்தாள்.

"சொல்லேன். சிரிக்கறியே," முரளி சீறினான்.

"யாரும் என்கிட்ட வந்து கலர் டீ. வி. இருக்கா? இரும்பு பீரோ இருக்கான்னு கேட்கறதில்லே. 'புள்ளைக்குக் கல்யாணமாச்சே, மருமக உங்களோட இல்லையா?' ன்னு கேட்கறா. இன்னும் தனியாச் சமைச்சு சாப்பிடணுமான்னு கேட்கறா."

"பொழுது போகாத யாரோ..."

அம்மா கையமர்த்தினாள்.

"மரச் சாமான்களைவிட மருமகள் முக்கியம்னு எல்லார்க்கும் தெரியறது. உனக்குத் தெரியலே. மனுஷாளுக்கு மதிப்பு மனுஷா தான். ஊருக்குத் தெரியும். உனக்குப் புரியலே. விடு."

"நீ வரப் போறியா, இல்லையா?"

"மாட்டேன்."

"அவளை வந்து கூப்பிடச் சொல்லட்டுமா?"

"சொல்லு."

"அப்ப வருவியா?"

"கூட ஒரு பத்து ரூபா... வந்து கூப்பிட்டதுக்கு ஓதியிட்டுடு. 'உடம்புக்கு முடியலேம்மா'ன்னு சொல்லிடுவேன்."

"ஏன் பிடிவாதம் பிடிக்கறே?"

"நானா...?" அம்மா மறுபடி சிரித்தாள்.

"கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோயேன். அனுசரிச்சுப் போயேன்."

"போலாம். உறை மோர் கேட்டாக் கொடுக்கலாம். பதிலுக்கு இரண்டு துணுக்குக் கொத்தமல்லி எப்பவாவது வாங்கிக்கலாம். கொடுக்கிறவாளுக்கு மறுக்கத் தோணாது. கேட்டவாளுக்கும் வெட்கம் இருக்காது."

"அவதானே உனக்குக் கலர் டீ. வி. கொடுத்தா?"

"எடுத்துண்டு போ அந்தச் சனியனை. யார் கேட்டா உன்னைக் கலர் டீ. வி?" அம்மா இந்த முறை சீறினாள்.

"என்ன எழவு வேணுங்கறே?" முரளி பல் கடித்துக் கைநீட்டி அம்மாவைக் கடிந்து கொண்டான்.

அம்மா இந்தக் கூச்சலுக்கு முகம் வெளிறினாள். சுவரோரம் சரிந்து உட்கார்ந்தாள்.

"என்னை ரொம்பக் காயப்படுத்தாதேடா. வரவர எனக்குத் தாங்க முடியலே. உடம்பு பலம் போச்சு. மனசு பலமும் போச்சு. இப்படியே தனியா விட்டுடுடா என்னை. கடிச்சுத் துப்பினா வருஷக் கணக்கா வளரும் முரளி. துடைச்சுப் போடுகிற தெம்பு ரொம்பக் குறைஞ்சு போச்சு."

"அம்மா ப்ளீஸ்.,"

"இவ்வளவு மக்கா நீ இருப்பேன்னு நான் நினைக்கலே."

"மாமனார் வீட்டோட நான் இருக்கறது, உனக்கு அவமானம்."

"எனக்கு ஒரு அவமானமும் இல்லே. உனக்கு அவமானம். அது உனக்கு அவமானம்னு தெரியலையேன்னு எனக்கு வேதனை."

"பெரிய வீடு. நல்ல மனுஷா. சகல வசதியும் இருக்கு. லலிதா நல்லவம்மா. நான் சந்தோஷமா இருக்கேன்."

அம்மா யோசித்தாள்.

"நான் சந்தோஷமா இருக்கறது உனக்குப் பிடிக்கலையா? அது உனக்குச் சந்தோஷமில்லையா?"

அம்மா விரலால் வெறும் தரையில் கோலமிட்டாள்.

"அவாளா தேடிக் கண்டுபிடிச்சு, உத்தியோகம் வாங்கிக் கொடுத்து, பெரிய மனுஷனுக்குப் பொண்ணும் கொடுத்து... எல்லாருக்கும் கிடைக்குமா? எல்லாத்தையும் விடக் குழந்தை உன் பேரன் இல்லையா?"

"சரி, என்ன பண்ணணும் நான் இப்ப?"

"ஆயுஷ் ஹோமத்துக்கு வரணும்."

"வர்றேன்."

"லலிதாவை வந்து அழைக்கச் சொல்லட்டுமா?"

"வேண்டாம். நானே வர்றேன்."

"வரச் சொல்றேனே!"

"நீ கூப்பிடறயே அது போறும்."

"**வா**ங்கோ, வாங்கோ" சங்கரன் அம்மாவை வாசலுக்கு வந்து பலமாய்

வரவேற்றார். விடு கொள்ளாமல் நண்பர்கள். இரண்டு மூன்று உறவுகள். அம்மா பிள்ளையை வாங்கி ஹால் ஓரம் போய் உட்கார்ந்து கொண்டாள்.

"அடிக்குட்டி. அடி என் தங்கப்பா..." என்று கொஞ்சினாள். விபூதி பூசினாள். நெற்றிக்கும் கன்னத்துக்கும் திருஷ்டிப் பொட்டு இட்டாள்.

ஹோமத்தீ வளர்ந்தது.

மந்திரக் குடத்திலிருந்து நீர் தெளிக்கப் பட்டது. அம்மா நாய்க் காசும், தாயத்தும், சங்கும், நட்சத்திரமும் கோத்த தங்க அரை ஞாணை எடுத்து முதல் ஆசீர்வாதமாகக் குழந்தைக்கு ஓதியிட்டாள்.

"படுபேஷ் மாமி... இதெல்லாம் போடணும்னு யாருக்கும் தெரியாது. காப்புக் கட்டின மாதிரி ரொம்ப சாஸ்த்ரோக்தமாச் செய்யறது அந்தக் காலத்து மனுஷாதான்." ஹோமம் செய்த வாத்தியார் பாராட்ட முகம் மலர்ந்தாள்.

அரை ஞாண் இறுக்கமாய் இருந்தது. குழந்தை நல்ல வளர்ச்சி. இடுப்பு பிடித்தது. இறுக்கிப் பூட்டினார்கள். குழந்தை நெளிந்தான். மடியில் வைத்து வேடிக்கை காட்ட, சுற்றியிருந்தவர்கள் முகம் பார்க்க இடுப்பு இறுக்கம் மறந்தான்.

அழும்போது தேன் தடவினார்கள். புகை இணறுகிறது என்றார்கள். அரைஞாணுக்கு மேல் பட்டுச் சுற்றினார்கள்.

குழந்தை திணறினான். உடம்பைப் பிடித்துக் கொண்டான். ஏன் என்று தெரியாமல் தவித்தார்கள்.

ஹோமம் முடியும்போது குழந்தை அழத் துவங்கி விட்டான். திருஷ்டி என்று சுற்றிப் போட்டார்கள். பட்டுத் துணியில் சிறுநீர் கழிக்கப் பின்புறம் எடுத்துப் போனார்கள்.

அரை ஞாண் அழுந்தி, சங்கு, நட்சத்திரம் இடுப்பில் தடம் பதிந்து, ரத்தம் கசிந்து கசியல் மீதே மேலும் மேலும் குத்தித் தொட்டது. குழந்தை புழுவாய்த் துடித்தான்.

லலிதா நண்பர்களுக்கு முன் குழந்தை வீறிட்டு அழுவதைப் பார்த்துக் கலங்கினாள். இடுப்புக் காயம் பார்த்ததும் ரௌத்திர மானாள். விரல் விட்டுப் பட்டென்று அரை ஞாணை அறுத்தாள். விசிறி மூலையில் போட்டாள்.

போரிக் பவுடரை அப்பி மடியில் போட்டு அணைத்துக் கொண்டாள்.

"இதெல்லாம் எதுக்குப் போடறே லலிதா?" எவனோ கேட்ட போது பல் கடித்தாள்.

"சரி, சின்னக் காயம்தான் விடு" என்று முரளி முன் வந்து சொன்ன போது, பளீரென்று சீறினாள்.

"உங்களுக்கு அறிவே கிடையாது. போங்கோ உங்க வேலையப் பார்த்துண்டு" என்று கூச்சலிட்டாள்.

இந்தச் செயல் அம்மாவைத் தைத்து விட்டது.

சாப்பிடாமல் படியிறங்கிப் போனாள். கூடத்துக்கு நடுவே நாய்க்காசு, நட்சத்திரம், தாயத்து, சங்கு என்று கோக்கப்பட்ட தங்க இழை அறுந்து கிடந்தது.

(தொடரும்)

மகள்

தந்தி வந்ததும், அழகப்பன் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.

'ரேகாவுக்குப் பெண் குழந்தை — இன்று இரவு சுகப் பிரசவம் — உடனே புறப்பட்டு வரவும்' — மைத்துனன் நடராசன் சென்னையிலிருந்து தந்தியடித்திருந்தான்.

மாமனார் சாம்பசிவம், ஓர் இயந்திரம் வாங்குவது சம்பந்தமான அவசர வேலையாக தில்லி சென்றிருந்தார்.

ரேகாவுக்குப் பிரசவம் ஆக, இன்னும் இருபது நாட்களாகும் என்று ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் சொல்லியிருந்ததால், சாம்பசிவம் தில்லிக்குப் புறப்பட்டார். பத்து நாட்களில் திரும்பி விடலாம் என்ற திட்டத்துடன்தான் அவர் சென்றிருந்தார். ஆனால் அதற்குள்ளாகவே பிரசவம் ஆகிவிட்டது.

'பெரும்பாலும், சிஸேரியன் கேஸாகத்தான் இருக்கும்' என்று அழகப்பனிடமும் சாம்பசிவத்திடமும் சொல்லியிருந்தார் டாக்டர். ஆனால் நல்லவேளையாக, பிரசவம் 'நாரமலாக' நடந்திருப்பது, அழகப்பனின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது.

குழந்தையைப் பார்க்க அழகப்பன் உடனே புறப்படுவதற்கு, இரண்டு பிரச்னைகள் குறுக்கே நின்று கொண்டிருந்தன.

அந்தக் கிராமப் பகுதியில் கட்டப்படும் பாலத்தை இன்னும் ஒரு வாரத்திற்குள் முடித்தாக வேண்டும். அமைச்சர் ஒருவர் அதைத் திறந்து வைப்பதற்கான விழா ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து, அழைப்பிதழ்கள் கூட அனுப்பப்பட்டு விட்டன.

இரவும் பகலுமாக அந்தப் பாலத்தின் கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருந்தன. அதற்குப் பொறுப்பான என்ஜினீயர் என்ற முறையில் அழகப்பன், ஒரு மணி நேரம் கூட, அங்கிருந்து அசைய முடியாதபடி வேலைகள் இருந்தன.

அந்தத் தொகுதியில் இரண்டு மாதங்களில் ஓர் இடைத் தேர்தல் நடக்கவிருந்தது. அதிலே மாண்புமிகு அமைச்சர் ஒருவரே போட்டியிடப் போவதாகப் பலமான யூகங்கள் நிலவின. அதை ஊர்ஜிதம் செய்வது போல், பல சமுதாயத் திட்டப் பணிகளும் கட்டட வேலைகளும் 'போர்க்கால நடவடிக்கை' பாணியில் முடுக்கிவிடப் பட்டிருந்தன. பல முக்கியமான மேலதிகாரிகள் அந்தப் பகுதியிலேயே முகாம் செய்து, வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

காலஞ்சென்ற அந்த எம். எல். ஏ., தேர்தல் சமயத்தில் அள்ளி வீசிய ஏராளமான வாக்குகளில், அந்தப் பாலமும் ஒன்று.

அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதை விட, அந்தத் தொகுதியைக் காப்பாற்றியாக வேண்டிய அவசியம் ஆளும் கட்சிக்கு. ஆகவே காண்ட்ராக்டர் சாம்பசிவத்தைத் துரிதப்படுத்தியிருந்தார் அமைச்சர்.

இப்போது சாம்பசிவமும் தில்லியில் இருப்பதால், பாலத்தின் திறப்பு விழா முடிகிற வரை, அழகப்பன் அந்த இடத்தை விட்டு உடனடியாக அன்றைக்கே நகர முடியாது எனத் தோன்றியது.

இரண்டாவது பிரச்னை —

குழந்தை பிறந்த செய்தியை, அம்மாவுக்குத் தெரிவித்து, அவளையும் சென்னைக்குக் கூட்டிக் கொண்டு போவதா, வேண்டாமா...?

குழந்தை பிறந்த விஷயத்தை ரேகா, மாமியாருக்குத் 'தெரிவித்திருக்க மாட்டாள் என்பது உறுதி.

திருமணம் ஆனதிலிருந்தே, கருப்பாயியை நேரில் பார்க்கவே, ரேகாவுக்கு அருவருப்பு என்பது அழகப்பனுக்குத் தெரியும்.

சென்னையில், மாநிலத்திலேயே முதல் ராங்க் மாணவனாக, அழகப்பன் என்ஜினீயரிங் கல்லூரியில் தேறுவதற்கு முன்பே, அவனை ரேகாவுக்குத் தெரியும்.

'இண்டர் காலேஜியேட்' கலைவிழாவில் அவனைச் சந்தித்திருக்கிறாள் அவள்.

ஏறத்தாழ இருபது கல்லூரிகள் பங்கெடுத்துக் கொண்ட அந்தக் கலைவிழாப் போட்டிகளில், தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளிலும் கவிதைப் போட்டியிலும் முதற் பரிசுகள் பெற்றான் அழகப்பன்.

பெயருக்கேற்றபடி ஆணழகனாகத் திகழ்ந்த அவன், அந்த விழாவில் 'ஹீரோ'வாகப் பரிணமித்திருந்தான்.

இசைப் போட்டியில் ரேகாவுக்கு முதற் பரிசு கிடைத்தபோது, 'இவளுடைய இசைத் திறமையை விட, அழகுக் கவர்ச்சியிலேதான் நடுவர்கள் மயங்கி, முதல் 'பரிசு கொடுத்து விட்டார்கள்' என்ற கிசுகிசு எழுந்து பரவியது. இதைக் கேட்டு, ரேகாவுக்குத் துளியும் வருத்தம் இல்லை; தன் அழகைப் பற்றிய பெருமித உணர்வுதான் பொங்கித் திமிர்ந்தது.

படிப்பு முடிந்ததும், காண்ட்ராக்டர் சாம்பசிவத்தின் எஸ். எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்

அப்ச்சன்

கம்பெனிக்கு என்ஜினீயர் வேலைக்கு விண்ணப்பித்திருந்தான் அழகப்பன்.


இண்டர்வியூவில் அவனைப் பார்த்ததுமே, பிடித்துப் போய்விட்டது சாம்பசிவத்துக்கு. உடனடியாக கைநிறையச் சம்பளத்தில் அவனுக்கு வேலை கொடுத்துவிட்டு, மறுநாள் தன் பங்களாவுக்கு அவனைக் கூட்டிச் சென்ற போது, ரேகாவின் கருவிழிகள் மகிழ்ச்சியில் மின்னி ஜொலித்ததை நுட்பமாகக் கவனித்த காண்ட்ராக்டர், அவனையே மாப்பிள்ளையாக்கிக் கொள்ள முடிவு செய்து விட்டார்.

பரம்பரைப் பணக்கார மாப்பிள்ளையை விட, ஏழையாகப் பிறந்து வளர்ந்த மாப்பிள்ளைதான், தன் செல்ல மகளை அருமை பாராட்டிச் சீராட்டிக் கொண்டாடுவான் என்ற நம்பிக்கை அவருக்கு.

முறைப்படி பெண் கேட்க, கிராமத்திலிருந்து அம்மாவையும் தாய் மாமனையும் கூட்டி வந்து, சாம்பசிவத்தின் பங்களாவுக்கு அழைத்துச் சென்றான் அழகப்பன்.

அழகப்பனின் தாய் கருப்பாயியின் தோற்றத்தைப் பார்த்ததும், ரேகாவின் உள்ளத்தில் துணுக்கென்று என்று ஓர் அதிர்ச்சி வெடித்தது.

செக்கச் செவேல் என்று கனல்விடும்





மனைவி: "என்னங்க, இன்னிக்கு, ஆபீஸ்லே புதுசா லேடி டைப்பிஸ்ட் வர்றாளா?"

கணவன்: "எப்படிக் கண்டுபிடிச்சே...?"

மனைவி: "மண்ணாங்கட்டி! முழு டப்பாப் பவுடரும் காலி!"

— ஆர். வசந்தகுமார்

நெருப்புத் துண்டைத் தண்ணீரில் அமுக்கி யெடுத்த மாதிரி பளபளக்கும் கறுப்புநிற உடல், வேப்பெண்ணெய் தடவி, சுற்றிலும் மணம்பரப்பியவாறு, பக்கவாட்டில் அள்ளிச் செருகிய கூந்தல், கிராமத்துப் பாணியில் நீண்ட துளையுடன் தோளைத் தொடும் அளவில் தொங்கிக் கொண்டிருக்கும் காதுகள், இருக்கிற இடமே தெரியாமல் பதுங்கிக் கிடக்கும்மூக்கு, அதற்கு எதிரிடையாக புஸ் என்று உப்பிப் பருத்திருக்கும் கன்னங்கள், பெரிய சைஸ் பல் வரிசையைப் பார்க்கப் பயந்து போய், பின்வாங்கி நிற்கும் மோவாய், மேற்பக்கத்தில் நீண்ட சதுரமாக மடித்துக் கிடக்கும் தட்டுக் கொசவப் புடைவைக் கட்டு...

— முற்றிலும் பத்தாம்பசலிக் கிராமிய மண் வாசனை மணக்கும் கருப்பாயியின் மகனா, இந்த அழகப்பன்...?

நாகரிகமான ஸோபா ஸெட்டில் உட்காரத் தெரியாமல், நுனியில் கோணல் மாணலாக ஆரோகணித்திருந்த கருப்பாயியே, பேச்சு வாக்கில் இந்தச் சந்தேகத்துக்கு விடையளித்தாள்:

"ஊர்லே, எல்லாரும் ஆச்சரியப்படுவாக, இந்தக் கரிக்கட்டைக்கா இம்புட்டு அளகான புள்ளைன்னு... என் புள்ளை, என்னாட்டமும் இல்லே... எங்க வூட்டுக்காரராட்டமும் இல்லே... எங்கமாமனாரோடசாடை இவன்... எங்க மாமனாரு, அந்தக் காலத்திலே கூத்திலே ராசபார்ட் வேசம் கட்டி நடிச்சவுக... தொட்டா ரத்தம் தெறிக்கிறாப்பலே செவப்பா இருப்பாக... அளகிலே ராசாவாட்டம் இருப்பாக... அவுகளை அப்படியே உரிச்சு வச்சுக்கிட்டு இவன் பொறந்திருக்கான்..."

தன் வருங்கால மாமியாரின் எதிரே நின்று பேசவே, ரேகாவுக்கு, என்னவோ போலிருந்தது. அந்த நீண்ட துளையிட்ட தொங்குக் காதுகளும், மூக்கைத் துளைக்கும் வேப்பெண்ணெய் நாற்றமும், அந்த 'காலேஜ் பியூட்டி'க்குப் பிடிக்கவேயில்லை.

ஆனால், அந்த அவலட்சணத் தாய்க்காக, அழகப்பனை விட்டுவிடவும் அவளுக்கு மனம் இல்லை.

திருமண வரவேற்பில், 'உன் மதர் இன்லா எங்கே...? அறிமுகப்படுத்தி வை...' என்று நச்சரித்த தோழிகளிடமிருந்து சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டு விட்டாள் ரேகா.

சென்னையில் நடந்த திருமணத்திற்குப் பிறகும், அழகப்பனுடைய கிராமத்திற்குப் போக விரும்பாமல், ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி விட்டாள் அவள்.

"ஏலே அளகு! கல்யாணமானதும், புருசன் பொண்டாட்டி, நம்ம ஊர் நாச்சியம்மன் கோயிலுக்குப் போயி பொங்கல் வச்சு, மாவௌக்கு ஏத்தி, சாமி கும்பிடோணும்டா..." என்று, மணமக்களைத் தன்னுடன் அழைத்துப் போகத் துடித்தாள் கருப்பாயி.

மாமியாரோடு ஊருக்குச் செல்ல ரேகாவுக்குச் சிறிதும் விருப்பமில்லை என்பதைப் புரிந்து கொண்டான் அழகப்பன்.

"ஆத்தா! நாச்சியம்மன் கோயிலுக்கு, அப்புறமாப் போயிக்கலாம். இப்போ நான் மெட்ராஸை விட்டு வர முடியாது. ஏகப்பட்ட பிசினஸ் கமிட்மெண்ட்ஸ் இருக்கு. ஐ கெனாட் போஸ்ட்போன் தெம்..." என்று இங்கிலீஷில் பேசி, தாயின் வாயை அடைத்துவிட்டு, அவளை மட்டும் கிராமத்துக்கு அனுப்பி வைத்தான் மகன்.

கிராமத்துக்குப் போன பிறகும், மூன்று நான்கு கடிதங்கள் எழுதி விட்டாள் கருப்பாயி.

'பட்டணத்துக்கு வந்து உன்னையும் மருமகளையும் பார்க்கணும்னு ஆசையாயிருக்கு. நீ உடனே இங்கு வந்து என்னைக் கூட்டிக் கிட்டுப் போ...' — என்று அவள் எழுதிய கடிதங்களெல்லாம், முதலில் ரேகாவின் பார்வைக்குத்தான் வந்தன.

"ஐயையோ! வேண்டாங்க. அவங்க நம்ம வீட்டுக்கு வந்திருக்கிற போது, யாராவது என் ஃப்ரண்ட்ஸ் வந்திட்டா, அவங்களை என் மாமியார்னு அறிமுகப்படுத்த வேண்டியாயிடும். ப்ளீஸ், அவங்க அங்கேயே இருக்கட்டும்...." என்று சொல்லிவிட்டாள் மருமகள்.

தாயின் ஆசை பொங்கும் கடிதங்களுக்கு, அவ்வப்போது ஏதேதோ பொய்க் காரணங்களைச் சொல்லி, அவன் ஊருக்குப் போகாமலே இருந்துவிட்டான்.

ரேகா கர்ப்பமானதும், அவனுக்கு ஓர் அருமையான உண்மைக் காரணமே கிடைத்து விட்டது!

'இப்போது ரேகா பிரயாணம் எதுவும் செய்யக் கூடாது என்று டாக்டர் சொல்லி விட்டார். அதுமட்டுமில்லை, பிரசவம் கூட ஆபரேஷனில்தான் நடக்கும்என்றும்எச்சரித்திருக்கிறார். அதனால், இப்போதிருந்தே ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது... அவள் மெட்ராஸை விட்டு எங்கேயும் போகக் கூடாது என்று குடும்ப டாக்டர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். பிரசவம் முடிந்ததும் நாங்கள் ஊருக்கு வருகிறோம். நீ அங்கேயே இருந்து வயல் வேலை



''தலைவரே... என் பையன் ப்ளஸ்டுவில், ஓர் அறுபது மார்க் வித்தியாசத்தில் பெயிலாகிட்டான். நீங்கதான் எப்படியாவது, என்ஜினியரிங் சீட்டு வாங்கித் தரணும்...''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

''என்ன சார், போன்லே 'டக்.... டக்...'ன்னு யாரோ நடக்கிற மாதிரி, சத்தம் கேட்குது?''

''க்ராஸ் வாக்கா, இருக்கும்!''

— ஆர். வசந்தகுமார்



களைப் பார்த்துக் கொள். இனிமேல், வயலைக் குத்தகைக்கு விட வேண்டாம். நீயே நேரடியாகப் பயிர் செய்தால், நமக்கு வருமானம் அதிகமாகக் கிடைக்கும், இல்லையா..? நம் செலவுக்கும், உபயோகமாயிருக்கும்...' — என்று கடிதங்கள் எழுதி, தாய்க்கு ஊரிலேயே பொறுப்பான வேலை கொடுத்து உட்கார்த்திவிட்டான் மகன்!

பேத்தி பிறந்த செய்தியை, கருப்பாயிக்குத் தெரிவிப்பதா, வேண்டாமா என்ற யோசனையிலேயே, மூன்று நாட்கள் ஓடிவிட்டன...

நான்காவது நாள் —

இன்னொரு தந்தி, ரேகாவிடமிருந்து வந்ததும், அழகப்பன் திகைத்துப் போய் விட்டான்!

'நானும் குழந்தையும் நலமாயிருக்கிறோம். அத்தையைக் கூட்டிக் கொண்டு உடனே வரவும் — ரேகா.'

திடீரென்று அவளுக்கு எப்படி அத்தை மேல் கரிசனம் ஏற்பட்டது?

மகிழ்ச்சியும், திகைப்புமாக திணறிப் போன அழகப்பன், தன் உதவியாளர்களிடம், செய்ய வேண்டிய மீதி வேலைகளைப் பற்றி இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான்.

கிராமத்துக்குப் போய், அம்மாவைக் கூட்டிக் கொண்டு சென்னை வந்தான், அழகப்பன்.

மருத்துவமனையில், ரேகா மாமியாரைச் சிரித்த முகத்துடன் வரவேற்றாள்.

''வாங்க அத்தை...! என்ன இப்படி இளைச்சுப் போயிட்டீங்க அத்தை?'' என்று மனப்பூர்வமாகவே, பரிவுடன் கேட்டாள் மருமகள்.

''ஒண்ணுமில்லே ஆத்தா...! ஒனக்கு ஆபரேசன்லேதான் புள்ளை பொறக்கும்னு டாக்டரு சொன்னாகன்னு அளகப்பன் எளுதியிருந்தான். 'அப்படி ஆயிடாம, சுகப்பிரசவமாய் நடந்து ஆத்தாளும் புள்ளையும் பொழச்சுக் கிடக்கணும், தாயே'ன்னு நம்ம நாச்சியம்மனை வேண்டிக்கிட்டு நாப்பது நாள் வெரதம் இருந்தேன். தெனமும் ஒரு வேளை சாப்பாடுதான்... என் ஒடம்பு எளைச்சுட்டா என்ன, என் ஆத்தா நாச்சியம்மா நல்லபடியாத் தாயையும் புள்ளையையும் தனித்தனியே எடுத்துப் போட்டுட்டாளே...!'' என்று பெருமூச்சுவிட்டு, மேலே நிமிர்ந்து மானசீகமாகக் குலதெய்வத்தைத் தரிசனம் செய்து கும்பிட்ட மாமியாரின் அன்பிலே உள்ளம் நெகிழ்ந்து போனாள் ரேகா.

தொட்டிலில் புதுமலராய்ச் சிரித்துக் கிடந்த குழந்தையைப் பார்த்த அழகப்பனுக்கு மற்றோர் அதிர்ச்சி!

கர்ப்பமாயிருக்கும் போது, ரேகா கிலோ கணக்கில் சாப்பிட்ட காஷ்மீர் குங்குமப் பூவையெல்லாம் விழுங்கிவிட்டு — அம்மா அப்பா யாருடைய உடல் நிறமும் இல்லாமல், கருப்பாயியின் நிறத்தில் குழந்தை பிறந்திருந்தது!

நீண்ட முகம், பதுங்கிய மூக்கு, உப்பிய கன்னங்கள், பின்வாங்கிய மோவாய்... எல்லாம் அப்படியே கருப்பாயிதான்!

பேத்தியை அள்ளியெடுத்துப் பாசத்தைப் பொழிந்து கொஞ்சிக் கொண்டிருந்தாள் கருப்பாயி.

''ரேகா...!'' என்று வாஞ்சையோடு அவளுடைய வெளுத்த நெற்றியை மெல்ல நீவியவாறு, பக்கத்தில் உட்கார்ந்தான் அழகப்பன்.

''அத்தையோட முகத்தைப் பார்க்கவே அருவைப்பட்டேன், இல்லையா? அதுக்காக, கடவுள் என்ன செஞ்சிட்டார், பார்த்தீங்களா? அவங்களோட முகத்தையே நான் பார்த்துக்கிட்டிருக்கும்படி செஞ்சிட்டார்'' என்று நிறைவாகச் சிரித்த மனைவியின் முகத்தில், பழைய இளமைக் கவர்ச்சி, புதிய தாய்மையழகாகப் பரிணமித்து, விகசிப்பதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் அவன்.



அத்தியாயம் 8
பூதத் தீவு

வானமா தேவி இருக்கிறாளே, அவள் புத்தி விசாலத்தில் மனித குலத்தை ஒத்தவள்தான் போலும்! பரஞ்சோதியாகிய இறைவனை மனிதர்கள் தங்கள் இதய ஆகாசத்திலிருந்து நழுவிச் செல்ல விட்டு விடுகிறார்கள். பிறகு, இருண்ட ஆலயங்களின் பிராகாரங்களிலும், கர்ப்பக்கிருஹங்களிலும் லட்ச தீபம் ஏற்றி அந்தப் பரஞ்சோதியைத் தேடுகிறார்கள்!

வானமாதேவியும் அத்தகைய புத்திசாலித்தனமான காரியத்தைத் தினந்தோறும் செய்கிறாள்! ஜோதிமயமான சூரிய பகவானைத் தன் வசத்திலிருந்து கடலில் நழுவ விட்டு விடுகிறாள். பிறகு தன் நாதனைக் காணவில்லையே என்ற கவலை அவளுக்கு உண்டாகி விடுகிறது. லட்ச தீபம் ஏற்றிச் சூரியனைத் தேடுகிறாள்? லட்ச தீபம் மட்டுமா ஏற்றுகிறாள்? கோடானுகோடி தூங்கா விளக்குகளை ஏற்றி இரவெல்லாம் அவளும் தூங்காமல் சூரியனைத் தேடிக் கொண்டிருக்கிறாள்.

வந்தியத்தேவனுக்கு உணர்வு வந்து கண்ணைத் திறந்து பார்த்தபோது, தன் கண் முன்னே பல்லாயிரம் தீபச் சுடர்கள் மின்னுவதைக் கண்டான். எந்தக் கோவிலிலே இவ்வளவு அலங்காரமாக லட்ச தீபம் ஏற்றியிருக்கிறார்கள் என்று வியந்தான். பின்னர், அவை தீபங்கள் அல்லவென்றும் வானத்தில் சுடர்விடும் நட்சத்திரங்கள் என்றும் உணர்ந்தான். படகில் தான் அண்ணாந்து படுத்திருப்பதையும் தன் இடுப்பைச் சுற்றி ஈரத் துணியின் மீது கயிறு ஒன்று கட்டியிருப்பதையும் அறிந்தான்.

ஜிலு ஜிலுவென்று குளிர்ந்த காற்று அவன் உடல் மீது பட்டு அவனுக்கு எல்லையற்ற சுகத்தையும் அமைதியையும் அளித்தது.

அமரர் கல்கி

அமைதியான கடலில் எழுந்த ஓங்கார நாதம் அவன் உள்ளத்தில் அபூர்வமான சாந்தியை உண்டாக்கியது.

அந்த நாதத்தினிடையே ஒரு கீதமும் கேட்டது. அது என்ன கீதம்? அதை அவன் இதற்கு முன் எங்கே எப்பொழுது கேட்டிருக்கிறான்?

"வாரிதியும் அடங்கி நிற்க
மாருதமும் தவழ்ந்து வர
காரிகையென் உளந்தனிலே
காற்று சுழன் றடிப்பதுமேன்?
அலைகடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல் தான் பொங்குவ
தேன்?"

ஆகா! அந்த விசித்திரமான பெண்! பூங்குழலி! சற்று நிமிர்ந்து உட்கார்ந்து எதிரே பார்த்தான். ஆம், அவள்தான்! படகு தள்ளிக் கொண்டிருக்கிறாள்! அந்தச் சோக கீதத்தைப் பாடிக் கொண்டு படகு வலிக்கிறாள்! காரிருளிலே ஒரு மின்னல் மின்னிப் பல பொருள்களை ஒரு நொடிப் பொழுதில் காட்டி விடுவது போல், முன்னிரவில் நடந்ததெல்லாம் வந்தியத்தேவனுக்குப் பளிச்சென்று ஞாபகம் வந்தது. அதாவது, அவன் கடலில் தத்தளித்தபோது பூங்குழலியும் கடலில் குதித்து அவனை நோக்கி வந்த வரையிலேதான். பிறகு நடந்தது ஒன்றும் அவனுக்கு நினைவில் இல்லை. தன்னை அந்தப் பெண் காப்பாற்றிப் படகில் ஏற்றியிருக்க வேண்டும். படகு அசையும்போது தான் மீண்டும் கடலில் விழுந்து விடாமலிருப்பதற்காக இடுப்பில் கயிற்றைச் சுற்றிப் படகின் குறுக்குக் கட்டையில் சேர்த்துக் கட்டியிருக்கிறாள். கயிறு உடம்பின் தோலில் பட்டு வலிக்காதபடி அரை ஆடையின் மீது சுற்றிக் கட்டியிருக்கிறாள்.

இடுப்புத் துணியைச் சுற்றியிருந்த அரைச் சுருளை வந்தியத்தேவன் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பணமும் ஓலையும் பத்திரமாயிருக்கக் கண்டான். ஆகா! இந்தப் பெண் மீது தான் சந்தேகங் கொண்டது எவ்வளவு பெரிய தவறு? வேறு விதமான துர்நோக்கம் இவளுக்கு இருந்தால் தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டிய அவசியமில்லையே? கை சளைத்து உணர்விழந்த தன்னைக் கடலிலிருந்து படகில் ஏற்றுவதற்கு இவள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்? எப்படித்தான் தன்னந்தனியாகச் செய்தாளோ? அபூர்வமான நங்கை இவள்!

இதோ அவள் எழுந்திருக்கிறாளே, ஏன்? தான் விழித்து விட்டதைப் பார்த்துவிட்டுத்தான் தன்னை நெருங்கி வருகிறாளோ? வந்து என்ன செய்யப் போகிறாள்? இல்லை, இல்லை! வேறு ஏதோ செய்கிறாள். ஆகா! பாய் மரத்தில் பாயைக் கட்டப் போகிறாள்! எவ்வளவு கடினமான வேலை! அதுவும் தன்னந்தனியாகச் செய்வது?

"பூங்குழலி! பூங்குழலி!"

"ஓகோ! விழித்துக் கொண்டு விட்டாயா?"

"என் கட்டை அவிழ்த்து விடு! நானும் உனக்கு உதவி செய்கிறேன்."

"நீ சும்மாயிருந்தால் போதும்; அதுவே பெரிய உதவி. கயிற்றை அவிழ்க்க வேண்டுமென்றால் நீயே அவிழ்த்துக் கொள்ளலாம். ஆனால் மறுபடியும் கடலில் குதித்து விடாதே!"

வந்தியத்தேவன் தன்னைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டுக் கொண்டான்.

பூங்குழலி பாய் மரத்தைத் தூக்கி நிறுத்தினாள்; அதில் பாயை விரித்துப் பறக்க விட்டாள். படகு இப்போது உல்லாசமாகச் சென்றது. விரைவாகவும் சென்றது.

"சமுத்திர குமாரி!"

"ஏன்?"

"தாகமாயிருக்கிறது."

உப்புத் தண்ணீர் குடித்திருக்கிறாய் அல்லவா? தாகமெடுக்காமல் என்ன செய்யும்?"

சுரைக் குடுக்கை ஒன்றை எடுத்துக் கொண்டு சமுத்திரகுமாரி வந்தியத்தேவன் அருகில் வந்தாள்.

"உனக்குச் சாப்பாடு கூடக் கொண்டு வந்தேன். நீ கடலில் குதித்த போது அதுவும் விழுந்து விட்டது! நல்ல வேளையாக இந்தச் சுரைக் குடுக்கை தப்பிப் பிழைத்தது."

இப்படிச் சொல்லிக் கொண்டே சுரைக் குடுக்கையை மூடியிருந்த தக்கையை எடுத்து விட்டுக் கொடுத்

தாள். வந்தியத்தேவன் அதை வாங்கித் தண்ணீர் குடித்தான்.

தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டு, "உன்னைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டு விட்டேன். அதற்காக வருத்தப்படுகிறேன்" என்றான்.

"அதனால் ஒன்றும் பாதகமில்லை. நீ யாரோ? நான் யாரோ? பொழுது விடிந்தால் பிரிந்துவிடப் போகிறோம்."

"இப்போது நேரம் என்ன?"

"வானத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்; சப்தரிஷி மண்டலத்தைப் பார்!" என்றாள் பூங்குழலி.

வந்தியத்தேவன் வட திசையில் அடிவானத்தைப் பார்த்தான். அவன் படகு ஏறும் போது பார்த்ததற்கு இப்போது சப்தரிஷிகள் இடம் மாறிப் பாதி வட்டம் வந்திருந்தார்கள். அந்த அருந்ததி நட்சத்திரம் வசிஷ்டருடன் எப்படி ஒட்டிக் கொண்டே வருகிறது! அதிசயந்தான்! துருவ நட்சத்திரம் மட்டும் இருந்த இடம் விட்டு அசையவில்லை. வான வெளியும் மூலைக் கடலும் சேரும் அந்த இடத்தில் துருவ நட்சத்திரம் யுக யுகமாக நிலைத்து நின்று வருகிறது! எத்தனை எத்தனையோ கப்பல் மாலுமிகளுக்கு வழியும் திசையும் காட்டிக் கொண்டு வருகிறது. துருவ நட்சத்திரம் — அதை யாருக்கோ உதாரணமாகச் சொன்னார்களே? யார் சொன்னது? யாரைச் சொன்னது? ஞாபகம் வருகிறது. குடந்தை ஜோசியர் சொன்னார். இளவரசர் அருள்மொழி வர்மருக்கு வடதுருவத்தை உதாரணமாகச் சொன்னார். இளவரசரைப் பார்க்கும் பேறு நமக்கு உண்மையிலேயே கிடைக்கப் போகிறதா? இந்தப் பெண்ணின் உதவியினால் கிடைக்கப் போகிறதா?

பூங்குழலி தன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

"நேரம் என்னவென்று தெரிந்ததா? மூன்றாம் ஜாமத்தில் பாதி நடக்கிறது. காற்றுத் திரும்பி விட்டது. பொழுது விடிய நாகத்தீவுக்குப் போய் விடுவோம்" என்றாள்.

"நாகத் தீவா?" என்று வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

"ஆமாம்; இலங்கையின் வடபகுதி ஓரத்தில் பல தீவுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று நாகத் தீவு. அதில் இறங்கினால் மறுபடியும் கடலைக் கடக்கும் அவசியமில்லாமல் கரை வழியாகவே இலங்கைத் தீவை அடைந்து விடலாம்......"

"என்னை இறக்கி விட்ட பிறகு நீ என்ன செய்வாய்?"

"என்னைப் பற்றி உனக்கு என்ன கவலை?" என்றாள் பூங்குழலி.

"எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்தாய் அல்லவா? உன்னிடம் நான் நன்றி செலுத்த வேண்டாமா? என்னிடம் ஏதோ பிரதி உபகாரம் கேட்கப் போவதாகச் சொன்னாயே, அது என்ன?" என்றான்.

"அந்த எண்ணத்தை நான் மாற்றிக் கொண்டு விட்டேன். உன்னிடம் ஒன்றும் நான் கேட்கப் போவதில்லை. நீ நன்றி இல்லாதவன்."

அவள் அவ்விதம் குற்றம் சாட்டுவதற்குக் காரணம் உண்டு என்பதை வந்தியத்தேவன் உணர்ந்தான். மீண்டும் ஒருதடவை அரைச் சுருளைத் தடவிப் பார்த்துக் கொண்டு ஓலை இருக்கிறது என்று உறுதி பெற்றான்.

"சமுத்திரகுமாரி! நேற்று முன்னிரவில் உன்னைச் சந்தேகித்து நடந்து கொண்டதை நினைத்தால் எனக்கு வெட்கமாயிருக்கிறது. அதற்காக என்னை மன்னித்துவிடு!"

"ஆகட்டும்; நீயும் அதை மறந்துவிடு! நடக்க வேண்டியதைப் பற்றி யோசி! இலங்கையில் உன்னை நான் இறக்கி விட்ட பிறகு என்ன செய்வாய்? இளவரசர் இருக்குமிடத்தை எப்படிக் கண்டுபிடிப்பாய்?"

"இந்தக் கடலைக் கடப்பதற்கு எனக்கு உதவி செய்த கடவுள் அதற்கும் உதவி செய்வார்!"

"கடவுளிடம் உனக்கு மிக்க நம்பிக்கை போலிருக்கிறது. நம்மைப் போன்ற அற்ப மனிதர்களின் காரியங்களில் கடவுள் சிரத்தை கொள்கிறார் என்று நினைக்கிறாயா?"



அருள்வாக்கு

கிருஹஸ்தாசிரமத்தைத் தமிழில் இல்லறம் என்பார்கள். கிருஹம் என்றால் இல்லம் தான். ''இல்லறமல்லது நல்லறமல்ல'' என்று தர்மசாஸ்திரங்களைப் போலவே தமிழ் ஆன்றோர்களும் இந்த ஆசிரமத்தைத் தான் சிறப்பிக்கின்றனர்.

'கிருஹம்' என்றால் வீடு. குருவின் வீட்டிலிருந்து வந்து சொந்த வீட்டில் தர்மங்களை நடத்துபவன் கிருஹஸ்தன். கிருஹத்தில் இருப்பவன் கிருஹஸ்தன். அவனை அகமுடையான், அகத்துக்காரன், வீட்டுக்காரன் என்றெல்லாம் வீட்டுக்கு முக்கியஸ்தனாக வைத்தே பத்தினியானவள் குறிப்பிடுகிறாள். பத்தினியைத் தவிர மற்றவர்கள் அவனை இப்படிச் சொல்வதில்லை. அந்தப் பத்தினியை, 'கிருஹிணி' என்றே சொல்கிறார்கள். 'கிருஹஸ்தை' என்று சொல்வதில்லை. அதைவிட 'கிருஹிணி' என்பதால் வீட்டிலே அவளுக்குத்தான் முக்கியத்துவம் அதிகம் என்று தெரிகிறது. 'கிருஹஸ்தை' என்றால் ''வீட்டிலே இருப்பவள்'' என்று மட்டுமே ஆகும். ஆனால் கிருஹிணி என்கிற போதோ, வீடே இவளுடையதுதான். இவள் தான் வீட்டை நிர்வாஹம் பண்ணுகிறவள் என்ற உயர்ந்த அர்த்தம் ஏற்படுகிறது. தமிழிலும் புருஷனை 'இல்லறத்தான்'—இல் அறத்தான் என்பதாக கிருஹத்தில் பண்ண வேண்டிய தர்ம கார்யங்களைச் செய்ய வேண்டியவன் என்றே குறிப்பிட்டு விட்டு பத்தினியைத்தான் 'இல்லாள்' என்பதாக வீட்டுக்கே உடைமைக்காரி என்கிற மாதிரி சொல்லியிருக்கிறது. 'இல்லான்' என்று புருஷனைச் சொல்வதில்லை. அப்படிச் சொன்னால் 'ஒன்றும் இல்லாதவன்' என்றே ஆகும். இல்லத்தரசி, மனைவி, மனையாள் என்று பத்தினியைச் சொல்வது போல் புருஷனை இல்லத்தரசன், மனைவன், மனையான் என்று சொல்வதில்லை. தெலுங்கிலும் பத்தினியையேதான் 'இல்லு' என்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

''அவ்வளவு தூரம் நான் தத்துவ விசாரணை செய்ததில்லை. ஏதாவது கஷ்டமோ, அபாயமோ நேர்ந்தால் கடவுளைப் பிரார்த்திப்பேன். கடவுளும் சமயத்தில் உதவி செய்வார். இந்தக் கடலில் எனக்குப் படகு தள்ளுவதற்காகக் கடவுள் உன்னை அனுப்பி வைத்தார் அல்லவா?''

''அவ்வளவு கர்வம் உனக்கு வேண்டாம். நான் உனக்காகப் படகு தள்ள வரவில்லை. என்னை 'உனக்கு உதவி செய்யும்படி' கடவுள் கனவிலே சொல்லி அனுப்பவும் இல்லை......''

''பின் எதற்காக நேற்று என்னைத் தப்புவித்தாய்? எதற்காக இப்போது படகு தள்ளிக் கொண்டு வருகிறாய்?''

''அதைப் பற்றி நீ கேட்க வேண்டாம். அது என் சொந்த விஷயம்.''

வந்தியத்தேவன் மௌன சிந்தனையில் ஆழ்ந்தான். அவனுடைய கர்வங் கொண்ட உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. தன்னுடைய வீர சௌந்தரிய வடிவழகைக் கண்டு தன் பேரில் இப்பெண் மோகங் கொண்டு விட்டாளோ என்று நினைத்தான். உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். இவளுடைய பேச்சும் நடவடிக்கைகளும் அம்மாதிரி எண்ண இடந்தரவில்லை. வேறு ஏதோ மர்மமான காரணம் இருக்கிறது. இவளுடைய வாயைப் பிடுங்கி அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

''ஒரு விஷயத்தை நினைத்தால் கொஞ்சம் எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது......'' என்றான்.

''அது என்ன? உனக்குக் கூடவா கவலையாயிருக்கிறது?''

''இலங்கையில் காடும் மலையும் அதிகம் என்று சொல்கிறார்கள்.''

''இலங்கையில் பாதிக்கு மேலே காடும் மலையுந்தான்.''

''காட்டுமிருகங்கள் அங்கே அதிகம் என்று சொல்கிறார்கள்.''

''காட்டு யானைகள் மந்தை மந்தையாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். சில சமயம் காடுகளுக்கு வெளியிலும்


BRITANNIA
Marie
BRITANNIA
டீ காப்பியோடு சேர்த்தி: பிரிட்டானியா மாரி நேர்த்தி.
பிரிட்டானியா
மாரி
LINTAS BIN MRE 11 2416 TM

"என் மகளுக்கு கேர்:.ப்ரீ வாங்கித்தர
நான் முடிவுசெய்தது ஏனென்றால்."

வளரும் வயதில் ஒரு சிறுமியின் வாழ்க்கையில் வயதுக்கு வருவது ஒரு சங்கடமான காலக் கட்டம் ஆகும். அந்த 5 நாட்களும் அவளுக்கு ஏற்படும் பயம், தவிப்பு, சங்கடம்... இந்த நாட்களை அவள் கடந்தாக வேண்டும்.



நான் ஒரு தாய். நானும் இந்தக் காலக் கட்டத்தை அனுபவித்தவள் தானே. எங்கள் காலத்தில் சானிடரி பாதுகாப்பிற்கு தேவையானவற்றை வீட்டிலேயே தயாரித்துக் கொள்வோம். அதை மீண்டும் உபயோகப் படுத்துவதற்காக துவைத்துக் காயப்போட்டு போதும் போதும் என்றாகிவிடும்! அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்குக் கூட அந்த 5 நாட்கள் விஷயம் பரப்படுத்தப்பட்டுவிடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும் கூட தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பது நிச்சயமில்லை.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது! நான் வாழ்ந்த காலம் வேறு. இப்போது என் மகள் வாழும் காலம் முற்றிலும் மாறுபட்டது. இன்றைய இளம் பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடிப்போடு செயல்பட வேண்டியுள்ளது. எங்கள் காலத்தில் இருந்ததைவிட அவர்கள் உலகத்தோடு ஓட்டி மிகவும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டியுள்ளது.

கேர்ஃப்ரீ. காரணம்,

OBM/9073/TAM

அதனால்தான் என்மகளுக்கு கேர்ஃப்ரீ தேர்ந்தெடுத்தேன்! நான் இளம்பெண்ணாக இருந்தபோது அனுபவப்பட்டதைப் போல என் மகளும் சிரமப்படக் கூடாது என்று விரும்புகிறேன்.

கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். ஆகவே துவைத்துக் காயப்போடும் சிரமம் அவளுக்கு இல்லை. தேவையானபோது ஒவ்வொரு முறையும் புத்தம் புதிய சுத்தமான ஒரு நாப்கினை



உபயோகிக்கலாம். ஒரு தாயாகிய எனக்கு அதைவிட முக்கியம் என்னவென்றால் கேர்ஃப்ரீ மிக மிக சுகாதாரமானது

கேர்ஃப்ரீயைப் போன்ற ஒரு மெல்லிய அடக்கமான நாப்கின் முழுமையான பாதுகாப்புத்தருமா? நிச்சயம் தரும்! நவீன தொழில் நுட்பம் மிகவும் வளர்ந்துள்ள காலம் இது. அதிகம் உறிஞ்சக்கூடிய ஒரு சானிடரி நாப்கின் கனமாக இருக்கவேண்டு மென்பதில்லை என்பதை நான் உணர்கிறேன்.

உலர்வும் சுகமும்:

கேர்ஃப்ரீ அதிகம் உறிஞ்சக்கூடிய அடுக்குகள் கொண்டது. அவை. மாதவிலக்கை விரைவாக நாப்கினுள் இழுத்துக் கொள்கிறது. உண்மையிலேயே. அது தன்னை எப்போதுமே உலர்வாகவும் சுகமாகவும் வைத்துக் கொள்வதாக என் மகளே கூறுகிறாள்.

கேர்ஃப்ரீ, எக்ஸ்ட்ரா லார்ஜ் சைஸிலும் வருகிறது— அது நீண்ட அகன்ற தடிப்பான நாப்கினாகும். கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ், என்மகளுக்கு, மாதவிலக்கு அதிகமாகவரும் அந்த 5 நாட்களில் அல்லது அவளுக்கு தேவைப்பட்ட போது, கூடுதலான பாதுகாப்பையும் கூடுதலான பத்திர உணர்வையும் அளிக்கிறது.

அவள் வெளியில் சென்று சுறுசுறுப்பாக சுற்றிவந்தாலும் கூட பாதுகாப்பாகவும் பத்திரமாகவும் உணர்கிறாள்.

ஆகவே, எங்கள் காலத்தில் கிடைக்காத ஒன்றை. இப்போது என் மகளுக்கு தர முடிவதை எண்ணி பூரிப்படைகிறேன்... அதுதான் கேர்ஃப்ரீ வசதி. கேர்ஃப்ரீ பாதுகாப்பு. மாறிவரும் காலத்தோடு நாமும் மாறவேண்டாமா.

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்-இன்றைய மாறிவரும் உலகிற்கேற்ற முழுமையான சுகம். முழுமையான பாதுகாப்பு



10 உள்ள பேக்கிலும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்கிலும் கிடைக்கிறது

காலம் மாறுவதற்கேற்ப அவளும் மாறுகிறாள்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

ஸாஃப்ட் அன்ட் ஸில்க்கியின் பெருகிவரும் கூட்டத்திலே சேருங்கள்.



ஸா:.ப்ட் அன்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன். பெண் — அழகுப் படைப்பாளர் லக்மே அளிப்பது.

ஏராளமான பெண்கள் ஸா:.ப்ட் அன்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷனின் பெருகிவரும் கூட்டத்திலே சேர்ந்து வருகிறார்கள். இதில் வியப்பில்லையே! காரணம், ஸா:.ப்ட் அன்ட் ஸில்க்கி லோஷன் உபயோகிப்பதற்கு மிகவும் வசதியானது.

இது சீராகவும் எளிதாகவும் பரவுகிறது.

அதாவது, இதிலே சன்னை இல்லை, தொல்லை இல்லை. அதைவிடவும் ஒன்று: இதை தயாரித்தவர்கள் லக்மே! இதே லக்மேயிடம்தான், அழகு மற்றும் சருமப் பராமரிப்பிற்காக பெண்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர்.

வாருங்கள் நீங்களும் ஸா:.ப்ட் அன்ட் ஸில்க்கியின் பெருகி வரும் கூட்டத்திலே சேருங்கள்.

பட்டுப்போன்ற மென்மையை அங்கமெங்கும் அளியுங்கள்.

லக்மே



"ஆகா!...எத்தனை வசதி."



யானைக் கூட்டம் வந்துவிடும்.''

''இலங்கையில் உள்ளவர்கள் காட்டு மிராண்டி மக்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அது முழுப்பொய்.''

''அப்படியானால் சரி; நீ சொன்னால் உண்மையாகத்தானிருக்கும். அப்படிப் பட்ட காட்டுப் பிரதேசத்தில் இளவரசர் அருள்மொழி வர்மர் எங்கே இருக்கிறார் என்று தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.''

''அது ஒன்றும் கஷ்டமில்லையென்று சற்று முன் சொன்னாயே?''

''ஆமாம்; சொன்னேன். சூரியன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதில் என்ன கஷ்டம் இருக்க முடியுமென்று முதலில் நினைத்தேன்.''

''இப்போது ஏன் வேறு விதமாக நினைக்கிறாய்?''

''சூரியனை மேகங்கள் மறைத்திருக்கலாம்; அல்லது கடலுக்கடியில் சென்றிருக்கலாம்.''

''இந்தச் சூரியனை எந்த மேகமும் கடலும் மறைத்துவிட முடியாது. பொன்னியின் செல்வரை மறைக்க முயலும் மேகமும் ஒளி பெறும்; கடலும் ஜொலிக்கும்!''

இளவரசரைப் பற்றிப் பேசும்போது இவளுடைய உற்சாகம் எப்படிப் பொங்குகிறது? சோழ நாட்டுப் பிரஜைகள் பலரையும் போல இந்தப் பெண்ணும் அவரைத் தெய்வமாகக் கருதுகிறாள்! அருள்மொழி வர்மரிடம் அப்படிப்பட்ட என்ன வசீகர சக்தி இருக்கும்? — இவ்விதம் மனத்தில் எண்ணிக் கொண்டு, ''அப்படியானால் இலங்கையில் இளவரசரைக் கண்டுபிடிப்பது கஷ்டமில்லையென்றா சொல்லுகிறாய்?'' என்றான்.

''சோழ சைன்யம் எங்கே இருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு போனால், இளவரசர் இருக்கும் இடம் தானே தெரிகிறது.''

''அது எப்படி? இலங்கையில் பாதி அளவு சோழ சைன்யம் பரவியிருக்கிறது என்று கேள்விப்பட்டேனே?''

''ஆமாம்; மாதோட்டத்திலிருந்து புலஸ்திய நகரம் வரையில் சோழர் படை பரவியிருக்கிறது என்றுதான் நானும் கேள்விப்பட்டேன்.....''

''பின்னே? அவ்வளவு பெரிய பிரதேசத்தில் இளவரசர் எங்கே இருக்கிறாரோ? காட்டு வழிகளில் தேடிச்சென்று அவரைக் கண்டுபிடிக்க அதிக நாள் ஆகலாம். இந்த ஓலையை உடனே அவரிடம் நான் சேர்ப்பித்தாக வேண்டும். நீதான் ஓலையைப் பார்த்து விட்டாயே? எவ்வளவு அவசரம் என்று உனக்குத் தெரிந்திருக்குமே?''

சமுத்திரகுமாரி இதற்கு மறுமொழி எதுவும் சொல்லாமல் மௌனமாயிருந்தாள்.

''இளவரசர் இருக்குமிடம் நிச்சயமாகத் தெரிந்தால் வீண் அலைச்சல் அலையாமல் அவர் இருக்குமிடத்துக்கு நேரே போய்விடலாம்'' என்றான் வந்தியத்தேவன்.

''அதற்கு ஒரு வழி இருக்கிறது'' என்றாள் பூங்குழலி.

''இருக்கும் என்று நம்பித்தான் உன்னைக் கேட்டேன்.''

''காலையில் நாகத்தீவில் உன்னை இறக்கி விடுவதாகச் சொன்னேன் அல்லவா?''

''ஆமாம்!''

''நாகத் தீவுக்குப் பக்கத்தில் பூதத் தீவு இருக்கிறது.''

''தீவின் பெயரே கேட்கப் பயங்கரமாயிருக்கிறதே!''

''பயப்படாதே! ஆதியில் அந்தத் தீவின் பெயர் போதத் தீவு. புத்த பகவான் ஆகாச மார்க்கமாக இலங்கைக்கு வந்தபோது முதன் முதலில் அந்தத் தீவிலேதான் அவர் இறங்கினாராம். அங்கிருந்த அரச மரத்தினடியில் வீற்றிருந்து புத்த தர்மத்தைப் போதித்தாராம். அதனால் போதத் தீவு என்ற பெயர் வந்தது....''

''பின்னால் அது 'பூதத் தீவு' என்று ஆகிவிட்டதாக்கும்!''

''ஆமாம்! 'பூதத்தீவு' என்றபெயரை கேட்டே உன்னைப் போல் பலர் பயங்கரமடைந்தார்கள். பிறகு அந்தத் தீவுக்குச் சாதாரணமாக யாரும் போவதில்லை. பூதத்துக்கு பயப்படாதவர்கள்தான் போவார்கள்.''

''அதாவது உன்னைப் போன்ற



தைரியசாலிகள். கொள்ளிவாய்ப் பிசாசுகளுக்குப் பயப்படாதவள் அல்லவா நீ? சரி; பூதத் தீவைப் பற்றி என்ன சொல்ல வந்தாய்?''

''பூதத் தீவின் கரையில் ஒரு நாழிகை நேரம் நீ தாமதித்தால், 'பொன்னியின் செல்வர்' இப்போது இலங்கையில் எங்கே இருக்கிறார் என்று விசாரித்துச் சொல்வேன்...''

''பூதத் தீவில் யாரை விசாரிப்பாய்?''

''பூதத் தீவில் ஒரு பூதம் இருக்கிறது. அதை விசாரிப்பேன்...''

''அந்த பூதத்தை எனக்கும் காட்டுவாய் அல்லவா?''

''அதுதான் முடியாது. நீ என்னைத் தொடர்ந்து தீவுக்குள் வரக்கூடாது. கரையில் படகைப் பார்த்துக் கொண்டு காத்திருப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்தால் நான் போய் விசாரித்துக் கொண்டு வந்து சொல்வேன்.''

''சரி, அப்படியே ஆகட்டும்!'' என்றான் வல்லவரையன்.

காற்று சுகமாக அடித்தது. பாய்மரத்தின் உதவியினால் படகு விர்ரென்று கடலைக் கிழித்துக்கொண்டு சென்றது. கடலின் ஓங்கார நாதம் கேட்டுக் கொண்டே இருந்தது.

வந்தியத்தேவனுடைய கண்களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. விழிப்பு நிலையிலிருந்து உறக்க நிலைக்கு லேசாக நழுவிச் சென்றான்.

அத்தியாயம் 9
''இது இலங்கை!''

மறுபடியும் வந்தியத்தேவன் கண்விழித்த போது, அவன் எதிரேயும் சுற்றிலும் தோன்றிய காட்சி அவனைப் பிரமிக்கச் செய்தது. கிழக்கே வானமுகட்டில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். அங்கே கடல் உருக்கி விட்ட தங்கக் கடலாகித் தகதகவென்று திகழ்ந்தது. உதய குமாரி தங்கப் பட்டாடை புனைந்து கொண்டு ஜொலித்தாள். அவனுக்கு எதிரே படகு போய்க் கொண்டிருந்த திசையில் ஒரு மரகதத் தீவு நீலக் கடலாடை போர்த்துக் கொண்டு விளங்கியது. வலப்புறத்தில் அதே மாதிரி இன்னொரு பச்சை வர்ண பூமிப் பிரதேசம் காணப்



பட்டது. அது நாலு புறமும் கடல் சூழ்ந்த தீவா அல்லது நீண்டு பரந்து வியாபித்துள்ள பூமிப் பிரதேசமா என்று நன்றாகத் தெரியவில்லை. இரண்டு மரகதப் பிரதேசங்களுக்கும் ஊடே பார்த்தால் தூரத்தில் அத்தகைய இன்னும் பல தீவுகள் பச்சை நிறத்தின் பல்வேறு வகைக் கலவைகளுக்கு உதாரணமாகத் தோன்றிக் கொண்டிருந்தன. படகிலிருந்தபடியே நாலு புறமும் சுற்றிப் பார்த்தால், வானவில்லின் ஏழுவித வர்ணங்களும் அதன் ஏழாயிரம் வகைக் கலவை நிறங்களும் திகழ்ந்தன. மொத்தத்தில் அந்தக் காட்சி கண்ணெதிரே காணும் உண்மைக் காட்சியாகவே தோன்றவில்லை. ஓவியக் கலையில் தேர்ந்த அமர கலைஞன் ஒருவன் "இதோ சொர்க்க லோகம் எப்படியிருக்கும் என்று காட்டுகிறேன்!" என்று சபதம் பூண்டு தீட்டிய வர்ண சித்திர அற்புதம் போலவே தோன்றியது.

இந்தக் காட்சியைக் கண்டு மெய்ம் மறந்து நினைவிழந்திருந்த வந்தியத் தேவனுடைய செவியில் "இது சொர்க்கம் அல்ல; இது இலங்கை!" என்ற வார்த்தைகள் விழுந்து, அவனை விழிப் படையச் செய்தன.

"ஆம்; இது சொர்க்கமோ என்று நான் சந்தேகித்தது உண்மைதான்!" என்றான் வந்தியத்தேவன்.

"இது சொர்க்கபூமி அல்ல; ஆனால் சொர்க்கம் போன்ற பூமி. இந்த சொர்க்கத்தை நரகமாக்குவதற்கு மனித உருக் கொண்ட அசுரர்கள் வெகு காலமாகப் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள்" என்றாள் பூங்குழலி.

"யாரை அசுரர்கள் என்று சொல்கிறாய்?" என்றான்.

"உன்னைப் போல் யுத்தமே தொழிலாகக் கொண்டவர்களைத்தான்."

"பொன்னியின் செல்வர் கூடவா?"

"அவரைப் பற்றி என்னை எதற்காகக் கேட்கிறாய்?"

"இளவரசரைப் பற்றி விசாரித்துச் சொல்வதாகக் கூறினாயே?"

"அவர் இருக்கக் கூடிய இடத்தை விசாரித்துச் சொல்வதாகக் கூறி

னேன். அவர் மனிதரா, அசுரரா, தேவரா என்று கண்டுபிடித்துக் கூறுவதாகச் சொல்லவில்லையே?''

படகு தீவுகளை நெருங்கிக் கொண்டிருந்தது. கடல் நடுவே கேட்கும் ஓங்காரத் தொனிக்குப் பதிலாக்க் கடல் அலைகள் கரையிலே மோதும்போது உண்டாகும் சலசலப்புச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

''என்ன சொல்கிறாய்? எதிரே தெரிகிறதே, அதுதான் பூதத் தீவு; வலப்புறத்தில் உள்ளது நாகத் தீவு. எங்கே போகட்டும்? நாகத்தீவிலேயே உன்னைக் கொண்டு போய் இறக்கி விட்டு விடட்டுமா? விசாரித்துக் கொண்டு போகிறாயா?''

''இல்லை; பூதத்தீவுக்கே போகலாம். கொஞ்ச நேரம் தாமதமானாலும், இளவரசர் எங்கே இருக்கிறார் என்று தெரிந்து கொண்டு போவது தான் நல்லது.''

''அப்படியானால் சரி; நீ எனக்குக் கொடுத்த வாக்குறுதி ஞாபகம் இருக்கட்டும்!''

சிறிய தீவின் கரையில் வந்து படகு நின்றது. படகைப் பார்த்துக் கொள்ளும்படி வந்தியத்தேவனிடம் சொல்லி விட்டுப் பூங்குழலி அந்த மரகதத் தீவிற்குள்ளே சென்றாள். வந்தியத் தேவன் அவள் சென்ற திக்கைப் பார்த்தான். பச்சை மரங்களுக்கிடையில் அவள் விரைவில் மறைந்து விட்டாள்.

போதத் தீவு மக்களின் வாக்கில் மருவிப் பூதத் தீவாக மாறியது பற்றி வந்தியத்தேவன் முதலில் சிந்தித்தான். பிறகு அத்தீவுக்குள்ளே இப்போது குடியிருக்கும் பூதம் எப்படிப்பட்ட பூதமாயிருக்கும் என்று எண்ணமிட்டான். பின்னர், இந்த அதிசயமான பெண்ணின் உள்ளத்தில் மறைந்திருக்கும் மர்மம் என்னவாயிருக்கும் என்று வியந்தான்.

பூங்குழலி கூறியபடி ஒரு நாழிகைக்குள் திரும்பி வந்தாள். படகில் ஏறிக்கொண்டு வந்தியத்தேவனையும் ஏறிக் கொள்ளச் சொன்னாள். நாகத் தீவை நோக்கிப் படகு சென்றது.

''விசாரித்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள முடிந்ததா?'' என்று வல்லவரையன் கேட்டான்.

''முதன் மந்திரி அநிருத்தப் பிரம ராயர் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்காக மாதோட்டத்துக்கு வந்திருக்கிறாராம். நேற்றைக்கு இளவரசரும் மாதோட்டத்துக்கு வந்திருக்க வேண்டும். எத்தனை நாள் மாதோட்டத்தில் இருப்பார் என்று தெரியாது. நீ அங்கே போய்த் தெரிந்து கொள்ளலாம்'' என்றாள் பூங்குழலி.

''மாதோட்டம் இங்கிருந்து எத்தனை தூரம் இருக்கும்?''.

''ஐந்து, ஆறு காத தூரம் இருக்கும். வழியெல்லாம் ஒரே காடு. கோடிக்கரைக் காடு மாதிரி இருக்கும் என்று நினைக்காதே. வானை எட்டும் மரங்கள் அடர்ந்த காடு. பட்டப் பகலில் சில இடங்களில் இருட்டாக இருக்கும். யானைக் கூட்டங்களும் வேறு துஷ்ட மிருகங்களும் உண்டு. நீ ஜாக்கிரதையாகப் போய்ச் சேர வேண்டும்.''

''காட்டில் வழிகாட்டுவதற்கு உன்னைப் போல் ஒரு கெட்டிக்காரப் பெண் மட்டுமிருந்தால்......?'' என்று வல்லவரையன் பெருமூச்சு விட்டான்.

''அப்போது நீ ஒருவன் என்னத்திற்காக? ஓலையை என்னிடம் கொடுத்துவிடு! நானே கொண்டு போய்க் கொடுக்கிறேன்.... இல்லை, முடியாது! ஏதோ பைத்தியக்காரியைப் போலப் பேசுகிறேன். என்னால் முடியவே முடியாது. இளையபிராட்டியிடம் ஒப்புக் கொண்டு வந்தாயல்லவா? அதை நீதான் செய்து முடிக்க வேண்டும்!'' என்றாள்.

''ஆகட்டும், பூங்குழலி! நானே செய்து முடிப்பேன். இன்னொருவர் கெஞ்சிக் கேட்டாலும் கொடுக்க மாட்டேன். நீ இவ்வளவு உதவி செய்தனையே? அதுவே போதும்!''

படகு நாகத்வீபத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பூங்குழலியின் கைகள் துடுப்பை வழக்கம்போல வலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவளுடைய உள்ளம் வேறு எங்கேயோ கனவுலோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது என்பது முகத்திலும் தெரிந்

தது.

"சமுத்திரகுமாரி!" என்று வந்தியத்தேவன் அழைக்கவும், அவள் திடுக்கிட்டு இவ்வுலகத்துக்கு வந்தாள்.

"ஏன் கூப்பிட்டாய்?" என்று கேட்டாள்.

"ஏதோ என்னிடம் பிரதி உபகாரத்தை எதிர்பார்ப்பதாகச் சொன்னாயே? அதை இப்போது சொன்னால் தான் சொன்னது. இதோ கரை நெருங்கி வருகிறது."

பூங்குழலி உடனே மறுதலிக்கவில்லை. சிந்திப்பதாகத் தோன்றியது. ஆகையால் வந்தியத்தேவன் தைரியம் கொண்டு மேலும் கூறினான்.

"நீ எனக்குச் செய்த உதவி மிகப் பெரியது. எனக்கு மட்டும் நீ உதவவில்லை; சோழ சாம்ராஜ்யத்துக்கே உதவி புரிந்திருக்கிறாய். சோழ சக்கரவர்த்தியின் குலத்துக்கு மாபெரும் உதவி புரிந்திருக்கிறாய். இதற்குப் பிரதியாக நான் ஏதாவது செய்யாவிட்டால் என் மனம் நிம்மதியடையாது" என்றான்.

"இதையெல்லாம் நீ உண்மையாகச் சொல்லுகிறாயா? அல்லது உலகத்திலுள்ள மற்ற ஆண் மக்களைப் போல் வஞ்சகம் பேசுகிறாயா?"

"சமுத்திரராஜன் அறியச் சத்தியமாகச் சொல்கிறேன்."

"அதாவது தண்ணீரில் எழுதி வைக்கிறேன் என்கிறாயா?"

"ஆகாசவாணியும் பூமாதேவியும் அஷ்ட திக்குப் பாலகர்களும் சூரிய சந்திரர்களும் அறிய ஆணையிட்டுச் சொல்லுகிறேன்."

"உன்னுடைய சத்தியத்தையும் ஆணையையும் நம்பி நான் சொல்லவில்லை. பொய் சொல்லும் வஞ்சகர்கள் சத்தியத்துக்கும் ஆணைக்கும் மட்டும் பயந்து விடுவார்களா? உன்னை முதன் முதல் பார்த்தவுடனேயே நீ நல்லவன் என்று எனக்குத் தோன்றியது. ஆகையினால், சொல்லுகிறேன்..."

"முதலில் தோன்றிய எண்ணந்தான் எப்போதும் மேலானது; அதை நீ மாற்றிக் கொள்ள வேண்டாம்."

"பொன்னியின் செல்வரைப் பார்த்து அவரிடம் ஓலையைக் கொடுத்த பிறகு, சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிப் பேச வேண்டியதையெல்லாம் பேசிய பிறகு, அவர் அவகாசமாக இருக்கும் போது, **'சமுத்திர குமாரியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?'** என்று கேள். 'ஞாபகம் இருக்கிறது' என்று அவர் சொன்னால், 'அவள்தான் எனக்குப் படகு வலித்துக் கொண்டு வந்து இலங்கையில் இறக்கி விட்டாள்' என்று கூறு!"

பூங்குழலி! அவ்வளவு உயரத்திலேயா நீ பறக்கப் பார்க்கிறாய்? சிட்டுக் குருவி ஒன்று ககன ராஜாவாகிய கருடன் பறக்குமிடத்துக்கு நானும் போவேன் என்று பறக்கத் தொடங்கலாமா? இது உனக்கு நல்லதல்லவே? — இவ்வாறு வந்தியத்தேவன் மனத்தில் எண்ணிக் கொண்டான். வெளிப்படையாக, "இதைச் சொல்லத்தானா இவ்வளவு தயங்கினாய்? என்னமோ பெரிதாகக் கேட்கப் போகிறாய் என்று நினைத்தேன். இளவரசரிடம் கட்டாயம் நான் சொல்லுகிறேன்! அவர் கேட்காமற் போனாலும் நானே சொல்லுகிறேன்!......"

"ஐயையோ! அவர் கேட்காவிட்டால் நீயாக ஒன்றும் சொல்ல வேண்டாம்!"

"அதெல்லாம் முடியாது; சொல்லித்தான் தீருவேன்."

"என்ன சொல்லுவாய்?"

"நடந்தது நடந்தபடிதான் சொல்லுவேன். 'இளவரசே! பொன்னியின் செல்வரே! சமுத்திர குமாரியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா? ஞாபகம் இல்லாவிட்டால், இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்! அவள்தான் என்னைப் பழுவேட்டரையரின் கொலைகார ஆட்களிடம் சிக்காமல் காப்பாற்றினாள். அவள்தான் தன்னந்தனியாகப் படகு தள்ளிக் கொண்டு வந்து என்னை இலங்

கையில் சேர்த்தாள். கடலில் விழுந்து தத்தளித்த என்னை அவள்தான் காப்பாற்றிப் படகில் ஏற்றி விட்டாள். சமுத்திர குமாரியின் உதவியிராவிட்டால் நான் உயிருடன் உங்களை வந்து பார்த்திருக்க முடியாது. இந்த ஓலையும் உங்களுக்குக் கிடைத்திராது!' என்று சொல்லுவேன். சரிதானே?''

'''இதுவரை சொன்னது சரிதான். மேலும் ஏதாவது சேர்த்துக் கொண்டு விடாதே! இதையெல்லாம் நான் அவரிடம் சொல்லச் சொன்னதாகச் சொல்லி விடாதே!''

''சேச்சே! என்னை முழுப் பைத்தியம் என்று நினைத்தாயா?''

''இளவரசர் அதற்கு ஏதேனும் மறுமொழி சொன்னால், அதை உள்ளது உள்ளபடி என்னிடம் சொல்ல வேண்டும். கூட்டியோ, குறைத்தோ சொல்லக் கூடாது.''

''உன்னை மறுபடி நான் எங்கே பார்ப்பது?''

''என்னைப் பார்ப்பதில் என்ன கஷ்டம்? கோடிக் கரையிலோ, இந்தப் பூதத்தீவிலோ, அல்லது இரண்டுக்கும் மத்தியில் படகிலோ இருப்பேன்.''

''ஊருக்குத் திரும்பும்போது இந்த வழியாக வந்தால் பூதத் தீவில் நீ இருக்கிறாயா என்று பார்க்கட்டுமா?''

''தீவுக்குள்ளே எந்தக் காரணத்தைக் கொண்டும் நீ வரக்கூடாது; வந்தால் விபரீதமாகும். இந்தப் படகு கடலோரத்தில் இருக்கிறதா என்று பார்! இருந்தால், ஏதாவது ஓர் அடையாளம் வைத்துக் கொண்டு சத்தம் செய்! நான் நேற்றுக் குயில் மாதிரி கூவினேனே, அந்த மாதிரி நீ கூவ முடியுமா?.......''

''குயில் மாதிரி கூவ முடியாது! ஆனால் மயில் மாதிரி சத்தம் செய்வேன். இதைக் கேள்!''

வந்தியத்தேவன் வாயைக் கையினால் மூடிக் கொண்டு மயில் கத்துவது போன்ற அகோரமான குரலில் கத்திக் காட்டினான்.

அதைக் கேட்டுப் பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

படகு நாகத்தீவின் கரையை அணுகியது. இருவரும் படகிலிருந்து இறங்கினார்கள். வந்தியத்தேவன் கரையில் ஏறி விடைபெற்றுக் கொண்டான். பூங்குழலி படகைத் திருப்பினாள். வந்தியத்தேவன் சபலத்துடன் திரும்பிப் பார்த்தான். ''உன்னுடன் வருகிறேன்'' என்று சொல்லி அவளும் வரமாட்டாளா என்ற ஆசை அவன் மனத்தில் இன்னமும் கொஞ்சம் இருந்தது. ஆனால் பூங்குழலி அவனைக் கவனிக்கவேயில்லை. அதற்குள் அவள் கனவு லோகத்தில் சஞ்சரிக்கப் போய் விட்டாள் என்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது.

(தொடரும்)

எந்தக் கண்?



பிரபல எழுத்தாளர் மார்க் ட்வெயினுக்கு ஒரு சமயம் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. அதற்காக அவர் ஒரு பாங்கின் தலைவரைப் பார்க்கச் சென்றிருந்தார்.

''தருகிறேன். ஆனால், நீர் என் கண்களில் எந்தக் கண் பளிங்குக் கண் என்பதைச்சொல்லிவிடவேண்டும்!'' என்றார் பாங்க் தலைவர்.

ட்வெயின் சற்று நேரம் அவர் கண்களை உற்றுப் பார்த்துவிட்டு, ''இடது கண்தான் பளிங்குக் கண்!'' என்று கூறினார்.

''எப்படிக் கண்டுபிடித்து விட்டீர்கள்?'' என்றார் பாங்க் தலைவர்.

உடனே மார்க் ட்வெயின், ''அந்தக் கண்ணில்தான் சிறிதளவு கனிவு தென்படுகிறது!'' என்றாரே பார்க்கலாம்!

— எஸ். முகம்மது யூசுப்



கிழிசல்

— தமிழினியன்

"அப்பா....." என்று சுகுமார் காதைச் சொறிந்தால் எதற்கோ அடிபோடுகிறுன் என்று அர்த்தம்.

"என்னடா?" என்று அதட்டினுர் வேத மூர்த்தி.

"பனியன் கிழிஞ்சுடுத்து அப்பா."

"பனியன்தானே" அப்பாவின் இமைகளில் அலட்சியம் சிறகடித்தது. "சரி, சரி, காலேஜுக்குப் போயிட்டு வா. வாங்கலாம்."

போய்விட்டு வந்தான் சுகுமார். அலுவலகம் விட்டு வந்த அப்பாவின் முகத்தை ஆதங்கத்துடன் நோக்கினுன். பனியன் வாங்கச் சொல்வதற்கான அறிகுறி ஏதும் தென்படவில்லை. மௌனமானுன்.

ஒரு வாரம் கழிந்தது.

"அப்பா.... பனியன்...." என்று ஆரம்பித்தான்.

"இருபது தேதிக்கு மேலே என்ன பனியன் வேண்டிக்கிடக்கிறது? முதல் தேதி பிறக்கட்டும்" என்று அடக்கினுர் அப்பா.

முதல் தேதி.

அம்மாவிடம் சம்பளக் கவரைப் பிரித்துக் கணக்குச் சொல்லிக் கொண்டிருந்தார் வேத மூர்த்தி.

"பாலுக்குத் தொண்ணூற்று எட்டு ரூபாய். மளிகைக்கு இருநூற்று முப்பது.... அரிசிக்கு இருநூற்று எண்பது..... அப்புறம்..."

"சீட்டுப் பணம் நூற்றைம்பது ரூபாய்" என்ருள் அம்மா.

"இந்தா" எண்ணிக் கொடுத்தார் வேத மூர்த்தி.

அப்போது, "அப்பா...." என்று தலையை நீட்டினுன் சுகுமார்.

"என்ன?"

"முதல் தேதி பனியன் வாங்கலாமென்று சொன்னீர்கள்...." அடிக் குரலில் தயக்கத்துடன் சொன்னுன் சுகுமார்.

"சொன்னுல் என்ன?" முகம் கடுமையாயிற்று வேதமூர்த்திக்கு. "என்னவோ பிராமிசரி நோட்டிலே எழுதிக் கொடுத்தது மாதிரி கேட்கிறியே? ஏதோ பேச்சுக்குச் சொன்னுல் அதையே பிடித்துக் கொள்வதா? பனியன் உள்ளுக்குப் போடுவது தானே? கிழிந்திருந்தால் என்ன குடியா முழுகிடும்?"

"பாலிஸ்டர் சட்டைக்குள் கிழிசல் தெரிவது அவமானமாய் இருக்கிறது அப்பா" சுகுமாரின் புருவத்தில் அலையலையாய்ச் சங்கடம் புரண்டது.

"இதில் என்னடா அவமானம்? இந்த வயசிலேயே கௌரவம் பார்க்க ஆரம்பிச்சுட்டியா நீ?" எரிந்து விழுந்தார், மனிதர்.

"எனக்காகச் சொல்லவில்லை, அப்பா."

"பின்னே, யாருக்காகச் சொல்கிருய்?"

"மகனுக்கு ஒரு மாற்றுப் பனியன் எடுத்துக் கொடுக்க முடியாமல் இருக்கிருரே என்று யாரும் உங்களைக் கௌரவக் குறைவாய் நினைத்துவிடக் கூடாது. அதற்காகத் தான்....." தெளிவாகச் சொல்லிவிட்டு மிடறு விழுங்கினுன் சுகுமார்.

வேதமூர்த்தி, மறுவார்த்தை பேசாமல் பர்சைத் திறந்தார்.

அடப்பாவிங்களா!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — 1987 ரூ. 375/— மூன்றாம் பரிசுக் கதை — 2

(அறிமுக எழுத்தாளர்)

"நான் எல்லாருகிட்டேயும் கேட்டுப் பார்த்துட்டேன். எல்லாரும் கையை விரிச் சுட்டாங்க! அவங்களுக்கும் பணக்கஷ்டம் தானும். இனிமேல் நீங்களே முயற்சி பண்ணி ஞல்தான் உண்டு."

"என்ன லட்சுமி, நீ இப்படிச் சொல் லிட்டே? நான் என்னைக்காவது, யார் கிட்டே யாவது கடன்னு கேட்டிருக்கேனு? இன்னெரு தடவை போயி வேறு யாருகிட்டே யாவது கேட்டுப் பாரேன்."

"இதைப் பாருங்க ; உங்களைப் பத்தி நல்லா தெரிஞ்சுக்கிட்டதனுலத்தான், இதுக்கு முந்தி யாருகிட்டேயெல்லாம் கேக்க லியோ, அவங்ககிட்டேயெல்லாம் போய்க் கேட்டுப் பார்த்துட்டேன். எப்பக் கேட்டா லும் தர்ற சரஸ்வதி கூட இப்ப என்னடான்னு இல்லேன்னுட்டா. தொகை யும் அதிகம் பாருங்க!"

"நான் இப்ப எப்படிப் பணத்தைப் பொரட் டுவேன்? யாருகிட்ட போயி நிப்பேன்?"

"பரவாயில்லீங்க! இந்த ஒரு தடவை எப்படியாவது உங்க ஆபீஸ் பிரண்ட்ஸ் கிட்டே கொஞ்சம் கேட்டுப் பாருங்க."

"ம்... வேறே வழியில்லே. இனி நடக்க வேண்டியதை நாமளே பாத்தாத்தான் உண்டு."

சிவராஜன் வாசலிலிருந்து வெளிப் பட்டுத் தெருவுக்குள் இறங்கி விட்டார். அந்நேரம் வழக்கமாகச் சொல்லும் 'வர்றேன் லட்சுமி' என்னும் யந்திரத்தனம் கூட நின்று விட்டது.

அவருடைய அம்மாவிடமிருந்து கடிதம் வந்து ஒரு வாரமாகி விட்டது. போன மாதம் அப்பாவுக்கு வைத்தியச் செலவுக்கும், அதுக்கு முந்தின மாதம் ஊர்த் திருவிழா வுக்கும் என அக்கம்பக்கத்தில் கடன் வாங்கியது ரூபாய் ஐந்நூறு ஆகி விட்டதாம். எனவே அதை இப்போது அடைக்க வேண்டு மாம்.

சிவராஜனுக்குக் கடன் தேவைப்பட்டால் எப்போதுமே தாஞகப் போய் யாரிடமும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ கேட்கவே மாட்டார். தம் மனைவியை அனுப் பிப் பக்கத்து வீட்டுப் பெண்களிடம் கேட்கச் சொல்லுவார். அவளது பழகும் தன்மையால் அவனுக்கும் இதுவரை எளி தாகக் கிடைத்து வந்தது.

ஆனல் இன்று? சிவராஜன் தாம் வசமாக மாட்டிக் கொண்டது போலவும், தம்முடைய தன்மானத்துக்கே சோதனை வந்து விட்டது போலவும் வருந்தினர்.

அம்மாவையும், அப்பாவையும் சொந்த ஊரில் விட்டு விட்டுத் தாம் மட்டும் இத்தனை பெரிய நகரில் இருப்பதற்கு உண்டான நிர்ப் பந்தத்தை அடிக்கடி நினைத்துக் கொள்வார். எனவேதான், அவர்களுக்குப் பணக்கஷ்டம் என்று செய்தி வந்துவிட்டால் எப்பாடு பட்டாவது — அதாவது, தம் மனைவியை எப்பாடுபடுத்தியாவது பணத்தைப் புரட்டி ஊருக்கு அனுப்பி வைத்து விடுவார்.

"குட் மார்னிங் சார்!"

"குட் மார்னிங், ஆறுமுகம்!"

அவர் ஆபீஸில் நுழைந்ததும், அந்தக் காலை வணக்கம் சிவராஜனையும், கடைநிலை ஊழியர் ஆறுமுகத்தையும் இணைத்த வேகத் தில் பிரித்துப் போட்டது.

ஆனல், சிவராஜன் இப்போது அதை மேலும் ஒட்ட வைக்க முயன்ருர். இன்று ஆறுமுகத்தை 'அமுக்க' வேண்டி இருந் ததே!

"என்ன ஆறுமுகம் அதுக்குள்ளே கிளம் பிட்டே?"

"என்ன சார் வேணும்?"

"உன்கிட்டே கொஞ்சம் தனியாய்ப் பேச ணும்."

"அதுக்கென்ன சார். எப்ப வேணும் ஞலும் பேசுவோம்."

அவர்கள், ஆபீஸ் கட்டடத்தை விட்டு, ஆனல் அதே காம்பவுண்டுக்குள் ஒரு மரத் தைக் குடையாகப் பிடித்துக் கொண்டனர்.

"ஆறுமுகம், எனக்கு இப்ப ஓர் இக்கட் டான சூழ்நிலை. நீதான் உதவி பண்ண ணும்."

அந்த 'உதவி' என்கிற வார்த்தை மட்டும் அவரிடமிருந்து சற்று அமுங்கி வந்தது. அவர் நின்ற விதமும், பேசிய தோரணையும், இதுமாதிரி விஷயத்தில், அவரது முதல் அனு பவத்தை அரங்கேற்றியது.

"என்ன மாதிரி உதவி சார்?"

ஆறுமுகம் கொஞ்சம் சந்தோஷமாய்க் குழப்பமடைந்தான்.

'முதன்முறையாகச் சிவராஜன் கோடு தாண்டப் போகிருர்!'

"அவசரமாய் ஐந்நூறு ரூபா வேணும்பா. உன்கிட்ட நான் கேக்குறது இதுதான் முதல் தடவை!" தம் வெட்கத்தையும், வேண்டுதலை யும், அதில் ஒரு கட்டாயத்தையும் திணித்து நின்ருர். தலையைக் குனிந்து கொண்டார்.

"என்ன சார், உங்களுக்குப் போயா

அபூர்வன்

மிருக்கடி? நம்பவே முடியலையே!''

அப்போது, ஆறுமுகத்தின் நிழலுக்கும் கூடப் பற்கள் முளைத்திருப்பதைத் தரையில் கண்டார்.

''என்னப்பா செய்வது? காலம் எப்போதும் ஒரே மாதிரியாவா இருக்கும்? சரி இப்ப நீ ஒண்ணும் பதில் சொல்லலையே?''

''சே, சே. நீங்க கேட்டு நான் இல்லேன்னு சொல்வேனா சார்! இன்னக்கி மதியம் மூணு மணிக்கு இதே இடத்துக்கு வாங்க. நீங்க முதல் தடவை கேட்டதால, என்னால் மறுக்க முடியலை.... திருப்பி எப்பக் கொடுப்பீங்க சார்?''

''இன்னும் ரெண்டே மாசத்துல கொடுத்திடறேன்!''

''சரி சார் 'வி' எவ்வளவுன்னு தெரியும்ல. நூத்துக்குப் பத்து சார்.''

வட்டி என்பதன் முதல் எழுத்தை ஆங்கிலப் படுத்திய அந்தச் சங்கேதக் குறியீடு, அதன் 'பிரம்மா' விடமிருந்து வெளிப்பட்டதைச்





> விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் போது கிறிஸ் எவர்டைத் தோற்கடித்த மார்ட்டினா கண்ணீர் விட்டு அழுதார். 'நான் வென்றதற்காக விடும் ஆனந்தக் கண்ணீரல்ல இது! என் சிநேகிதி கிறிஸ் என்னிடம் தோற்று விட்டாளே என்பதற்காக அழுகிறேன்!' என்றார் மார்ட்டினா நவ்ரத்திலோவா.
>
> — கோபஞ்க
>
> — சண்டே மிட்டே

சிவராஜன் அப்போதுதான் கேட்டார். கேட்டதுமே பதறிப் போனார்.

''அவ்வளவு ஆகுமாப்பா?''

''நீங்க வேணும்னா மத்தவங்ககிட்டே கேட்டுக்குங்க சார்.''

''சரிப்பா ஏற்பாடு செய்!''

இந்த ஆறுமுகம் கடை நிலை ஊழியர். ஆனாலும் முதல் நிலை ஆளாய் மற்றவர்களுக்குத் தெரியும்தான். சுமார் இரு நூறு பேர் வேலை செய்யும் அந்த ஆபீஸில் எல்லோருக்கும் ஏற்படும் எதிர் பாராத கடன் நோய்க்கு அவனே வைத்தியர்.

ஆனால், இப்படியொரு நிலையில் இருந்து கொண்டு எப்படிச் செய்கிறான் என்பதே அங்குள்ளோருக்குப் பெரிய புதிர்.

ஆபீஸிற்குள் திரும்பிய சிவராஜன் தம் நாற்காலியின் வாய்க்குள் போய் விழுந்தார். அந்தக் கணத்திலிருந்து சுவரில் மாட்டியிருந்த படக் காலண்டரிலிருந்த குழந்தை முகமும், எதிரில் வந்து போயும், உட்கார்ந்தும் இருந்த சக ஊழியர்கள் முகங்களும், 'ஒரு வழியா மாட்டிக்கிட்டியா?' என்று சொல்வதுபோல் இருந்தன.

சிவராஜன் நினைத்துக் கொண்டார்... அதற்குள் ஆறுமுகம் என் பொட்டலத்தைப் பிரித்துப் போட்டுவிட்டான் போலிருக்கிறது. ஆளுக்கு ஆள் நன்றாய்ச் சுவைக்கிறார்கள்!'

மதியம் அந்த 'நிழல் வங்கி'க்குச் சிவராஜன் போனார். மரமே சாட்சி சொன்னது, வழக்கம் போல்! பணம் தனது புது சொந்தக்காரனைத் தழுவிக் கொண்டது.

மாலை ஆனதும் சிவராஜன் வீடு வந்து சேர்ந்தார்.

''என்னங்க, பணம் கிடைச்சுதா?''

கேள்வியின் வயிறு மிகவும் பசித்து இருந்தது.

''ஆமா, ஆமா. நூத்துக்குப் பத்து வட்டின்னா கழுதை கூடக் கடன் கொடுக்கும்.''

''நூத்துக்குப் பத்து வட்டியா!''

பசியே பரவாயில்லை என்றிருந்தது.

''மாசக் கடைசியில. அதுவும் எங்கே பார்த்தாலும் நெருக்கடி இருக்கிறப்ப, இதுவாவது கிடைச்சுதே!''

''அதுக்கு மாசம் அம்பது ரூபாய்ல அழணும்?''

''சரி, சரி. நீ வேறே எதுக்கு அழப் போற? எல்லாம் ரெண்டு மாசத்துக்குத்தானே'' — சிவராஜன் குரலை அவரது நடை அழித்துக் கொண்டே போயிற்று. கிணற்றில் வாளி உட்புகும் ஓசை கேட்டது.

மறுநாள் சிவராஜன் பணத்தை, மணியார்டர் மூலம் அப்பா பெயருக்கு அனுப்பி வைத்தார். அதன் பின்பே, அமைதியும், சந்தோஷமும் அவர் மனத்தைச் சற்று அகலப் படுத்தின.

ஆழத்தில் கவலை அமிழ்ந்து மறைந்தது. மேல்மட்டத்தில் திருப்தி நீந்திக் கொண்டிருந்தது.

முதல் மாத வட்டிக்கு அடுத்த மாதச் சம்பளத்தில் எடுத்து வைத்து, பின் சரியாகக் கடன் வாங்கிய முப்பது நாட்கள் கழித்து ஆறுமுகத்திடம் கொடுத்தார்.

சரி, இன்னும் ஒரு மாதம்தானே. இந்த மாசமே ஒரு பி.எப். லோனைத் தட்டிவிட்டால் அசலோடு வட்டியையும் தீர்த்துடலாம்'.

தினசரிக் காலண்டரின் இதழ்கள் நிறைய உதிர்ந்து போயின.

''சார் உங்களுக்கு பி.எப். லோன் வந்துட்டது. மேனேஜர் வந்து வாங்கிக்கச் சொன்னார்.''

மேனேஜரின் தனி உதவியாளர் சொல்லி விட்டுப் போனார்.

''அட! சார் நேற்றுத்தான் சம்பளம் வாங்கினார். இன்னிக்கு இன்னொரு சம்பளமா!''— சிவராஜனின் பக்கத்து சீட்டுக்காரர், உட்கார்ந்தபடியே ஆச்சரியக்குறியாய் மாறிப் போயிருந்தார்.

ஆனால் சட்டென அதுவே அவர் நிலைக்கு ஏற்ப ஒடிந்து, வளைந்து கேள்விக் குறியாய் நிலை கொண்டது. அதேகணம், சிவராஜனின் அவசரத்தை அவரது பேனாவும், செருப்புமே புரிந்து கொண்டு உடனே செயலாற்றின.

ஒன்று உதிர்ந்தது, மற்றது ஒட்டிக் கொண்டது. 'சரி இன்னிக்கே அசலையும், வட்டியையும் திருப்பிக் கொடுத்துட்டா, வட்டி ஒரு மாசத்துக்கும் குறையுமே'.

ஏற்கெனவே திட்டமிட்டபடி செய்திட நினைத்தார் அவர். ஆறுமுகத்தை அருகே அழைத்து அவனைக் கொஞ்சம் வெளியே வரப் பணித்தார்.

''ஆறுமுகம், இன்னிக்குத் தேதி இரண்டு ஆவுது. இன்னிக்கே அசலையும், வட்டியையும் திருப்பிடறேன். அப்ப எட்டு நாளைக்கு மாத்திரம் வட்டி கணக்கு பண்ணினாப் போதும்ல, இந்தா.''

''அது வந்து சார், நான் உங்ககிட்ட சரியா விவரம் சொல்லலைன்னு நினைக்குறேன். மாசத்துலே எப்பத் திருப்பிக் கொடுத்தாலும் முழுசா ஒரு மாச வட்டியாத்தான் வாங்குறது வழக்கம். நீங்க வேணும்னா நம்ம சங்கரன் சாரைக் கேளுங்க சார்.''

ஜோக் எழுதுங்கள்!

பரிசு ரூ.250/-



இந்த வாரம் மட்டும் பரிசுத் தொகையை உயர்த்தி அதற்கேற்பக் கொஞ்சம் சிரமமான வேலையும் தரப் போகிறோம். பல ஜோக்குகளைப் படமின்றியே ரசிக்க முடியும். ஆனால் சில ஜோக்குகளைப் படத்துடன் சேர்த்துப் பார்த்தால் தான் அர்த்தமாகும். அப்படிப் படத்துடன் இணைந்த சிரிப்பு ஒன்றை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்! நீங்கள் படம் போட வேண்டிய தில்லை. படத்துக்கான கருத்தை எழுதினாலே போதும். சிறந்த ஓவியரைக் கொண்டு படம் வரையச் செய்கிறோம். இந்த அரைப்பக்கத்தை முழுமையாகக் கத்திரித்து அனுப்பவும். பிரசுர மாகும் ஜோக்குகளுக்குப் பரிசு பகிர்ந்து அளிக் கப்படும். உறையின் மேல் ''படச் சிரிப்பு!'' என்று மறவாமல் குறிப்பிடவும்.

முடிவு தேதி: 2.9.87

என் பெயர்: ....

விலாசம்: ....

....

'அடப்பாவி!' மனத்தின் கூக்குரல் சிவரா ஜனது உடலெங்கும் எதிரொலித்து அதிர்ந் தது.

''சரி, அப்படியே தர்றேன். இந்த மாசம் இருபத்து நாலாம் தேதியில தர்றேன்''— சிவராஜன், ஆறுமுகம் பதிலுக்குக் கூடக் காத்திராமல் திரும்ப, தம் சீட்டில் வந்து விழுந்தார்.

''என்னங்க, பி.எப். லோன் போட்டதாச் சொன்னீங்களே, வந்திருச்சா, கொற வட் டியையும் கொடுத்து அசலையும் திருப்பிக் கொடுத்துட்டீங்களா?''

வீட்டுக்கு வந்ததும், அவரது மனைவி அதற்கே காத்துக் கிடப்பவள் போலக் கேட்டாள். ஆனால், பிம்பத்தை எதிர்பார்த்த கண்ணாடியில் கல் வந்து விழுந்தது.

''என்னங்க இது! அநியாயமா இருக்கே! வட்டிக்கும் ஓர் அளவு வேண்டாம்''

இப்போது சிவராஜனின் கழுத்து, ஆறுமு கத்தின் தலையைத் தாங்குகிறதோ என்று அவர் முன்பு அப்படி அதிர்ந்தாள் அவள்.

''ம்..... தலையைக் கொடுத்திட்டோம், இனி, என்ன செய்ய? போய் காப்பி போடு''

மறுநாள் காலையில் சிவராஜன் ஆபீ ஸிற்குத் தம்மைத் தயார் படுத்தினார்.

''சார் இருக்காங்களா?''

வாசலிலிருந்து வந்த குரல் உள்ளே சென்று லட்சுமியை அழைத்து வந்தது.

''ஓ! நீங்களா! இருங்க, கூப்பிடறேன்.''

''என்ன சாமிநாதன் சார், நீங்க இன் னிக்கி ஆபீஸுக்கு லீவா?'' சிவராஜன் உள் ளிருந்து வந்து கேட்டார்.

''உங்களுக்கு விஷயம் தெரியாதா சார். நம்ம ஆறுமுகம் நேத்து ராத்திரியில லாரியில அடிபட்டு, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகையிலேயே இறந்துட்டான். அதான் உங்களுக்கும் தகவல் சொல்லிட்டு, உங்களை யும் கூட்டிக்கிட்டு, அவன் வீட்டுக்குப் போக லாம்னு வந்தேன்.''

''ஐய்யோ!'' சிவராஜனும், லட்சுமியும் ஒன்றாய்த் துக்கப்பட்டு, அதிர்ச்சியாகி, சோகத்தால், அலறினார்கள். சிவராஜன் சட்டென அவருடன் கிளம்பிப் போனார்.

ஆறுமுகத்தின் தகனம் முடிந்து மூன்று நாட்களாயின. ஆபீஸ் முழுதும் பரவிக் கிடந்த சோகப் புகையின் அடர்த்தியின் கனம் மெதுவாகக் குறையத் தொடங்கியது.

சிவராஜனுக்கு, ஆறுமுகத்துக்குத் தாம் தர வேண்டிய பணமே அவனது மரணத்தின் நிழலாய் மனத்தில் பாரமாய்க் கிடந்தது. அவனுக்குச் சேர வேண்டிய பணத்தை எப்படி யார் மூலம் கொடுப்பது என்று தவித்துக் கொண்டிருந்தார்.

''சாமிநாதன் சார்! நம்ம ஆறுமுகத்திடம் நான் கொஞ்சப் பணம் வாங்கி இருந்தேன்.



''எங்கம்மா 'சின்னக்குயில் பாடுது' சினிமாவுக்குப் போகணும்னு சொன்னாங்க. ஆனா என் மனைவியோ, 'நீயேவே ஒரு சங்கீதத்'துக்குத்தான் போகணும்னு சொன்னா...

''கடைசியிலே எதுக்குத்தான் அழைச்சுட்டுப் போனீங்க?

''ஏட்டிக்குப் போட்டி சினிமாவுக்கு அழைச்சுட்டுப் போனேன்!''

— கடுவை கோபால்சாமி

''பள்ளிக்கூட விழாவில் மாணவர்கள் மரம் வளர்க்கணும்ங்கிற கருத்தை அமைச்சர் வலியுறுத்திப் பேசினாரே!''

''வாஸ்தவம்தான்! வகுப்பறை இல்லேன்னா மரத்தடியில் படிக்க வசதியா இருக்குமே!'' — மணியன் தர்மலிங்கம்



அதை இப்ப எப்படி அவன் வீட்டிலே சேர்ப்பது? நம்ம ஆபீஸ்ல யாராவது அதுக்குப் பொறுப்பு ஏத்துருக்காங்களா?''

''நீங்களும் வாங்கி இருந்தீங்களா? அதை அவன் மிஸஸ் கிட்டேயே கொடுத்துரலாம். நம்ம ஆபீஸ்லே எல்லாரும் அப்படித்தான் கொடுத்தாங்க. பொறுப்புன்னு யாரும் ஏத்துக்கல. அவன் வீட்டிலேயும் பெரிய ஆம்பிளேங்கன்னு யாருமே இல்லே. ஆனால், நான் தான் இரண்டு நாட்களாய் நம்ம ஆபீஸ்லே அவ்வளவு பேரையும் தனியாய்க் கூப்பிட்டு, வாங்கியிருந்த கடனே உடனே எப்பாடு பட்டாவது கொடுத்துடுங்கப்பான்னு கெஞ்சினேன். இரும்பவும் இப்ப மூத்தியானம் கூட எல்லார்கிட்டேயும் கேட்டப்ப, அதை, அவன் வீட்ல, அவன் மிஸஸ் கிட்ட கொடுத்துட்டதா அடிச்சுச் சொன்னாங்க. சில பேர் சத்தியம் கூடச் செஞ்சாங்களே! அநேகமாய் நீங்கதான் கடைசி ஆள்னு நெனக்கிறேன்.''

அன்று மாலையே சிவராஜன் ஆறுமுகம் வீட்டுக்குத் தனியாகப் போனார்.

துக்கத்தின் கனம் அவ்வீட்டின் மையத்தில் கெட்டியாய் இருக்கக் கண்டார். ஆறுமுகத்தின் மனைவி அவர் வரும் நேரம் வேறு பக்கம் திரும்பி உட்கார்ந்திருந்தாள்.

அழுகையின் கடைசித் துளிகளைச் சிந்திக் கொண்டிருந்தாள். ஒரொரு சமயம் அவளே அத்துளியாய் மாறி இருப்பதைச் சிவராஜன் கண்டார்.

அப்போது அவள் அருகே இருந்த சில பெண்கள் அவளிடம், ''யாரோ, அவரு ஆபீஸிலிருந்து வந்திருக்காங்க'' என்று சொன்னதும், சற்றுத் திரும்பி, சோகமாய்க் கண்ணீருடன் எழுந்து நின்றாள்.

மிகவும் வருந்தி நின்ற சிவராஜன், அவளிடம், ''சும்மா நீங்க உட்கார்ந்துக்குங்க'' என்று வார்த்தைகளுக்கு அர்த்தமாய்ச் சைகையாலும் காட்டி நின்றார்.

பின்பு சில விநாடிகளில் தெம்பு வந்தவராய், ''நான் நம்ம ஆறுமுகத்துகிட்ட ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கி இருந்தேன். நாலு நாளைக்கு முந்தியே அசலும் வட்டியும் கொடுத்திடலாம்னு அவன்... அவருகிட்டே வந்து கேட்டேன். அவருதான் பைய வாங்கிக்கிறேன்னு சொன்னார். இந்தாங்க. இதில் ஐந்நூறு ரூபாயும் இந்த மாத வட்டி அம்பது ரூபாயும் இருக்கு. போன மாத வட்டியை அப்பவே கொடுத்துட்டேன்.''

அதை அவள் வாங்கிக் கொள்ளும்போது சிவராஜனை நோக்கி இறுக்கமான பார்வை ஒன்றை வீசிவிட்டுப் பின்பு மறுபடியும் பெரிதாக அழ ஆரம்பித்து விட்டாள்.

''சரி, நான் பொறப்படுறேன்'' என்று சொல்லி விட்டு வாசலுக்கு வந்தார். செருப்புக்களை மாட்டிக் கொள்ளும்போது, அழுகையினூடே வார்த்தைகள் அவசரமாய் வந்து விழுந்தன.

''ஐயய்யோ! ஏ... மாரியாத்தா என்னைப் பெத்த ராசா... நான் என்ன சொல்ல? நீ எத்தனை பேருக்கு எவ்வளவு கொடுத்தியோ? நீ என்ன சீட்டா எழுதி வச்சே? எங்கிட்டகூட இன்னாருக்கு இவ்வளவு கொடுத்தேன்னு சொல்லலியே... என் ராசா, நீ வெள்ளமாக் கொடுத்ததையெல்லாம் இப்ப இவங்க டம்ளர் தண்ணியாத் திருப்பிக் கொடுத்துட்டுப் போறாங்களே! அவங்கள ஆண்டவன்தான் கேக்கணும். ஒருத்தர் கிட்டேயே ஐயாயிரம் நிக்குதுன்னு சொன்னியே... அது இன்னும் வரல்லேயே... ரெண்டு வட்டிக்கு ஆசைப்பட்டு எவன்கிட்டேயோ எட்டுக்கு வாங்கி, பத்துக்கு வெளியில விட்டியே... அப்பவே சொன்னேனே. நீ கேட்டியா? அவன் இப்ப அம்பதாயிரம் கொடுன்னு நீ கையெழுத்துப் போட்ட தாளோட வந்து நிக்கிறானே. எங்கிட்ட முழுசாப் பத்தாயிரம் கூட வரலேயே. ஆபீஸ்காரங்களை விட்டு நான் யாருகிட்டேயும் கடன் கொடுத்ததில்லேன்னு சொல்லுவாரே அவரு... நேத்தோட எல்லா ஆளுங்களும் வந்து தங்களோட கணக்கு சரியாப் போச்சுன்னு குடுத்துட்டுப் போயிட்டாங்களே. இப்ப நான் என்ன செய்வேன். அடப்பாவிங்களா! என் ராசா... நானும் உங்கூடவே வந்துடறேன்...''

நிற்க நிழல் வேண்டும்!

4

பூள்வேலி மேல் படர்ந்திருந்த முல்லைக் கொடியை மெல்ல ஒதுக்கிப் பக்கத்து வீட்டுக் கொல்லை முற்றத்தை நோக்கி ஜயசீலன் சீட்டியடித்தான்.

குழாயடியில் குனிந்து பாவாடைக்கு சோப்புப் போட்டுக் கொண்டிருந்த சீலியா விசுக்கென்று சுழன்று திரும்பினாள். கட்டை கட்டையான இரட்டைப் பின்னல்கள் அவள் திரும்பிய வேகத்தில் ஒரு சக்கர வட்டம் அடித்து மார்பின் மேல் விழுந்தன.

முல்லைக் கொடியின் இடுக்கில் தெரிந்த ஜயசீலனின் முகத்தைக் கண்டதும் சீலியா பளீரென்ற புன்னகையுடன் அவன் அருகில் ஓடிவந்தாள், கையிலிருந்த சோப்பு நுரையை வழிக்காமல்.

"வரல்லியா நீ இன்னிக்கு?" என்றான் ஜயசீலன்.

"எங்கே?"

"இது நல்ல கேள்வி! ஊரெல்லாம் திருவிழாக்கோலம் பூண்டிருக்கு. உலகத் தமிழ் மகாநாட்டு விழாவுக்கு இன்னிக்குத்தான் கடைசி தினம். யார் வேணுமானாலும் போகலாம். வர்றியா?"

அவள் தலையைக் குனிந்து கைகளிலிருந்து சோப்பு நுரையை ஏதோ யோசனையில் லயித்தபடி வழித்தாள்.

அவன் பொறுமையிழந்து இடுக்கு வழியாகக் கையை நுழைத்து அவள் காதைத் திருகினான்.

"வர்றியா?"

"ஊய்!" என்று அவள் முகத்தைச் சுளித்துத் தன் காதைச் சோப்புக் கையினாலேயே விடுவித்தாள். மொத்தையாகச் சோப்பு நுரை காதில் அமர்ந்தது.

"ஊஹூம், இயலாது!"

"ஏன்?"

"அப்பா சம்மதிக்க மாட்டார்!"

"ஏன்?"

"ஊரிலே நிலவரம் எல்லாம் சரியாக இல்லையாம். இப்படிப்பட்ட கூட்டங்களுக்குப் போகிறது ஆபத்தாம்."

"சரியான பயங்கொள்ளி உன் அப்பா!" என்றான் அவன் தணிந்த குரலில். "ஒரு கிழமையா பெரிய திருவிழாப் போலப் பொருட்காட்சியும் கலைநிகழ்ச்சியுமா மாநாடு நடக்கிறது. பொது ஜனங்கள் இத்தனை நாள் நடந்த சொற்பொழிவுகளைக் கேட்க முடியல்லேங்கறதுக்காக இன்னைக்குத் திறந்த அரங்கத்துலே முடிவு விழா நடக்கப் போகிறது."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது" என்று அவள் உதட்டைச் சுழித்தாள். "எனக்கு அப்பா பர்மிஷன் கொடுக்க மாட்டார்!"

"உங்கப்பா ஒரு......"

அவள் மீண்டும் சிரித்தாள். நாக்கைத் துருத்தி அழகு காண்பித்தாள்.

"சீலியா!"

— வீட்டுக்குள்ளேயிருந்து வந்த அழைப்புக்கு இணங்கி அவசரமாகப் பாவாடையை ஒரு கையால் தூக்கிப் பிடித்து விடுவிடுவென்று வீட்டை நோக்கி ஓடினாள் அவள்.

சீலியவன் கொல்லையில் இருந்த காய்கறிப் பாத்திகளை ஜாக்கிரதையாகத் தாண்டினான்.

நேற்று இரவு மிகப் பெரிய மழை பெய்திருந்தது. மாநாட்டுக்குப் போயிருந்த அப்பா சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு வந்தார். அவருக்கு மட்டும் நுழைவுச் சீட்டுக் கிடைத்திருந்தது. திரும்பி வர வாகனம் எதுவும் கிடைக்காமல் நடந்து வந்திருந்தார் மழையில். ஆனாலும் கன உற்சாகமாக இருந்தார், ஏதோ போதையில் அமிழ்ந்திருந்தாற் போல். அன்றையச் சொற்பொழிவுகள் அற்புதமாக இருந்தனவாம். ஈர உடைகளைக் களையக் கூடத் தோன்றாமல் காவடிச் சிந்தைப் போல, 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே — இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாடினார்.

"எலே, நாளைக்கு நீயும் வா!" என்றார் அவனைப் பார்த்து. "கடைசி நாளானதாலே பொது ஜனங்களும் கலந்து கொள்ளச் சௌகர்யமா திறந்த அரங்கத்திலே நடக்கும்."

"நாளைக்கும் மழை பெய்தால்?" என்றாள் அம்மா.

"அப்ப வேறே ஏற்பாடு நடக்கும், ஜனங்களுக்கு இடைஞ்சல் இல்லாம."

மழை நீர் தேங்கிச் சேறாகி இருந்த இடத்தைத் தாண்டி ஒரு குதி குதித்து ஜயசீலன் உள்ளே சென்றான்.

காலை ஆகாரத்துக்கான தயாரிப்பில் அம்மா சமையற்கட்டில் இருந்தாள். பள்ளி விடுமுறை என்கிற கொண்டாட்டத்தில் தங்கைகள் கஸ்தூரியும் ஞானமும் கதைப் புத்தகத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

அண்ணன் தேவாவை எங்கோ காணோம்.

வாஸந்தி



வழக்கம் போல.

நடுக்கூட்டத்தில் அப்பா யாருடனே பேசிக் கொண்டிருந்தார். அவன் ஓசைப்படுத்தாமல் அதை ஒட்டிய அறையில் உட்கார்ந்து கொண்டான் பாடம் படிக்கும் பாவனையில். பெரியவர்களுடைய பேச்சின் நடுவில் அமர்ந்து அவர்கள் பேச்சைக் கேட்பது அப்பாவுக்குப் பிடிக்காது.

''இந்த விஷயமெல்லாம் உனக்கு இப்ப வேண்டியதில்லை'' என்பார்.

ஆனால் அவனுக்கு அவர்கள் பேச்செல்லாம்தான் வேண்டியிருந்தது. அவர்கள் பேசுவது சாதாரண அக்கப் போரோ அண்டை அசல் வம்போ இல்லை. அவனுக்கு விவரம் தெரிந்த நாள் முதலாய் அவர்கள் பேசுவது அரசியல்தான். இதை நான் தெரிந்து கொண்டால் என்ன என்கிற கேள்வியை அவன் அடிக்கடி தனக்குள் கேட்டுக் கொள்வான், அப்பாவை நேரடியாகக் கேட்கும் தைரியமில்லாமல்.

ஆனால் அரசியலைத் தெரிந்து கொள்ள இப்படி ஒளிந்திருந்துதான் கேட்க வேண்டும் என்கிற அவசியம் ஏதும் இருக்கவில்லை. யாழ்ப்பாணத் தெருக்களிலும் கடை வீதிகளிலும் பேசப்படும் பேச்செல்லாம் சுற்றிச்

சுற்றி அரசியல்தான். பெண்கள்தான் இதெல்லாம் அலுத்துப் போய்ச் சமையலைப் பற்றியும் ஜுர வேகமாய் ஏறும் விலைவாசியைப் பற்றியும் பேசுவார்கள். தேவா வயதொத்தப் பொடியன்களுக்கு அரசியலைத் தவிர வேறு சிந்தனையே இருக்காதோ என்று தோன்றும். சில வேளைகளில் தேவாவின் கண்களையும் சீற்றம் மிகுந்த வார்த்தைகளையும் பார்க்கும்போது, அடி வயிறு காரணம் புரியாமல் ஜில்லிட்டுப் போகும்.

ஜயசிலனை விட தேவநேசன் நான்கு வயது மூத்தவன். ஜயசிலனுக்கு ஆறு ஏழு வயதாகியிருக்கும் போது, கொழும்பில் எல்லாரும் வசதியாக இருந்த காலத்தில் தேவாவை நன்றாக நினைவிருக்கிறது. எப்பவும் சிரிப்பும் வெடிக்கையுமாக இருப்பான். பிறகு படிப்படியாகச் சிரிப்பும் பேச்சும் மறைந்து போயின. எங்கே போயிற்று என்று புரியவில்லை.

இப்பொழுது முகத்தில் தீவிரச் சிந்தனைக் கோடுகள். அப்பாவுடன் அடிக்கடி சண்டை போடுகிறான்.

"தேவா வீட்டிலே இருக்கும் போது அரசியல் பேச்சு வேண்டாம்!" என்று அம்மா மன்றாடுகிறாள்.

"உங்களைப் போலப் பலர் இருப்பதால்தான் சிங்கள அரசு நம்மைச் செருப்பாகப் போட்டுத் தேய்க்கிறது. இண்டைக்கு நமக்கு மொழி கிடையாது. நாளைக்கு நமக்கு நிற்க நிழல் இருக்காது!" என்று அப்பாவைப் பார்த்து தேவா மூச்சிரைக்க, கழுத்து நரம்புகள் புடைக்கக் கத்தும் போது எங்கோ மூலையில் ஒடுங்கியபடி அவர்கள் பேச்சைக் கேட்கும் ஜயசிலனுக்கு நெஞ்சு படபடத்து உள்ளங்கை வியர்த்துப் போகும்...

கொழும்பில் பள்ளியில் படித்த நாட்களில் ஏற்பட்ட சம்பவங்களெல்லாம் சங்கிலிப் பின்னலாய்க் கோத்து நினைவில் மோதும்.

சிங்கள மாணவர்கள் கூடத் தமிழ்ச் சிறுவர்களுடன் ஒட்டாமல் விலகியிருந்ததும் சமயம் கிடைத்த போதெல்லாம் ஒன்று கூடி மட்டம் தட்டியதும் அடிமனத்தில் ஒரு குழப்பத்தை இப்பவும் ஏற்படுத்திற்று. திடீரென்று பள்ளிகள் எல்லாம் தேசிய மயமாக்கப்பட்டுச் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாகி விட்டதும் அதனுடன் ஈடு கொடுக்க முடியாமல் யாழ்ப்பாணத்துக்குக் கிளம்பி வந்த அனுபவமும், மனக்குட்டையில் விழுந்த கல்லாய்ப் பல கேள்வி அலைகளைக் கிளப்பித் தொடர்ந்து சலனப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

சென்ற ஆண்டு தேவாவுக்குக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. இந்த ஓராண்டு காலமாக அவன் வீட்டிலிருக்கும் நேரமெல்லாம், அதாவது அப்பாவும் இருக்கிற நேரமெல்லாம் பூகம்பம் எப்பொழுது கிளம்புமோ என்கிற பீதியில் அம்மா இருக்கிறாள். இப்பொழுது தேவா வீட்டில் இல்லை. அதனால் அப்பாவின் குரல் சற்று ஓங்கிக் கேட்கிறது. கடந்த ஒரு வாரமாக நடக்கும் தமிழ் மகாநாட்டுக் கோலாகலங்கள் நல்ல வேளையாகப் பேசுவதற்கு வேறு விஷயங்களைத் தோற்றுவித்திருக்கிறது.

"பொன்னம்பலம், மாநாடு இதுவரை நல்லபடியா நடந்து கொண்டிருக்கு. நீர் எதற்குக் கவலைப்படணும்?" என்றார் அப்பா.

"கொழும்பிலே அரசு உத்தியோகம் பார்த்துப் பார்த்து உமக்கு எல்லாமே மரத்துப் போச்சு குசுதாஸன். இந்த மாநாடு நடத்த அனுமதி வழங்க அரசுக்குச் சம்மதமேயில்லை. நீங்கள் அனுமதிக்காவிட்டாலும் நாங்கள் நடத்தியே தீருவோம்னு யாழ்ப்பாணத்திலே நடத்தத் தீர்மானித்த பிறகு தானே உலக நாடுகள் முன் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளணும்னு அரைகுறையாச் சம்மதித்தது. இத்தனை பெரிய விழாவுக்கு வானொலியோ, தேசிய தினசரிகளோ, ஃபிலிம் யூனிட்டோ விளம்பரம் கொடுத்திருக்கோ? எல்லாம் அரசாங்கத்துக் கூலிப் படைகள்தானே?"

"சரி, விட்டுத் தள்ளுங்கள். நாம் ஒவ்வொன்றையும் கண்ணுலே விளக்கெண்ணெய் விட்டுப் பார்த்தோமானால் நமக்குத்தான் கஷ்டம். ஒரு கிழமையாக் கிடைச்ச இலக்கியச் சுகமெல்லாம் மறந்து போகும்."

"அது சரி, அதுக்காக உண்மை நிலவரத்தைப் பற்றிச் சிந்திக்காம இருக்க முடியாதில்லே? இது ஓர் இலக்கியக் கலாசார விழா தானென்னு அவங்களுக்குத் தோண இல்லே. நாம என்னவோ நம்ம பலத்தை நிலை நாட்டறதுக்காகவும், நம்ம மொழி தான் உசத்தின்னு காண்பிக்கறதுக்காகவும் கொண்டாடறோம்ங்கிற நினைப்பு அவங்களுக்கு. இது நாலாவது உலகத் தமிழ் மகாநாடு என்கிறதும் இதுக்கு முந்தி வேறு தேசங்களிலே நடந்தது என்கிறதும் அவங்களுக்குத் தோண இல்லே!"

அப்பா தணிந்த குரலில் பேசினார்: "இப்ப இருக்கிற நிலவரத்திலே அவர்களுக்கு அப்படித்தான் தோணும் பொன்னம்பலம்! அது நியாயமா நியாயமில்லையா என்கிறது வேறே விஷயம்!"

"எதுக்குச் சொல்ல வரேன்னா, இந்த நினைப்பினாலே இன்னிக்கு நடக்கப் போற கூட்டத்தைக்கலைக்கஏதானும்முயற்சிநடந்தாலும் நடக்கும்."


"நாமா ஏன் அப்படி நினைக்கணும்? இது நாள்வரை ஒரு தொந்தரவும் இல்லையே?"

"இத்தனை நாள் பொது நிகழ்ச்சியா நடக்கல்லே. ஒரு விஷயம் தெரியுமோ? நேற்று இரவு கனமழை பெய்ததாலே, திறந்த வெளி அரங்கத்திலே இன்னிக்கு நடக்க இருந்ததை மாற்றி வீரசிங்கம் கூடத்திலேயே நடத்தறதா முடிவு செஞ்சிருக்கோம்!"

"பெரிய கூட்டம் வருமே இன்றைக்கு!"

"என்ன செய்ய முடியும்? திறந்த வெளியிலே நடக்கும் போது மழை வந்தாத் திரும்பக் கூடத்துக்கு வர்றது சிரமம். நம்ம ஜனங்கதானே? அமைதியா இருப்பாங்க, சமாளிச்சிக்கலாம் சிங்களக்காரன் தலையிடாத வரைக்கும்."

அப்பாவிடமிருந்து பதில் வரவில்லை.



டீ உலகில் உயர் வட்டம்

சக்கரா டீ

உயர் வகுப்பினர் பாராட்டும்
தேநீர்ச் செல்வம் சக்கரா டீ.
சொகுசான சுவைமண, திட
குணங்களின் முழுமை
வட்டம். தேநீரிலே
சுக போகத்தின் உயர்
வட்டம்: சக்கரா டீ.

உயர் வட்ட ரசிகர்களுக்கு
உயர் வளமுள்ள தேயிலை



சக்கரா டீ

டாட்டா டீ லிமிடெட்
உலகிலேயே மிகப்பெரிய டீ கம்பெனி.

daCunha/TT/246/87/TM



போலீஸ் 1: "என்ன சார் இது அந்தச் சாராயப் பானை மீது என்னவோ எழுதியிருக்கு?"

போலீஸ் 2: "அட, 'கயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி: அரோகரா பேங்கு'ன்னு போட்டிருக்கு!"

— இளை அ. கதிர்வேல்

பொன்னம்பலம் கிளம்பிப் போய் விட்டார்.

"ஜயசீலன்!" என்று அம்மா உள்ளிருந்து குரல் கொடுத்தாள். "கடைக்குப் போய் ஒரு உப்புப் பொட்டலம் வாங்கி வா!" என்றாள்.

மடியின் மீது திறந்தபடி இருந்த புத்தகத்தை மூடி வைத்து அவன் எழுந்து சென்றான். அவளிடம் காசை எண்ணிக் கொடுத்துத் தணிந்த குரலில்,

"சாமானை வாங்கியதும் நேரே வீட்டுக்கு வா, நல்ல பிள்ளையாய்!" என்றாள் அம்மா.

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"நல்ல பிள்ளையா இல்லையாண்டு சந்தேகமா?"

அம்மா பெருமூச்சு விட்டாள். "நான் சொன்னபடி கேள். சரியா? தேவாவும் உன்னைப்போலத்தான் இருந்தான் ஒரு காலத்தில்."

ஜயசீலன் பதில் பேசாமல் கிளம்பினான். அண்ணனைப் பற்றி இவர்களிடம் ஏதும் பேசாமல் இருப்பதே நல்லது என்று தோன்றிற்று. தேவாவின் விவகாரங்கள் அவனுக்கும் புரிவதில்லை. அவன் வெளியில் எங்கே போகிறான்? யார் அவனுடைய தோழர்கள்? என்று யாருக்கும் தெரியாது. குடும்பப் பேச்செல்லாம் அவன் பகிர்ந்து கொள்வதே இல்லை. அவனுடைய கவனமெல்லாம் வேறு எங்கோ இருந்தன. பெண் சிநேகிதம் நிச்சயம் இல்லை. அவன் படிப்பதெல்லாம் புரட்சி இலக்கியம். அதையும் அறையைத் தாளிட்டுக் கொண்டு தனிமையில் படிக்கிறான். ஆனாலும் அவன் போக்கு நல்லதிற்கா கெடுதலுக்கா என்று ஜயசீலனுக்குப் புரியவில்லை. அண்ணனின் மேல் ஓர் இரகசிய அபிமானமும், அவனைப் பற்றி விவரம் புரியாத பெருமையும் அவனுக்கு உண்டு.

கடையில் உப்பை வாங்கிக் கொண்டு திரும்புகையில் சீலியாவின் அண்ணன் ஜஸ்டின் எதிர்ப்பட்டான்.

"இன்டைக்கு மாநாடு விழாவுக்குப் போவீர்தானே?" என்றான் ஜயசீலன்.

"ஓம். நீ?"

"நானும்தான்."

"தேவநேசன்?"

"அவனைப் பற்றித் தெரியாது. அண்ணன் இப்பத் தனி ஆளு!"

ஜஸ்டின் மௌனமாக அவனுடன் நடந்தான்.

"தேவாவும் போகாமல் இருக்க மாட்டான். தமிழர் உரிமைக்காகப் போராடறவன் தமிழ் மாநாட்டுக்குப் போக மாட்டானா?" என்றான் மெல்ல.

"அவன் என்ன செய்யுறான்னு யாருக்கும் தெரியாது."

ஜஸ்டின் சிரித்தான்.

"வேறே என்ன செய்வான்? போராளிக் கும்பல்லே சேர்ந்திருப்பான். இருக்கிற நிலைமையைப் பார்த்தா மெல்ல மெல்ல நீயும் நானும் கூடச் சேருவோம். தப்ப இயலாது."

"எனக்குக் குழப்பமாத்தான் இருக்கு ஜஸ்டின். ஒண்ணும் சரியா விளங்கல்லே. நாம ஏன் போராடணும்னு புரியல்லே."

ஜஸ்டின் அவன் தோள் மேல் கை வைத்து அவனைக் கூர்ந்து பார்த்தான்.

"உனக்கு மீசை இன்னும் முளைக்காட்டாலும் புரிஞ்சுக்கக் கூடிய வயசுதான். இரண்டு வருஷங்களுக்கு முந்தி பாராளுமன்றத்தினுடைய அங்கீகாரிப்பு இல்லாமலே ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அரசு கொண்டு வந்ததில்லையா? அது தமிழர்களுக்கு ரொம்பப் பாதகமானது. சிங்களக்காரனோடு நாம் சேர்ந்து வாழ முடியாதபடி பிரிச்ச சட்டம். சிங்களமே ஆட்சி மொழியானதாலே சிங்களம் படிச்சவனுக்குத்தான் சிங்களப் பகுதியிலே வேலை வாய்ப்பு. அதுவும் உறுதியில்லே. தமிழன் படிச்சாலும் சிங்கள மக்களுக்குத்தான் எல்லா இடத்திலேயும் அதிகச் சதவிகித வாய்ப்புக் கொடுக்கணும்னு ஏற்பாடு. தமிழன் அதிக மதிப்பெண் வாங்கினாலும் கல்லூரியிலே அவனை விடக் குறைஞ்ச மதிப்பெண் வாங்கின சிங்களப் பொடியனுக்குத்தான் காலேஜிலே ஸீட்டுக் கிடைக்கும். தேவநேசனுக்கு அந்தக் காரணத்தாலேதானே ஸீட்டுக் கிடைக்கல்லே? வேலை வாய்ப்பும் அப்படித்தான். நமக்கு இரண்டாம் இடம்தான். தமிழ்ப் பகுதியிலே நீதிமன்ற மொழி தமிழானாலும், சிங்களச் சட்டத்துடைய தமிழாக்கம்தான் அது. நமக்குப் பாதுகாப்பான சட்டம் எதுவுமே இல்லே. அப்ப நமக்குக் கோபம் வரணுமா வேண்டாமா? ஆனா நம்ம பெரியவங்களுக்குப் போதுமான கோபம் இல்லே. கோபம் வந்தாலும் எதிர்த்துப் பேசத் தைரியமில்லே. அவங்க தொடை நடுங்கிகளா இருக்கலாம். அவங்க காலம் முடிஞ்சு போச்சு. பாதிக்கப்படறவங்க நாமதான். நாம சும்மா இருக்க முடியுமா? வெறும் பேச்சினாலே, மறியல்னாலே எதிர்ப்புக் காண்பிக்கறது தொடை நடுங்கிகள் வழி. நம்ம வழி வேறே!"

ஜயசீலன் வாய் திறந்தபடி அவன் பேச்சைக் கேட்டான். ஜஸ்டினின் பார்வையும் பேச்சும் கிட்டத்தட்ட தேவாவின் சாயலாக இருந்தது. நாடி நரம்புகளிலெல்லாம் ஏதோ புருபுருவென்று ஊர்வது போலிருந்தது ஜயசீலனுக்கு!

(தொடரும்)



* நைஜாமுடன் சந்திப்பு

மாதச் சம்பளம் ரூ 20,000 அவசியமா?

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — IV
ராஜ்மோகன் காந்தி

3

சுதேச சமஸ்தானங்களின் விவகாரங்களைக் கவனிக்கும் அமைச்சகத்தில் வி. பி. மேனன் செயலாளர். அவர் எழுதுகிறார்:

''ஹைதராபாத்தையொட்டியிருந்த இதர மாகாணங்கள் மிகவும் கவலையுற்றன. ரஜாக்கர்களின் அட்டூழியங்கள்', அதனால் வெளியேறிய அகதிகள் — இவையே கவலைக்குக் காரணங்கள். சமஸ்தான விவகாரங்கள் அமைச்சு, ஹைதராபாத்தை நாம் ஆக்கிரமித்து அங்கு நிலவும் குழப்பத்துக்கும் நடக்கும் அட்டகாசத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. இதனைப் பிரதம மந்திரி வன்மையாக எதிர்த்தார். சுதேச சமஸ்தான அமைச்சகத்தின் போக்கைக் கடுமையாக விமர்சிக்கவும் செய்தார். சர்தார் இதனால் பாதிப்படைந்து கூட்டம் முடியும் முன்பு நடுவிலேயே எழுந்து போய் விட்டார்! அன்று பிற்பகலிலேயே கவர்னர் ஜெனரல் ஸி. ராஜகோபாலாச்சாரி, தமது அறையில் பிரதம மந்திரியையும் சர்தார் பட்டேலையும் என்னையும் அழைத்துப் பேசினார். இந்தக் கூட்டத்தில் ஹைதராபாத்தை நாம் ஆக்கிரமிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.''

மறைமுகமான இறுதி எச்சரிக்கை போல ஸி. ஆரிடமிருந்து ஒரு கடிதம் நைஜாமுக்குச் சென்றது. அதில், 'நைஜாமின் மெத்தனமும் அலட்சியமும் தொடருமானால் இந்திய அரசு தானாகவே முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்' என்று கண்டிருந்தது. இதே செய்தி மீண்டும் தந்தி மூலம் செப்டம்பர் 12 ஆம் தேதி அனுப்பப்பட்டது. 'மேன்மை பொருந்திய தாங்கள் என் யோசனையை நிராகரிக்க மாட்டீர்கள் என்றே இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறேன்' என்றும் அந்தச் செய்தியில் ஸி. ஆர். குறிப்பிட்டிருந்தார். ஆனால் நைஜாம் மசியவில்லை.

மறுநாள் பொழுது விடிவதற்கு முன் இந்தியத் துருப்புக்கள் எல்லையைக் கடந்து முன்னேறின. நான்கே நாட்களில் நைஜாம் சரணடைந்தார். இந்தியாவை எதிர்த்து வந்த தமது லயிக் அலி மந்திரி சபை ராஜினாமா செய்து விட்டதாக அறிவித்தார். ரஜாக்கர்களுக்குத் தடை விதித்தார். இந்திய ராணுவத்தை வரவேற்றார். கௌரவமான முறையில் தாம் நடத்தப்பட வேண்டும் என்று ஸி. ஆரிடம் மன்றாடினார். ரஜாக்கர்களும், ஹைதராபாத் சமஸ்தான ராணுவத்தினரும் பல நூறு பேர் போரில் மடிந்தார்கள். இந்திய ராணுவம் பத்து வீரர்களைப் பறி கொடுத்தது.

நைஜாம், ஹைதராபாத்தின் ஆட்சித் தலைவராக நீடிக்கலாம் என்று அவரிடம் கூறப்பட்டது. தமக்குரிய கௌரவங்களையும் சலுகைகளையும் அவர் தொடர்ந்து பெற்று வருவார். ஆனால் தேர்தல் நடக்கும் வரை ஆட்சி அதிகாரம் ராணுவ கவர்னரிடம் இருக்கும்.

ராணுவ நடவடிக்கையின் வேகம், ஸி. ஆருக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தது. இந்தப் படையெடுப்பின் போது, இனக்கலவரம் ஏதும் மூளாமல், இந்தியா முழுவதும் நிலவிய அமைதி அவருக்கு மேலும் மனநிறைவை அளித்தது. 'கல்கத்தாவில் மகாத்மா நிகழ்த்திய அற்புதத்துக்கு ஒப்பான இரண்டாவது அற்புதம் இந்த அமைதி' என்று வர்ணித்தார். ஜுமா மசூதியிலும் பிர்லா மந்திரிலும் நன்றி தெரிவித்துப் பிரார்த்தனைகள் நடைபெறச் செய்து, அந்தத் தொழுகைக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார். பிர்லா கோயிலில் பேசும் போது முஸ்லிம்களின் மனப்போக்கைப் பாராட்டினார். மசூதியில், 20,000 பேர் திரண்டிருந்த கூட்டத்தில், நைஜாமை ஓர் ஆபத்தான



“அனுராதாவைக் கல்யாணம் பண்ணிக்கப் பலபேர் முன்வந்தால் யாரை தேர்ந்தெடுப்பாங்க?”

“குலுக்கல் முறையில் ஒரு வரைத்தான்!”

—கீழை.அ.கதிர்வேல்.



“இந்த ஆஸ்பத்திரிக்கு மட்டும் அவ்வளவா அவுட் பேஷண்ட்ஸ் வர்றதில்லையே ஏன்?”

“இன் பேஷன்ட்ஸ் எல்லாம் ‘அவுட்’ ஆயிடறதால்தான்!”

—கீழை.அ.கதிர்வேல்.

“கல்யாணமாகாத ஒழுக்கமான ஊழியருக்குத்தான் புரமோஷன்னு மானேஜர் அறிவிச்சுட்டாரே!”

“ஆமாங்க. அவரோட நாலு பொண்ணுங்க கல்யாணத்துக்காகக் காத்துக்கிட்டிருக்குதுங்க....”

— மணியன் தர்மலிங்கம்



கொள்கையைப் பின்பற்றுமாறு நிர்ப்பந்தித்த ஹைதராபாத் குண்டர்களைப் பற்றி ஒளிவு மறைவின்றிப் பேசினார்.

ஸி. ஆரைப் பின்பற்றி வந்த பல ஆட்சித் தலைவர்களோடு அவரை ஒப்பிடுகையில், ஸி. ஆர். தனித்தன்மை பெற்று விளங்குகிறார். ஹைதராபாத் பிரச்னையில் ஸி. ஆர். நேரடியாக ஈடுபட்டு முக்கியப் பங்கு வகித்ததைக் காண்கிறோம். ஸி. ஆருக்குப் பின்னால் வந்தவர்களிடமிருந்து அவர் இப்படி வித்தியாசப்பட்டுத் திகழ்வதற்கு ஒரு காரணம், நேரு — பட்டேல் — ஸி. ஆரிடையே நிலவிய விசித்திரமான உறவு முறை. ஜவாஹர்லால், பட்டேல் ஆகிய இருவருக்குமே ஸி. ஆரின் யோசனைகள் முக்கியமானவையாக இருந்தன. அவர் கையெழுத்து மட்டுமே முக்கியம் என்று அவர்கள் கருதவில்லை. மேலும் — நேரு — பட்டேல் ஆகிய இருவருக்கும் இடையில் அடிக்கடி கருத்து மாறுபாடுகள் தோன்றிக் கொண்டே இருந்ததால் இருவருக்கும் நம்பிக்கையான ஒரு மூன்றாவது மனிதரின் தலையீடு அவசியமாயிருந்தது. சில மாதங்கள் சென்று ஸி. ஆர். பற்றிப் பட்டேல் பேசியபோது, ஹைதராபாத் நடவடிக்கையில் ஸி. ஆரின் பங்கை நினைவில் வைத்துக் கொண்டுதான் பேசியிருக்க வேண்டும். பட்டேல் கூறினார்:

“ஆட்சித் தலைவரான கவர்னர் ஜெனரல் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது அவருக்கு (ஸி. ஆருக்கு)த் தெரியும். எல்லைகளுக்கு உட்பட்டிருந்தபடியே எல்லைகளை மீறுகிற நுணுக்கத்தை அவர் அறிவார்!”

இதற்கு மறுபுறமாக பட்டேலின் ஆற்றலை ஸி. ஆர். எவ்வளவு தூரம் மதித்தார் என்பதற்கும் ஸி. ஆருடைய பரோடா பேச்சு சான்று பகர்கிறது. அதே சொற்பொழிவில் சமஸ்தானாதிபதிகளையும் அவர் அன்புடன் தட்டிக் கொடுத்தார். பரோடாவில் பின்வருமாறு பேசினார் ஸி. ஆர்:

“சமஸ்தானங்கள் அற்புதமான முறையில் இணைக்கப்பட்டன, பட்டேலுக்கு நாம் எவ்வளவு பாராட்டுத் தெரிவித்தாலும் போதாது...... ஆனால் எல்லாப் பெருமையையும் நான் பட்டேலுக்கு மட்டுமே தரத் தயாராக இல்லை. சமஸ்தானாதிபதிகளுக்கும் பகுதிப் பாராட்டு உரியதாகிறது. விட்டுக் கொடுப்பது என்பதை விடக் கடினமான காரியம் ஏதொன்றும் இல்லை. எல்லா சமஸ்தானாதிபதிகளும் எத்தனையோ காலமாகத் தாங்கள் அனுபவித்து வந்துள்ள உரிமைகளை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மூலம் தங்களுடைய பெருந்தன்மையை உணர்த்தியிருக்கிறார்கள்......

சமஸ்தானாதிபதிகளை மட்டுமின்றிச் சாமானியரையும் ஸி. ஆர். பாராட்டி மகிழ்வித்தார். பெங்களூர் சென்றிருந்த போது, அவருடைய காரைச் சூழ்ந்து அவரைக் காணக் குழுமியிருந்த மக்களிடையே, தமக்கு முந்நாளில் சமைத்துப் போட்ட சமையல்

காரரைப் பார்த்து விட்டார் ஸி. ஆர். ராஜனுக்கு ஒரு கால் ஊனம். அவரை அருகே அழைத்து, அவர் கரத்தில் ஒரு நூறு ரூபாய் நோட்டைத் திணித்த ஸி. ஆர்., தம் பரிவாரத்தில் ஒன்றாக வந்திருந்த ஒரு காரில் அவரை ஏற்றி வீட்டில் சேர்ப்பிக்குமாறு பணித்தார். சென்னையில், செருப்புத் தைக்கும் ஒருவர் ஸி. ஆரின் காரை நோக்கி ஓடி வந்தார். போலீஸார் குறுக்கிட்ட போது, "அவனை ஒன்றும் செய்யாதீர்கள்; அவனை எனக்குத் தெரியும்! தரமான செருப்புக்களைத் தயாரிப்பான்" என்று பரிவுடன் கூறினார், ஸி. ஆர்.

கவர்னர்-ஜெனரலான பிறகும் சுப மானங்களை உதிர்க்கும் பழக்கம் ஸி. ஆரிடம் தொடர்ந்தது. "இந்தியாவின் எல்லா இடங்களுக்கும் பறக்கும் விமானம் ஆங்கிலம். உயர் மட்டத்தில் இந்தியா முழுவதும் துரிதத் தொடர்பு கொள்ள வேண்டுமானால் ஆங்கிலத்தை அலட்சியப்படுத்தாதீர்கள்!" என்றார். கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பேசுகையில், அது "ஒரு ரயிலை ஓடிக் கொண்டிருக்கும் போதே பழுது பார்ப்பதற்கு ஒப்பானது" என்று குறிப்பிட்டார். "எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சில காலம் மூடி வைத்து விட்டு நிம்மதியாக யோசிக்க முடியுமா?" மாணவர்களுக்குப் பின்வருமாறு அறிவுரை வழங்கினார்: "யாரோ சமைத்துக் கொடுத்த உணவை ஒரு மாதம் வைத்திருந்து சாப்பிடுவதைவிட, மார்க்கெட்டிலிருந்து அவ்வப்போது சாமான்கள் வாங்கி வந்து நாமே சமைக்கத் தெரிந்து கொள்வது சிறந்தது. அதேபோல்தான் மாணவர்கள் பல்வேறு விவரங்களை மூளையில் திணித்துக் கொள்வதை விடத் தாமாகச் சிந்திக்கத் தெரிந்து கொள்வது நல்லது."

இந்தியா குடியரசான பிறகும் காமன்வெல்த்தில் தொடர்ந்து அங்கம் வகிக்கும் என்று லண்டனில் நடந்த காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் தீர்மானமாயிற்று. இதில் ஜவாஹர்லாலின் பங்குதான் பிரதானம் என்றாலும் இந்த முடிவுக்கு அவர் வர ஸி. ஆர். ஊக்கமளித்திருப்பார் என்று ஊகிக்கலாம். பிரிட்டனுடன் இந்த மாதிரியான ஓர் உறவுமுறை உருவாக வேண்டும் என்றுதான் ஸி. ஆரும் மகாத்மாவும் பட்டேலும் சுதந்திரப் போராட்ட காலத்திலேயே எண்ணினார்கள். ஆனால் நேரு, தீவிரவாதிகளுடன் இணைந்து தொடர்பைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தவர்.

லண்டனில் இப்போது எடுக்கப்பட்ட முடிவை, 'மகாத்மா மரணத்துக்குப் பின்னரும் அடைந்த வெற்றி' என்று வர்ணித்தார் ஸி. ஆர். இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டத்தில் முக்கிய பங்கேற்க நேர்ந்த நேருவுக்குத் தமது அன்பையும் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்தார்.

இந்த மாதிரியான ஒரு சமூகச் சூழ்நிலையில், 'கவர்னர் ஜெனரலுக்கு மாதம் இருபதாயிரம் ரூபாய்ச் சம்பளம் அவசியமா?' என்று ஒரு கேள்வி பிறந்தது!

(தொடரும்)

அடுத்த இதழ்:

பசும்பொன் மாவட்டத்தில் கல்கி — II

* "காசையும் கொடுத்துவிட்டுக் காத்துக் கிடக்கிறோம்...."
— காரைக்குடியில் சில குமுறல்கள்



குன்றக்குடி கூறும் திட்டங்கள்!

* "உங்கள் விசிட்டுக்கு நன்றி!"
— பசும்பொன் கலெக்டர் பேட்டி



ரெடிமணி - வாடிக்கையாளர் பண உதவியில் முதன்மையான பெயர்

* பிரபலமான ரெடிமணி திட்டங்களை அளித்தவர்கள் ஷாப்பர்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
* மாதா மாதம் சம்பள வருவாயை நம்பியிருப்போர்களுக்கு நீடித்துழைக்கும் பொருட்களை வாங்க பண உதவி அளித்து பிரபலமானது இந்நிறுவனம்.
* ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்றது.
* சிடி பாங்க், இந்தியன் பாங்க் மற்றும் யூக்கோ பாங்குகளின் பேராதரவு.
* இவர்களின் ஆதரவு,கம்பெனியின் வளமான நிதிநிலைமைக்குச் சான்றாக உள்ளது. மேலும் தவணை முறையில் பொருட்களை வாங்கும் பழக்கம் நாள் தோறும் பெருகிக் கொண்டே வருகிறது.

ரெடிமணி, இச்சூழ்நிலையை முழுமையாகத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள பொது மக்களுக்கு ஷேர்களை விற்பனை செய்ய முன் வந்துள்ளது.

சிறப்பு அம்சங்கள்

- கடன் வசதிகளை அளிக்கும்போது பங்கு பெறப் போகிறவர்களின் தகுதிகளுக்கேற்ப இலவச உறுப்பினர் மற்றும் முன்னுரிமை தகுதி அளிக்கப்படும்.
- பங்குபெறப் போகிறவர்களுக்குக் கடன் வசதியில் சலுகை வட்டி விகிதம்.
- ஆண்டிற்கு 18% நிச்சயமான டிவிடெண்டு.

துரித வளர்ச்சியுடன் திகழும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது.

ஏற்கனவே லாபம் சம்பாதித்து வரும் கம்பெனி.

ஷேர்களை எளிதாக விற்பனை செய்ய சென்னை மற்றும் பம்பாய் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

ஒவ்வொன்றும் ரூ. 10/- ரொக்க மதிப்புள்ள 7,50,000 ஈக்விடி ஷேர்கள் பொதுமக்களுக்கு அளிப்பு

ஷாப்பர்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்,
105, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை,
சென்னை 600 004.

இஷ்யூவை நிர்வகிப்பவர்கள்,


கேன்பாங்க் பைனான்ஷியல் சர்வீஸஸ் லிமிடெட்
சென்னை

இந்தியன் பாங்க்
மெர்ச்செண்ட் பாங்கிங் டிவிஷன்
31, இராஜாஜி சாலை,
சென்னை 600 001.

Readymoney

ஷேர்கள் அளிப்பு
துவக்க நாள்
ஆகஸ்டு 31, 1987


RK SWAMY. RSC 5158




* திருக்கோஷ்டியூர்: இப்போது சிலை வடிவில் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்துதான் அன்றும் இராமானுஜர் மந்திர உபதேசம் செய்தார்.



* கம்பர் சமாதி



* பாகனேரி: ஊர் மக்களே ஊரணியைத் தூர் எடுக்கும் காட்சி...



* பழைய ஏவி.எம். ஸ்டுடியோ



* சீனிவாசகம்



* மீரா



* புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தின் ஒரு பகுதி...

பசும்பொன்: பார்த்தோம்; பேசினோம்; சொல்கிறோம்!

• மையமாய், பழைய காலத்தைச் சத்தமில்லாமல் சொல்லும் அரண்மனை. அதைச் சுற்றிக் கிராமீயமான தெருக்கள். நகர இரைச்சல்கள் இன்னும் அதிகப்படவில்லை. ஆறு மணியானாலே கிராமம் மாதிரி அயர்ந்து விடுகிற கிராமீயமான நகரம்தான் சிவகங்கை.

• அரண்மனைக்குப் போனால், முகப்பு மட்டும்தான் அரண்மனை மாதிரி இருக்கிறது. உள்ளே உள்ள பல மண்டபங்கள் நெருக்கடியில் அரசாங்க ஆபீஸ்களாகி விட்டன. அந்தப்புரத்தில் நீராட ஒரு குளம் கூட இருந்ததாம். இருக்காதா? எல்லா இடங்களும் சரித்திரச் சுவடே இல்லாமல் வெறிச்சோடி விட்டன. சில கட்டடங்களில் கதவுகள், ஜன்

னல்கள் கூட இல்லே! பழங்கால நினைவா கவோ என்னவோ, அரண்மனைக்குள் மாவில் கள் சர்வ சாதாரணமாக நடமாடுகின்றன.

● கம்பர், நம்ம ராமாயணக் கம்பர்தான், இறந்தது சிவகங்கையை அடுத்திருக்கிற நாட்டரசன்கோட்டையிலாம். கதை கூட இருக்கிறது அங்கே. கம்பர் அப்போது எங்கோ போய்க் கொண்டிருக்கும் போது பசிக்கவே நாட்டரசன் கோட்டை முகப்போரம் வந்து கொஞ்சம் யோசித்திருக்கிறார். தூரத்தில் ஒரு மாடு மேய்க்கிற சிறுவன். பையனை விசாரித்திருக்கிறார். ''முடிக்கரைக்கு வழி எங்கேப்பா!'' என்று. ''அடிக்கரை பற்றினல் முடிக்கரை ஏகலாம்'' என்றிருக்கிறான், பையன். கம்பருக்குக் கொஞ்சம் ஷாக், ''என்னடா பயல் இவ்வளவு விவரமா?'' என்று. இன்னொரு சிறுவனிடம் ''சோறு எங்கே விக்கும்?'' என்று பசியோடு கேட்க — ''தொண்டையில்'' என்றிருக்கிறான் பயல். கம்பருக்குப் பரவசமாய்ப் போய் — ''கருங்காலிக் கட்டைக்கு வாய் நாணுக் கோடாரி; கதலி இளம் தண்டுக்கு வாய் நாணும்; காட்டெருமை மேய்க்கின்ற காளையர்க்கு நான் தோற்றேன்; நாட்டரசன் கோட்டை நமக்கு'' என்ற பாட்டையும் படபடவென்று பாடி விட்டு, நாட்டரசன் கோட்டையிலேயே தங்கி விட்டாராம். ''இதெல்லாம் செவி வழிச் செய்திதான். கம்பர் சமாதியில் வருஷம்தோறும் விழா எடுக்கிறோம்'', என்றார், உள்ளூர் கம்பன் கழகச் செயலாளரான காளிமுத்து. கம்பர் சமாதிக்குப் போனேம். நல்ல வசதியான காம்பவுண்டுச் சுவருக்கிடையில் காற்றோட்டமான உறக்கத்தில் தான் இருக்கிறார் கம்பர்.

● இது மட்டுந்தானு? ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பரந்த நோக்கில் பாடிய கணியன் பூங்குன்றனாரைத் தெரியுமா? அவரும் சிவகங்கையை அடுத்த மகிபாலன்பட்டிக்காரர்தான். இந்தப் புலவர் வரிசைக்குப் பிறகு — இந்தப் பகுதியில் உரிமையுடன் பேசப்படுகிற இன்னொருவர் கண்ணதாசன். கண்ணதாசனின் ஊரும் இந்தப் பகுதியில் உள்ள கிராமமான சிறுகூடல்பட்டி தான். தங்களில் ஒரு குடும்பஸ்தர் மாதிரி கண்ணதாசன் மீது அக்கறை வைத்துள்ள சிலர் — நிறுவ முயற்சி செய்து வருவது கண்ணதாசனின் சிலையை.

● கோயில்களுக்குப் பஞ்சமே இல்லே. கிராமங்களில் கூடக் கலைநயமான கோயில்கள். திருக்கோஷ்டியூர் பெரிய கோயில். பூலோக சந்திதி, மேலோக சந்திதி என்று இரு சந்நிதிகள். பரமபதநாதரின் உட்கார்ந்த திருக்கோலத்தையும், உபேந்திர நாராயணனின் நின்ற திருக்கோலத்தையும் பார்க்கிறவர்கள் பயபக்தியுடன் கும்பிடுகிறார்கள். இந்தக் கோயில் கோபுரத்திலிருந்து தான் இராமானுஜர் அலைவருக்கும் மந்திரத்தைச் சத்தம் போட்டு உபதேசித்தார்.

இதே மாதிரி தேவகோட்டை அருகே கண்ட தேவி என்று ஒரு கிராமம். அங்கு சொர்ண மூர்த்தீஸ்வரர் கோயில். வெள்ளைக் கல்லில் நுணுக்கத்துடன் இருக்கின்றன சிற்பங்கள். ராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போன சமயம், ஜடாயு மறித்துச் சண்டையிட்ட போது, இறகுகள் வெட்டப்பட்டு விழுந்த இடம்தான் கோயில் பின்னுள்ள தீர்த்தப் பிராகாரம் என்கிறார்கள். ஜடாயுவின் இறகு சிதறி விழுந்த இடம் 'இறகு சிதறி' என்றிருந்த கிராமம் — இப்போது 'இரவுசேரி' என்று திரிந்து போயிருக்கிறது. ஜடாயு விழுந்து கிடந்த போது, ''கண்டேன் தேவியை'' என்று சொன்னதால் ஊர்ப் பெயர் கண்டதேவி என்றாயிற்றும். இப்படிப் புராணங்களைச் சாட்சிகளாய் வைத்துப் பல கோயில்கள்.

● ஏவி.எம். ஸ்டூடியோ இப்போது எங்கு இருக்கிறது என்பது சிறு பையனுக்குக் கூடத் தெரிந்த சமாசாரம். ஆனல் முதன் முதலில் இருந்தது? தேவகோட்டை ரஸ்தா வில், தேவகோட்டிற்குச் சற்று ஒதுங்கியிருக்கின்றது பழைய ஏவி.எம். ஸ்டூடியோ. உடைந்த மதிலும் நீச்சல்குளம்மாதிரி இடமுமாய்ப் பாழடைந்து கிடக்கிறது ஸ்டூடியோ. ஒருகாலத்தில் எத்தனையோ நடிகர்கள் வந்து புழங்கியிருக்கலாம். இப்போது? அங்கே துணி துவைத்து உலர்த்திக் கொண்டிருக்கிறார்கள்!


● சிவகங்கை என்றதும் — உடனடியாக வெளிவந்து தெரிகிற முகம் மீராவுடையது. மீ. ராஜேந்திரன்தான் கருங்கி மீரா. 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்' என்ற இவரது கவிதைத் தொகுதி மூலம் பரபரப்பாக அறிமுகமானவர். சிவகங்கைக் கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியர். 'அன்னம்' என்கிற நவீனப் புத்தக பதிப்பகத்தின் கௌரவ ஆலோசகர். அன்னம் இதுவரை ஏறத்தாழ 88 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது. எல்லாம் சற்று வித்தியாசமானவை; விஷய நேர்த்தியும் புத்தக அழகும் இணைந்தவை.

● சிவகங்கை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு 'விசிட்' போனேம். போதுமான படுக்கை வசதியில்லாமல் தரையிலேயே வியாதியஸ்தர்கள் படுத்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கான ஸ்பெஷலிஸ்ட் டுக்காக — மரங்களில் வரிசையாகத் தூளி கட்டித் தாய்மார்கள் காத்திருக்கிறார்கள். டாக்டர்கள் பற்றாக்குறையாம். நியமிக்கப்படுகிற டாக்டர்களும் சரியாக வருவதில்லை என்று வியாதியோடு சொல்கிறார்கள் நோயாளிகள். மாவட்டத் தலைநகரிலுள்ள ஆஸ்பத்திரியின் கதியே இப்படி!

● மாவட்டத்தலைநகராக சிவகங்கை ஆனதிலிருந்து வெளியூர்க்காரர்கள் சற்று அதிகரித்திருக்கிறார்கள்; அவர்களுக்குப் பிரச்னைகள் இருக்காதா? வெளியூர்களிலிருந்து வந்து



• தேவகோட்டை போலீஸ் குடியிருப்பு.



• சந்தன்



• அருள்பிரகாசம்






• விசாலாட்சி

• சிவகங்கை, அரசு தலைமை மருத்துவ மனையில்...



• சொர்ணலிங்கம்



• கண்டதேவி: சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவில்

சிவகங்கையில் பணிபுரியும் பெண்களுக்குச் சரியான ஹாஸ்டல் வசதி இல்லை என்று கோரஸான குரலில் சொன்னார்கள் நாம் சந்தித்த டஜன் பெண்கள். அற்புதமான முறையில் 'கலெக்டரேட் காம்ப்ளெக்ஸ்' கட்டிக் கொண்டிருக்கும் அரசு இதையும் செய்திருக்கலாமே !

● மாவட்டம் பிரிந்ததில் திருவாடானை தொகுதி எம். எல். ஏ. வான சொர்ணலிங்கத்துக்குப் பாதிப்பு. மாவட்டம் பிரிக்கப்பட்ட போது திருவாடானை தொகுதியில் ஒரு பகுதி பசும்பொன்னிலும் மற்றொரு பகுதி இராமநாதபுரத்திலும் சேர்ந்துவிட, மக்களின் பிரச்னைகளுக்காக இரண்டு மாவட்டங்களுக்கும் மாறி மாறி அலைந்து கொண்டிருக்கிறார். இரண்டு மாவட்டங்களிலும் ஒரே சமயத்தில் மீட்டிங் இருக்கிற போது பிரச்னையாகிப் போய் விடுகிறது என்கிறார் இந்த இ. கா. எம். எல். ஏ..

● நிறையக் கிராமங்களில் அரசாங்கம் வறட்சிக்கு எந்த நிவாரண நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று புகார் சொல்லிக் கொண்டிருக்கும் போது — இங்குள்ள பாகனேரி ஜனங்களிடம் ஒரு வித்தியாசம். ஊரணியைத் தாங்களாகவே தூர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் போன போது ஊரே சேர்ந்து கும்பலாக மண் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தது. ''பிரசாதம் மட்டும் தான் கொடுக்கிறோம்; ஜனங்களே தான் அவர்களாகவே வேலை செய்கிறார்கள்'' என்றார் ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவரான மு. நாராயணன்.

இப்படிச் சற்று வித்தியாசப்பட்ட ஊரி



* சண்முகம்



* வேலைக்கு வந்த வெளியூர் பெண்கள்; ஹாஸ்டல் வசதி வேண்டும்.

லும் பிரச்னைகள், ஊரை விட்டு விலகி இருக்கிற ஹரிஜனச் சேரியில். ராஜேந்திர பிரசாத் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த போது திறந்து வைத்த கிணறு தூர்ந்து போய்விட்டது. இதற்கும், நாங்கள் பிணங்களைப் புதைக்கப் போகிற சுடுகாட்டைக் கூட ஆக்கிரமித்துக் கொண்டு விட்டதற்கும் ஏதாவது நடவடிக்கை எடுக்கக் கூடாதா?'' என்கிறார் கந்தன் என்கிற சேரிவாசி.

● அடுத்தடுத்து நாம் சந்தித்த மூன்று புகார்கள்:

''வறட்சியிலே தண்ணியே இல்லாம — ஊரை விட்டு இரண்டு கி.மீ. தொலைவிலிருக்கிற நெற்புகப்பட்டி வந்து தண்ணி எடுத்துட்டுப் போக வேண்டியதிருக்குங்க'' — இது வ. சூரக்குடியைச் சேர்ந்த பழனியப்பனின் புகார்.

''62 இல் ஆரம்பிக்கப்பட்ட நூலகம்ங்க இது. நிறையப் புஸ்தகமெல்லாம் இருக்கு. ஆனா அதை அடுக்கி வைக்க அலமாரி இல்லாம எல்லாத்தையும் கீழே அடுக்கி வைச்சிருக்க வேண்டியிருக்கு. பார்த்தீங்களா? இதோடு ஊரிலுள்ள இரண்டு மூன்று பேர் இலவசமாக நூலகத்துக்குக் கொடுத்த சுமார் ஏழுநூறு புத்தகங்களும் சுமார் ஏழெட்டு ஆண்டுகளாக நூலகப் பட்டியலில் சேராமல் தனித்துக் கிடக்கின்றன. அதனால் அதை யாரும் எடுத்துப் படிக்க முடியவில்லை...'' என்று புலம்பினார் பள்ளத்தூரைச் சேர்ந்த நூலகத்தின் உறுப்பினர் ஒருவர்.

● ''ஏறத்தாழ இருபத்தஞ்சு வருஷமா இருக்கிற ஸ்கூல் இது. ஐந்நூற்றைம்பது மாண மாணவிகளும், பதினேழு ஆசிரியர்களும் இருக்கிற ஸ்கூல்லே விளையாட்டுக்கென்று தனி ஆசிரியர் கிடையாது. 78 வரை இங்கு இருந்த உடற்பயிற்சி ஆசிரியரை நிர்வாகம் சில பிரச்னைகளால் விலக்கியது. 86 வரை கேஸ் நடந்து நிர்வாகத்துக்கு தீர்ப்பு சாதகமாகத்தான் இருந்தாலும், இன்னும் ஓர் உடற்பயிற்சி ஆசிரியர் போட அனுமதி இல்லை. இத்தனைக்கும் நானூற்றைம்பது மாணவர்களுக்கு மேல் இருந்தால் இரண்டு உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று விதி இருக்கிறது!'' — என்றவர் தேவகோட்டையை அடுத்த சண்முகநாதபுரம் பி.எஸ்.எஸ். ஹைஸ்கூல் தலைமை ஆசிரியரான எஸ். பி. சண்முகம்.

● காரைக்குடியைச் சேர்ந்த விசாலாட்சியை நாம் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது, அவருக்குத்தான் எத்தனை "ஆவேசம்?" நகரத்தார்தான் பல கோவில்கள் கட்டினார்கள். ஏராளமான கல்லூரிகளை அமைத்தார்கள். இன்னும் எவ்வளவோ சிறப்புக்களுக்குக் காரணமாக இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு? எத்தனை பேர் கஷ்டப்படுகிறோம் தெரியுமா? பலர் தங்கள் வீடுகளிலுள்ள பொருட்களை விற்கிற அளவுக்குப் போயிருக்கிறார்கள். மதுரை கோயில் தக்கார் வி. என். சிதம்பரம் கூட, 'நகரத்தாரைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்'' என்றிருக்கிறார். இதை அவசியம் செய்ய வேண்டும். இல்லையென்றால் எம். ஏ. அளவுக்குப் படித்து, டைப், ஷார்ட் ஹேண்ட் எல்லாம் தெரிந்திருக்கிற என்னைப் போன்றவர்கள் வெறும் முந்நூறு ரூபாய் சம்பள வேலைக்குப் போக நேர்ந்திருக்குமா?'' என்று திரும்பவும் ஆவேசப்பட்டார் விசாலாட்சி.

● கிறிஸ்தவர்களும், ஹரிஜனங்களுமாய் இருக்கிற 'பனிப்புலான் வயல்' என்கிற கிராமம் தத்து எடுக்கப்பட்டிருக்கிறது; நிறையப் பேர் அரசாங்க லோன் வாங்க வகை செய்யப்பட்டிருக்கிறது; கிராமத்துக் குழந்தைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். சிறு தொழில்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. இதெல்லாம் அரசாங்கமோ, பேங்கோ செய்திருக்கிறதா என்று கேட்கலாம். ஓய். அருள்பிரகாசம் என்ற தேவகோட்டை நகரத்தார் பள்ளி ஆசிரியரே தனியாக இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார். தமது சக ஆசிரியரான நாராயணனோடு சேர்ந்து தொழு நோய்த் தடுப்பு இயக்கம் வேறு ஆரம்பித்துச் சில முகாம்களை நடத்தியிருக்கிறார். இந்த விதமான சமூக சேவைக்காக 81 லும், 84 லும் அவார்டு கூட வாங்கியிருக்கிறார்.

● பசும்பொன் மாவட்டத்தைச் சேர்ந்த சீனிவாசகம் என்பவரின் நிலை மிகவும் பரிதாபம். இவர் 62 இல் சுகாதாரத் துப்புரவு மேற்பார்வையாளராக வேலைக்குச் சேர்ந்தார். இவர் கடைசியாக வேலை பார்த்தது

காமராஜர் மாவட்டத்திலுள்ள முகவூர் பேரூராட்சியில். இவர் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது அப்பேரூராட்சி இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கப்பட்டது. நியாயமாக இரண்டில் ஓரிடத்தில் இவருக்கு வேலை கொடுத்திருக்க வேண்டுமல்லவா! அதுதான் இல்லை. நிர்க்கதியாக்கி விட்டார்கள். காமராஜர் மாவட்டக் கலெக்டரைச் சந்தித்துக் கேட்டால், "நீங்கள் அதிக வருடங்கள் வேலை பார்த்தது பசும்பொன் மாவட்டத்தில்தான். எனவே, அந்தக் கலெக்டரிடம் போய்க் கேளுங்கள்" என்கிறாராம். இங்கு வந்து கேட்டால், நீங்கள் கடைசியாக வேலை பார்த்தது காமராஜர் மாவட்டத்தில்தான். அவர்கள்தான் வேலை தர வேண்டும்" என்கிறார்களாம். இதுகுறித்துப் பஞ்சாயத்து இயக்குனர் அளவுக்குப் புகார் கொடுத்தும் பயனில்லையாம். எப்படி நமது அரசாங்கம் ஏழைகளின் வயிற்றிலடிக்கிறது பார்த்தீர்களா?

● கடைசியில் காவல்துறை. பிரச்னைகளைப் பலர் முறையிடுகிற காவல்துறையினருக்கும் பிரச்னைகள் இருக்காதா? தேவகோட்டையிலுள்ள போலீஸ் குவார்ட்டர்ஸ் போன போது, நிலைமை பரிதாபமாகத்தானிருந்தது. உடைந்த ஓடுகள்; இற்றுப் போன, தள்ளினால் விழுந்து விடுகிற அளவுக்குப் பலஹீனமான கதவுகள்; கரையான் அரித்திருக்கிற ஜன்னல்கள் என்று குவார்ட்டர்ஸ் மோசமாகக் காட்சியளித்தது; 57 இல் கட்டியதாம். காவல் துறையினரின் வீடுகளை இப்படிப் பாதுகாப்பில்லாமல் இருப்பது குறித்து விசாரிக்க தேவகோட்டை தாலுகா போலீஸ் ஸ்டேஷன் போனோம். இன்ஸ்பெக்டர் அய்யலுசாமியைப் பார்த்தோம்; பிரச்னைகளைச் சொன்னோம். "பிரச்னையைச் சொல்ல நீ யாருய்யா?" என்றார். அடையாளக் கார்டுகளைக் காண்பித்தோம். இருந்தும் ஆக்ரோஷமாகத் தொடர்ந்தார்: "எங்கேயும் போய் விஷயத்தைச் சொல்லு போ. உன் பத்திரிகைப் புத்தியை என்கிட்டே காட்டாதே" என்றார். போலீஸாரின் பிரச்னையைக் கவனத்துக்குக் கொண்டு போனதற்குத்தான் எவ்வளவு மரியாதை? என்ன பொறுப்புணர்ச்சி! போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டுமென்றாலே — கோவிலுக்குப் போகிற மாதிரி சூடம் கொளுத்தி நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கும்பிட்டுவிட்டுத்தான் எந்தப் பிரச்னையையும் சொல்ல வேண்டும் போலிருக்கிறது! என்ன செய்ய? "உங்கள் நண்பன்" என்று விளம்பரப்படுத்துபவர்களாயிற்றே!

● இறுதியாகக் காரைக்குடிக்கு அருகில் உள்ள 'தமிழ்நாடு கெமிகல்ஸ்' என்னும் அரசு நிறுவனம் ஆண்டுதோறும் நல்ல லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்த நிலையிலும் அதை ஏன் தனியாருக்கு விற்றார்கள் என்பது ஆச்சரியமான விஷயம் மட்டுமல்ல; அதிர்ச்சியான விஷயமும் கூட!

— நமது நிருபர்கள்

ஓர் அதிசயக் கண்காட்சி



அட்ஜஸ்ட்டபிள் துடைப்பம்

● ஒரு சாதாரணக் குடை. அதை ஏழு அங்குல நீளத்துக்கு மடக்கி, பாக்கெட்டில் போட்டுக் கொண்டு போய் விடலாம். (விலை ரூ. 60).

● ஓர் அடிக்கு இரண்டு அடியில் தடிமனான ஃபைபர் கிளாஸ் பெட்டி. அதைத் திறந்து, உள்ளே இருக்கும் சமாசாரங்களைப் பொருத்தினால் சின்னதாய் ஒரு டைனிங் டேபிள். அதற்குண்டான நான்கு குட்டி நாற்காலிகளையும் அந்தப் பெட்டிக்குள்ளேயே வைக்க முடியும். பிக்னிக் போகும் போது மிகவும் உபயோகமாய் இருக்கும் (விலை ரூ. 900).


● இரண்டடியில் ஓர் அலுமினியக் குழாய். ஒரு ஸ்குரூவைத் திருகினால் அதனுள்ளே இருந்து இன்னோர் குழாய் வெளியே நீட்டிக் கொண்டு வருகிறது. நுனியில் பிளாஸ்டிக் இழைகள். நீளத்தை அட்ஜஸ்ட் செய்து, துடைப்பமாகவோ, ஒட்டடைக் குச்சியாகவோ பயன்படுத்தலாம். (விலை ரூ. 45).

● ஃபைபர் கிளாஸில் செய்யப்பட்ட பூந்தொட்டிகள். மிக மிக லேசாய் உள்ளன. நீண்ட நாள் உழைப்புக்கு 'கியாரண்டி' தருகிறார்கள். (வகைக்கேற்ப விலை ரூ. 25—40).

● வட்டமான உலோகத் தட்டு. இதைப் பால் பாத்திரத்தில் போட்டு விட்டால், பால் பொங்காது. (விலை ரூ. 6).

● டெலிவிஷனில் பார்க்கும் படத்தை இரு மடங்காக்கிக் காட்டும் பூதக் கண்ணாடி. வருகிறவர்கள் வாயைத் திறந்து கொண்டு டி. வி. பார்க்கிறார்கள். (விலை ரூ. 950).

● மென்மையான சுவையூட்டப்பட்ட பல் குத்தும் குச்சிகள். பல் குத்த ஆரம்பித்தால், கீழே போடவே மனமில்லாமல் அப்படி ஒரு சுகம். (ஆனால் பற்களுக்கு இது கெடுதலில்லையோ?)



● வழக்கம் போலவே காய்கறி நறுக்க உதவும் சாதனங்கள்.

● எண்ணெய்ப் பிசுக்குள்ள பாத்திரங்களைத் துலக்க மிக வசதியான பிரஷ்.

● பிரச்னையேதுமில்லாத, பல வழி உபயோகக் கிடுக்கி.

இவை எல்லாவற்றுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. அது என்ன? இவற்றில் ஒன்று கூட இன்னும் தமிழக மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வராததுதான்.

அண்மையில் பம்பாயைச் சேர்ந்த 'இன்ட்ரொடக்ஷன்ஸ்' நிறுவனத்தின் 'பாலிகா' என்பவர் சென்னையில் இந்தப் புதுமையான பொருள்களை அறிமுகப்படுத்தும் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். மக்களுக்கு அறிமுகப்படுத்துவதைவிட, இந்தப் புதுமையான பொருள்களை விற்பனையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதுதான் இக்கண்காட்சியின் நோக்கமாம். இருந்தாலும் பல ஸ்டால்களில் விற்பனையும் நடந்தது. கண்காட்சியின் ஹாட் சேல்ஸ் அட்ஜஸ்ட்டபிள் துடைப்பம்தான்!

மிஸ்டர் பாலிகா, அவரது மனைவி இருவருடனும் பேசிக் கொண்டிருந்த போது, தெரிந்து கொண்ட விஷயம்: இந்தியாவின் பல்வேறு நகரங்களிலும் இது போன்ற அறிமுகக் கண்காட்சிகள் நடத்துவதுதான் 'இன்ட்ரொடக்ஷன்ஸ்' நிறுவனத்தின் பணியாம்.

தகவல்: மௌஷ்மி

* உமார்த்தி, கோவை.

? ஆண்டுதோறும் நடக்கும் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி பரிசிலளிப்பின் போது தங்களைக் கவரும் அம்சம் என்ன?

! நாள்பட்ட, பண்பட்ட எழுத்தாளர்கள் போட்டியில் கலந்து கொள்ளக் கூச்சப்படுகிறார்கள் என்பது ஒன்று; மற்றது, பரிசு பெறுகின்ற, பிரசுரத்துக்கு ஏற்கப்பட்ட கதைகளுக்காகச் சன்மானம் பெறுகின்ற அறிமுக எழுத்தாளர்கள் அதிகரித்து வருகிறார்கள் என்பது. இந்தத் தடவை (1987) அறிமுக எழுத்தாளர்களின் எண்ணிக்கை ஆறு!

* மு. மதிவாணன், அரூர்.

? டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா தமிழில் மொழி பெயர்த்துப் பாடியுள்ள தியாகராஜ கீர்த்தனைகளைக் கேட்டீர்களா?

! எனக்கு அவருடைய இசை ஆற்றலில் பெருமதிப்பு உண்டு. அவருடைய நல்லெண்ணத்தையும் நான் உணர்கிறேன். ஆனால் என்னதான் சிறப்பாக மொழிபெயர்த்தாலும் கூட, ஆதி சாகித்யகர்த்தாவின் உணர்ச்சிகளையும் நெகிழ்ச்சிகளையும் அப்படியே கொண்டு வர முடியாது. பாடும் போது பாடகருக்கும் சரி, கேட்பவருக்கும் சரி, அதே அளவு மன லயிப்பு உண்டாகாது. இதற்கு முன் நடந்த சில மொழி பெயர்ப்பு முயற்சிகள் நிலைத்து நிற்காமல் தோல்வியையே தழுவியுள்ளன. அபயாம்பிகாவின் இந்த மொழி பெயர்ப்புக்கள் காலம் கடந்து நின்று பலரால் பாடப் பெறுமானால்தான் வெற்றி பெற்றதாகக் கொள்ள முடியும். தமிழில் மும்மூர்த்திகளுக்கு முற்பட்ட காலம் தொட்டு சமீப காலம் வரை எத்தனையோ அற்புத சாகித்தியங்களுக்குக் குறைவே இல்லாத போது மொழி பெயர்த்துப் பாட வேண்டிய 'அவசியம்' என்ன நேர்ந்தது என்பதுதான் புரியவில்லை.

* யு. ரமேஷ், குடியாத்தம்.

? ராஜீவிடம் திருமதி நந்தா வாத்திமெண்டிஸ் மன்னிப்புக் கேட்டிருக்கிறாரே?

! ராஜீவைத் தாக்கியவனின் தாய் என்ற முறையில் அவர் கேட்ட மன்னிப்பு, இந்திய மக்களின் மனங்களில் சுட்ட புண்ணுக்குப் போடப்பட்ட களிம்பு. அது போக, தொலைக் காட்சி நிருபரிடம் ஓர் ஈழத் தமிழ்ப் பெண்மணி, விஜித ரோகண விஜயமுனியின் அடாத செயலைக் கண்டிக்கும்போது, அவனை 'அசடன்' என்று அந்த வார்த்தையில் அழுத்தம் கொடுத்துச் சொன்ன பாணி ரசிக்கும்படி இருந்தது.

* சு. சக்திவேலு, செம்பியம்.

? ஒரு தலைவனின் காலில் தொண்டன் விழுந்து வணங்குவது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

! அதுதான் அடுத்த கேள்வியிலேயே பதிலையும் கூறிவிட்டீர்களே, நாற்பது ஆண்டு சுதந்திரத்தில் நாம் கண்ட பலன்களில் ஒன்று என்று! தொண்டர்கள் மட்டுமின்றி ஆட்சியாளர் கால்களில் அதிகாரிகளே விழுந்து வணங்குகிறார்கள்! இவர்களுக்கெல்லாம் சுயமரியாதையை ஊட்டப் பெரியார்தான் மறுபிறவி எடுத்து வர வேண்டும்!

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? வீர மண் கலசங்களின் ஊர்வலம் தேவையா?

வீர மண் கலசங்களின் ஊர்வலம் தேவையா?

! இந்த நாடு முழுமையையுமே புனிதமாகக் கருதியவர்கள், காந்திஜியும் அவர் காலத்திய மற்ற தலைவர்களும். இப்போது இங்குமங்குமாய்ச் சில இடங்களில் மட்டுமே புனிதம் இருப்பது போல் மண் சேகரிக்கப்படுவது ஒருபுறமிருக்க, அந்தந்த இடங்களில் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிய தலைவர்களின் அரிய கொள்கைகளைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு, மண்ணை மட்டும் திரட்டி ஊர்வலம் விட்டுக் காட்சிப் பொருளாக்குவதனால் என்ன பலன்? மக்களின் வரிப்பணத்தில் சிலருக்குப் 'பப்ளிசிடி' கிடைத்தது மட்டுமே லாபம்.

* பி. கே. மூர்த்தி, மதுரை. *

? இந்த வருட சமாதான நோபெல் பரிசு ராஜீவ் காந்திக்கா, அல்லது ஜெயவர்த்தனவுக்கா?

! இருவருக்கும் இல்லை! ராஜீவ் காந்தியின் (கடற்கரை) வெற்றி விழாச் சொற்பொழிவின் அடிப்படையில் பார்த்தால் எம். ஜி. ஆருக்குத்தான்!

* மு. ஞானசிராமன், தேரழுந்தூர்.

? கல்லூரி ஆசிரியர்களின் வேலை நிறுத்தம்

நியாயமானதா?

! அவர்களின் கோரிக்கைகளில் நியாயம் இருக்கலாம்; ஆனால் வேலை நிறுத்தத்தில் நியாயம் இல்லை. எந்த வேலை நிறுத்தமுமே நாட்டு நலனுக்கு ஊறு விளைவிப்பதுதான். இதை உணர்த்தி, எடுத்துக்காட்டாக விளங்க வேண்டியவர்கள் நல்லாசிரியப் பெரு மக்கள்.

* ஆர். கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்.

? தமிழ்நாட்டில் எத்தனை வாரியங்கள் இருக்கின்றன?

! உஷ்! உரக்கக் கேட்காதீர்கள்! அதைக் கணக்கெடுக்க ஒரு வாரியம் அமைத்து விடுவார்கள்!

* எஸ். பரமசிவம், சீர்காழி.

? உலக ஜூனியர் செஸ் சாம்பியன் ஆனந்த் திறமை பற்றிச் சில வரிகள்?



* தமிழில் திவாகையர்!

* பாரதத்துக்கு பெருமை!

* நோபெல் பரிசு!

* காவிரிப் பிரச்சனைக் கதை?

! அதைப் பற்றி நான் எழுத ஆரம்பித்தால் உடனே 'செக்' என்பீர்கள்! நான் நழுவினால் 'செக்மேட்' என்பீர்கள்! காரணம், எனக்கு செஸ் பற்றி ஒன்றும் தெரியாது! பொதுவாக, மூளைக்கு வேலை கொடுக்கும் விளையாட்டே எனக்குப் பிடிக்காது! எனவே, ஆனந்தின் ஆற்றலைப் பற்றி விமர்சிக்காமல் பாரதத்துக்குப் பெருமை தேடித் தந்த அவரை வாழ்த்துவதுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

* மு. சிவஞானமுருகன், ஸ்ரீவைகுண்டம்.

? இதை நீங்கள் ஒரு 'செண்டிமெண்ட்' என்று நினைத்தாலும் சரி, வாஸந்தி 'மௌனப் புயல்' எழுதினார்; பஞ்சாப் உடன்படிக்கை ஏற்பட்டது. 'நிற்க நிழல் வேண்டும்' எழுத ஆரம்பித்தார்; இலங்கை — இந்தியா உடன்படிக்கை கையெழுத்தாயிற்று! அடுத்து காவிரிப் பிரச்னையை வைத்துத் தொடர்கதை எழுதுவாரா, ஸார்?

! இந்த மாதிரி இரண்டுங்கெட்டான் உடன்படிக்கைகள் ஏற்பட்டு, பிரச்னைகள் தீராமல் இழுத்துப் பறிப்பதைப் பார்த்தால், அவர் காவிரிப் பிரச்னை பற்றித் தொடர் கதை எழுதாமல் இருப்பதே நல்லது!

* ஆர். மைதீன் பாட்சா, வல்லம்.

? ஜனநாயகம் எப்போது கேலிக் கூத்தாக மாறுகிறது?

! இன்றே, இங்கேயே, இப்போதே!

* லலிதா ஸ்ரீநிவாசன், சென்னை — 4.

? டி. வி. யி'ல் வாரம் தோறும் வரும் பரமார்த்த குரு நிகழ்ச்சியை ரசிப்பீர்களா?

! பல ஆயிரம் ரூபாய் கொடுத்து நான் வாங்கிய டி. வி. யை நானே அடித்து உடைத்து விடுவதை நான் விரும்பவில்லை. அதனால் அந்த நிகழ்ச்சியைப் பார்ப்பதில்லை.

* பி. தனபால், காரைக்கால்.


? சுதந்திர இந்தியாவின் நாற்பதாண்டு காலச் சாதனை என்று தாங்கள் கருதுவது?

! இன்னமும் ஜனநாயகநாடாகவே இருந்து வருவதுதான்!

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

பி. கே. மூர்த்தி,
1/46, நேரு நகர்,
மதுரை — 16.

ரோபோ விட்ட குத்து!



அண்ணா ஆதர்ஷ் பெண்கள் பள்ளியில் நடந்த கண்காட்சியின் ஸ்பெஷல் அட்ராக்ஷன் அந்தப் பள்ளியின் மாணவிகள் வடிவமைத்த ரோபோதான். அதனிடம் கண்காட்சிக்கு வருகை தந்தவர்கள் கேட்ட சில கேள்விகளும், அவற்றுக்கு ரோபோ அளித்த பதில்களும்:

''ரோபோ, உன் பெயர் என்ன?''

''CXS: 8146.''

''கட்டளைகளுக்கு அடி பணிய உனக்கு 'மூட்' இருக்கிறதா?''

''ஓ! எஸ்.''

''வணக்கம் சொல்.''

''வணக்கம்!''—ரோபோ கை கூப்புகிறது—குரலெழுப்பியபடி!

''ரோபோ! நட பார்க்கலாம்!''

ரோபோ இரண்டடி முன்னால் நடந்து பிறகு, தன் ஒரிஜினல் நிலைக்கு வருகிறது.

''நடனம் ஆடு பார்க்கலாம்.''

ரோபோ கால்களையும், கைகளையும் ஆட்டிச் சில அபிநயங்களைப் பிடிக்கிறது.

இதுபோன்ற இன்னும் சில கட்டளைகளுக்கும் ரோபோ அடிபணிகிறது.

பார்த்தவர்களையெல்லாம் ஆச்சரியப்படுத்தியது இந்த ரோபோ.

குறும்புக்காரர் ஒருவர், ''ரோபோ! நீ பசித்தால் என்ன சாப்பிடுவாய்?'' என்று கேட்க, ''ம்..., நட், போல்ட் சாப்பிடுவேன்; ஆயில் குடிப்பேன், தாகம் எடுத்தால்!'' என்கிறது.

''கூல் டிரிங்க்ஸ் குடிக்க மாட்டாயா?''

''அதற்கும் ஸ்பெஷலாய்ப் புரோகிராம் செய்து வைத்திருக்கிறோம்'' என்று சொன்ன ஒரு மாணவி, சில ஸ்விட்சுகளைத் தட்டிவிட்டு, ஸ்டிரா போட்டு, ஒரு குளிர்பான பாட்டிலை நீட்டி, ஸ்டிராவின் மறுமுனையை ரோபோவின் வாயில் பொருத்த 'ஜிவ்'வென பாட்டிலின் குளிர்பான மட்டம் குறைகிறது! பார்ப்பவர் கண்கள் வியப்பில் விரிகின்றன.

''வாவ்!''

''பத்தாங் கிளாஸ் படிக்கிற நீங்களா இதை வடிவமைத்தீர்கள்?'' என்று ஆச்சரியமாய்க் கேட்டால், ''இந்த ரோபோவை உருவாக்க உதவினவர் எங்கள் கம்ப்யூட்டர் கோ – ஆர்டினேட்டிங் மிஸ்ஸான நஸ்ரீன் பானுதான்'' என்று சிரிக்கிறார்கள் ஹிரண், மோனக்ஷ, ஜோதி, மர்லா, மினிஷா ஆகிய ஐந்து பேரும். மிஸ். நஸ்ரீனைப் பார்த்தால் அவரும் நமுட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார்.

''அவர்கள் சிரிப்புக்கு என்ன காரணம்?''

CXS 8146 என்பது நிஜ ரோபோ அல்ல! சக மாணவி ஒருத்தியைச் சுற்றி அட்டையால் மூடி, ஸ்குரூக்கள், பல்புகள், ஸ்பிரிங் (தலை ஆண்டெனாவுக்கு) போன்றவற்றை உபயோகித்து உருவாக்கியதுதான். ரகசியத்தை வெளியில் போட்டு உடைக்காமல், கண்காட்சியில் நிறுத்தி வைத்துப் பரபரப்பை ஏற்படுத்தி விட்டார்கள் இந்த மாணவிகள்.

கண்காட்சி முடிந்து ஐந்து மாணவிகளும் தம் அனுபவங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது ரோபோ, ஒருத்தியின் முகத்தில் ஒரு குத்து விட்டது. எல்லோரும் திகைத்து நிற்க, ரோபோ (பெண்) சொன்னாள்: ''இது இந்த ரோபோ தானே தயாரித்த லேட்டஸ்ட் புரோகிராம்!''

அனைவரும் சிரித்து விட்டனர்.

— எல். லட்சுமி

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)


Godrej
Marvel
LLOUS PERFUME
மார்வல்–இதம் தரும் தன்மை
காஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.
ஸ்பன் ஸில்க் போன்ற தன்மை. காஞ்சீவரம் பட்டுப் போன்ற மென்மை. தேங்காய் எண்ணெயின் இயற்கையான நற்குணங்கள் தரும் நறுமணத்தின் செழுமை.
மற்ற சோப்புகளை விட
3 மடங்கு அதிகம் தேங்காய் எண்ணெய் கொண்டது.

Registered as a Newspaper in Sri Lanka

